# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

# திருநெல்வேலி

# MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

# TIRUNELVELI

## தொலைநெறித் தொடர்கல்வி இயக்ககம்

## DIRECTORATE DISTANCE CONTINUING EDUCATION

## TIRUNELVELI

# பயன்பாட்டுத் தமிழ்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

# பயன்பாட்டுத் தமிழ்

**அலகு - 1**

எழுத்தின் வகைகள் - மொழி முதல் இடைம ற்றும் இறுதி எழுத்துக்கள் - ஒற்று மிகும் மிகா இடங்கள் - உடம்படுமெய்கள் - சொல்லின் பொது இலக்கணம் - சொல்லின் வகைகள் - பெயர்ச்சொல்லின் வகைகள் ஆகுபெயர். வேற்றுமைகள், வினைச்சொல்லின் வகைகள். இடைச்சொல், உரிச்செல்

**அலகு - 2**

அகப்பொருள் - புறப்பொருள் - அகத்திணைக்குரிய புறத்திணைகள் - யாப்பு - யாப்பின் உறுப்புகள் - பாவகைகள் - பாவினங்கள்.

**அலகு - 3**

அணி இலக்கணம் - உவமை அணி - உருவக அணி - வேற்றுமை அணி - வேற்றுப் பொருள் வைப்பணி - சொற்பொருள் பின்வரும்நிலையணி - தற்குறிப்பேற்ற அணி - வஞ்சப்புகழ்ச்சி அணி - பிறிது மொழிதல் அணி - சிலேடை அணி.

**அலகு - 4**

ஓர் எழுத்து ஒருமொழி - இலக்கணக் குறிப்புகள் - சொல் உருவாக்கம் - வாக்கிய வகைகள் - தொகைநிலைத் தொடர்கள் - தொகா நிலைத் தொடர்கள் - நிறுத்தற்குறிகள்: காற்புள்ளி - அரைப்புள்ளி - முக்காற் புள்ளி - முற்றுப்புள்ளி - வினாக்குறி - உணர்ச்சிக்குறி - இரட்டை மேற்கோள் குறி - ஒற்றை மேற்கோள் குறி.

**அலகு - 5**

எழுத்துக்கள் பிறக்கும் ஒலி உறுப்புகளைக் கூறி எழுத்துக்களை முறையாக ஒலிப்பதற்குப் பயிற்சி கொடுத்தல் - தொடர்களை ஏற்ற இறக்கங்களோடு வாசிப்பதற்குப் பயிற்சி கொடுத்தல் - பிழை இன்றி எழுதுவதற்குப் பயிற்சி கொடுத்தல் - பிறமொழிச் சொற்கள் கலப்பின்றிப் பேசவும் எழுதவும் பயிற்சி கொடுத்தல் - சமூக மற்றம் சமூக வளைத்தளங்களில் தமிழ்மொழியின் பயன்பாட்டுத்திறன் அறிதல் - கடிதங்கள் - கட்டுரைகள் - கவிதைகள் - செய்திக்குறிப்புகள் - அழைப்பிதழ்கள் எழுத பயிற்சி கொடுத்தல்

**பாடநூல்**

1. முனைவர் ச.பர்வதகிருஷ்ணம்மாள் - “நற்றமிழ் இலக்கணம்”
தாமரை வெளியீடு,
சென்னை.

**பார்வை நூல்**

| | |
|---|---|
| 1. மருதூர் அரங்கராசன் | தவறின்றித் தமிழ் எழுத<br>ஐந்திணைப் பதிப்பகம்,<br>சென்னை. |
| 2. கா.கோ. வேங்கடராமன், | இலக்கண வழிகாட்டி,<br>கலையக வெளியீடு,<br>சென்னை. |
| 3. க.இராமச்சந்திரன், | இனிய தமிழில் எளிய இலக்கணம்,<br>குமரன் பதிப்பகம்,<br>சென்னை. |
| 4. முனைவர் த.கோடப்பிள்ளை, | எளிமைத் தமிழ் இலக்கணம்,<br>கோடப்பிள்ளை அறக்கட்டளை,<br>திருச்சி. |

# அலகு - 1

## எழுத்தின் வகைகள்

**தமிழ் இலக்கணம்**

**இலக்கணம் ஐந்து வகைப்படும்**

1. எழுத்திலக்கணம்
2. சொல்லிலக்கணம்
3. பொருளிலக்கணம்
4. யாப்பிலக்கணம்
5. அணியிலக்கணம்

**எழுத்தின் வகைகள்**

**எழுத்துக்கள் இரண்டு வகைப்படும்**

1. உயிரெழுத்துகள்
2. சார்பெழுத்துகள்

**முதலெழுத்துகளின் வகைகள்**

**முதலெழுத்துக்கள் இரண்டு வகைப்படும்**

1. உயிரெழுத்துகள
2. மெய்யெழுத்துகள்

**உயிரெழுத்துகளின் வகைகள்**

**உயிரெழுத்துகள் இரண்டு வகைப்படும்**

1. குற்றெழுத்துகள் (அ, இ, உ, எ, ஒ)
2. நெட்டெழுத்துகள் (ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ)

**மெய்யெழுத்துகளின் வகைகள்**

**மெய்யெழுத்துகள் மூன்று வகைப்படும்**

1. வல்லினம் (க், ச், ட், த், ப், ற்)
2. மெல்லினம் (ங், ஞ், ண், ந், ம், ன்)
3. இடையினம் (ய், ர், ல், வ், ழ், ள்)

**ஆய்த எழுத்து**

முப்புள்ளி, முப்பாற்புள்ளி, தனிநிலை, முற்றாய்தம் ஆகிய பெயர்களாலும் அழைக்கப்படுகிறது.

**சார்பெழுத்து அதன் வகைகள்**

முதல் எழுத்துக்களாகிய உயிர் எழுத்துக்களையும், மெய்யெழுத்துகளையும் சார்ந்து இயங்கும் எழுத்துகள் சார்பெழுத்துகள் எனப்படும். சார்பெழுத்து பத்து வகைப்படும்.

1. உயிர்மெய்
2. ஆய்தம்
3. உயிரளபெடை
4. ஒற்றளபெடை
5. குற்றியலுகரம்
6. குற்றியலிகரம்
7. ஐகாரக்குறுக்கம்
8. ஔகாரக்குறுக்கம்
9. மகரக்குறுக்கம்
10. ஆய்தக்குறுக்கம்

"உயிர்மெய் ஆய்தம் உயிரள பொற்றள
ப∴கிய இஉஐ ஔ ம∴கான்
தனிநிலை பத்தும் சார்பெழுத்தாகும்"

**நன்னூல்**

1. **எழுத்துகள்**

முதலெழுத்துகள் (30)

சார்பெழுத்துகள் (10)

உயிரெழுத்துகள் (12)

மெய்யெழுத்துகள் (18)

உயிர்க்குற்றெழுத்துகள் (5) (அ, இ, உ, எ, ஒ)

உயிர்நெட்டெழுத்துகள் (7) (ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ)

வல்லின மெய்யெழுத்துகள் (6) (க், ச், ட், த், ப், ற்)

மெல்லின மெய்யெழுத்துகள் (6) (ங், ஞ், ண், ந், ம், ன்)

இடையின மெய்யெழுத்துகள் (6) (ய், ர், ல், வ், ழ், ள்)

**அளபெடை**

"அளபெடை" என்பதற்கு "நீண்டு ஒலித்தல்" என்று பொருள். செய்யுளில் ஓசை குறையும் போது ஒரு சொல்லின் முதலிலும், இடையிலும், இறுதியிலும் நிற்கும்

நெட்டெழுத்துகள் ஏழும் தமக்குரிய இரண்டு மாத்திரையிலிருந்து நீண்டு ஒலிப்பதே அளபெடை எனப்படும்.

அளவு ⇒ மாத்திரை எடை ⇒ எடுத்தல் என்பது பொருள்

எழுத்தின் மாத்திரை அளவில் நீட்டி ஒலித்தல்

❖ **மாத்திரை அளவு**

உயிர்க்குறில், உயிர்மெய்க்குறில் - ஒன்று

உயிர் நெடில், உயிர்மெய்நெடில் - இரண்டு

மெய், ஆய்தம் - மூன்று

உயிரளபெடை - நான்கு

ஒற்றளபெடை - ஐந்து

❖ **அளபெடையின் வகைகள்**

**அளபெடை இரண்டு வகைப்படும்.**

1. உயிரளபெடை
2. ஒற்றளபெடை

**1. உயிரளபெடை**

உயிர் + அளபெடை = உயிரளபெடை செய்யுளில் ஓசை குறையும் போது அந்த ஓசையை நிறைவு செய்ய உயிர்நெட்டெழுத்துகள் ஏழும் (ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ) அளபெடுக்கும் அவ்வாறு அளபெடுக்கும் போது அளபெடுத்தமையை அறிய நெட்டெழுத்துகளுக்கு இனமான குற்றெழுத்துகள் அவற்றின் பக்கத்தில் எழுதப்படும்.

**உயிரளபெடையின் வகைகள்**

**உயிரளபெடை மூன்று வகைப்படும்.**

I. செய்யுளிசையளபெடை (அல்லது) இசைநிறையளபெடை

II. இன்னிசையளபெடை

III. சொல்லிசையளபெடை

**I. செய்யுளிசையளபெடை**

செய்யுளில் ஓசையை நிறைவு செய்தற்பொருட்டு, சொல்லின் முதல், இடை, கடையிலுள்ள உயிர் நெட்டெழுத ்துகள் அளபெடுத்து வருவதைச்

செய்யுளிசையளபெடை என்பர். இதற்கு இசை நிறையளபெடை என்ற வேறு பெயரும் உண்டு.

**எ.கா**

**“ஏரின் உழாஅர் உழவர் பயலென்னும்**

**வாவுாரி வளங்குன்றிக் கால்”**

இக்குறட்பாவில் “உழாஅர்” என்னும் சொல் அளபெடுத்து வந்துள்ளது. உழார் என்பது இயல்பான சொல்

**(எ.கா)** **“கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை**

**விடா அர் விழையும் உலகு”**

இக்குறட்பாவில் கெடா என்பது கெடாஅ என இறுதியிலும், விடா என்பது விடாஅர் என இடையிலும் அளபெடுத்துவந்துள்ளது. மேலும் சில

**எ.கா**

1) உழாஅர் 2) படாஅர் 3) தொழூஉம் 4) தூஉ 5) தருஉம் 6) ஆஅதும் 7) ஓஒதல் 8) தொழாஅன் 9) உறாஅமை 10) பெறாஅ

**அளபெடை**

உறாஅமை – செய்யுளிசை அளபெடை

**II. இன்னிசையளபெடை**

செய்யுளில் ஓசை குறையாத பொழுதும், செவிக்கு இனிய ஓசையைத் தரும் பொருட்டு உயிர்க்குறில் நெடிலாகி, மேலும் அளபெடுப்பது இன்னிசையளபெடை ஆகும்.

**எ.கா**

**“கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மாற்றாங்கே**

**எடுப்பதூஉம் எல்லாம் மழை”**

கெடுப்பதும், எடுப்பதும் என்று ஒசை குறையாத இடத்திலும் இனிய ஒசை தருவதற்காகக் குறில் நெடிலாக மாறி அளபெடுப்பது இன்னிசையளபெடை எனப்படும். மேலும் சில எ.கா.

1) உள்ளதூஉம்

2) அதனினூஉங்கு

## III. சொல்லிசையளபெடை

செய்யுளில் ஓசை குன்றாத பொழுதும், பெயர்ச்சொல் வினையெச்சப் பொருளைத் தருவதற்காக அளபெடுப்பது சொல்லிசை அளபெடை எனப்படும்.

**எ.கா**

**குடிதழிஇக் கோலோச்சும் மாநில மன்னன்**

**அடிதழிஇ நிற்கும் உலகு.**

இக்குறட்பாவில் தழி, என்றிருப்பினும் செய்யுளின் ஓசை குறைவதில்லை "தழீ" என்பது தழுவுதல் எனப் பொருள் தரும்.

பெயர்ச்சொல்லாகும் அச்சொல் "தழ்இ" என அளபெடுத்தால் "தழுவி" என வினையெச்சச் சொல்லாயிற்று.

**"இசைகெடின் மொழிமுதல் இடைகடை நிலை நெடில்**

**அளபெடும் அவற்றவற் நினக்குறள் குறியே" நன்னூல் - 91**

**அளபெடை**

1. எழீஇ - சொல்லிசை அளபெடை
2. கடாஅ யானை, சாஅய் தோள் - இசைநிறை அளபெடைகள்
3. அதனினூஉங்கு - இன்னிசை அளபெடை

**அளபெடை**

1. ஓரீஇ, தழீஇ - சொல்லிசை அளபெடைகள்
2. தழீஇக்கொள்ள - சொல்லிசை அளபெடை
3. உறீஇ - சொல்லிசை அளபெடை
4. தாங்குறூஉம், வளர்க்குறூஉம் - இன்னிசை அளபெடைகள்
5. செய்கோ - 'ஓ' காரம் அசை நிலை
6. ஞான்றே - 'ஏ' காரம் அசை நிலை
7. தானே - ஏகாரம் பிரிநிலை
8. கள்வனோ - ஓகாரம் பிரிநிலை
9. விளைசெயம் ஆவதோ – ஓகாரம் எதிர்மறை
10. குன்றமோ பேயதோ, பூதமோ ஏதோ – ஓகாரங்கள் வினாப்பொருள்

**ஏகாரம்**

1. யானோ அரசன் - ஓகாரம் எதிர்மறை
2. அருவினை என்ப உளவோ – ஓகாரம் எதிர்மறை
3. யானே கள்வன் - ஏகாரம் தேற்றப ் பொருளில் வந்தது.

**ஏகாரம்**

1. செல்வர்க்கே - ஏகாரம் பிரிநிலைப் பொருளில் வந்தது
2. சீவகற்கே - ஏகாரம் தேற்றேகாரம்
3. காயமே, கண்ணே - ஓகாரங்கள் தேற்றேகாரங்கள்
4. புண்ணோ, இகழ் உடம ் போ மெய் - ஓகாரம் எதிர்மறைகள்

**அளபெடை**

**2. ஒற்றளபெடை**

செய்யுளில் ஓசை குறையும் போது அதனை நிறைவு செய்வதற்குச் சொல்லிலுள்ள மெய்யெழுத்து அளபெடுத்தலை ஒற்றளபெடை என்று அழைக்கிறோம்.

**எ.கா எங்ங்கிறை வனுள னென்பாய்.**

**வெ.ஃ.ஃ.குவார்க் கில்லை வீடு**

இத்தொடரில் வண்ண எழுத்துகளாக உள்ள ங் என்பதும் / என்பதும் இருமுறை வந்துள்ளன. இவ்வாறு ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் ஆகிய பத்து மெய்யும். / ஒன்றும் ஆகப் பதினோர் எழுத்துகளும் ஒரு குறிலை அடுத்தும் இருகுறில்களை அடுத்தும் செய்யுளில் இனிய ஓசை வேண்டி அளபெடுக்கும். இவ்வாறு அளபெடுப்பதற்கு ஒற்றளபெடை எனப்படும்.

**“ஙஞண நமன வயலன ஆய்தம்**

**அளபாம் குறிலினண குறிற்சிழிடைகடை**

**மிகலே யவற்றின் குறியாம் வேறே” (நன்னூல் - 92)**

**குற்றியலுகரம்**

குற்றியலுகரம் - குறுமை + இயல் உகரம் (கு, சு, டு, து, பு, று)

ஒரு மாத்திரையளவு ஒலிக்க வேண்டிய உகரம் அரை மாத்திரையளவாகக் குறைந்தொலிப்பது குற்றியலுகரமாகும்.

தனி நெடிலுடனோ, பல எழுத்துகளைத் தொடர்ந்தோ சொல்லுக்கு இறுதியில் வல்லின மெய்யோடு சேர்ந்து வரும் உகரம் தனக்குரிய ஒரு மாத்திரையிலிருந்து குறைந்து அரை மாத ் திரையளவே ஒலிக்கும். இதனையே குற்றியலுகரம் என்பர்.

பசு – காசு, படு – பாடு, அது – பந்து

மேற்கண்ட சொற்களில் பசு, படு, அது போன்ற சொற்கள் இதழ் குவிந்து நன்கு ஒலிக்கப்படுகிறது. இங்கு கு, சு, டு, து போன்ற எழுத்துக்களுக்கு ஒரு மாத்திரை அளவு.

ஆனால் காசு, பாடு, பந்து போன்ற சொற்களில் கு, சு, டு. து போன்ற எழுத்துக்களின் உகரம் குறைந்து ஒலிக்கப்படுகிறது. இதுவே குற்றியலுகரம் ஆகும்.

இங்கு கு, சு, டு. து ஆகிய எழுத்துக்கள் தனக்குரிய ஒரு மாத்திரை அளவிலிருந்து குறைந்து அரை மாத்திரையாக ஒலிக்கிறது.

1) தனி ஒரு குற்றெழுத்தை அடுத்து வரும் உகரம் எழுத்துகள் தனக்குரிய ஒரு மாத்திரை அளவாகவே ஒலிக்கிறது.

**(எ.கா)** அது, பசு, படு, பொது)

2) சொல்லுக்கு முதலிலும், இடையிலும் வரும் “உகரம்” தனக்குரிய ஒரு மாத்திரை அளவில் குறைந்து ஒலிக்காது.

3) சொல்லுக்கு இறுதியில் வரும் வல்லினம் மெய்களை (க், ச், ட், த், ப ், ற்) ஊர்ந்து உகரம் (கு, சு, டு, து, பு, று) மட்டுமே தனக்குரிய ஒரு மாத்திரை அளவில் குறைந்து அரை மாத்திரையாக ஒலிக்கும்.

சொல்லின் இறுதி எழுத்தாக நிற்கும் குற்றியலுகரத்திற்கு முன் உள்ள எழுத்தை நோக்க குற்றியலுகரம் ஆறு வகையாகப் பிரிக்கப்படுகிறது.

**குற்றியலுகரத்தின் வகைகள்**

**குற்றியலுகரம் ஆறு வகைப்படும்**

1) நெடில்தொடர்க் குற்றியலுகரம்

2) ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்

3) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்

4) வன்தொடர்க் குற்றியலுகரம்

5) மென்தொடர்க் குற்றியலுகரம்

6) இடைத்தொடர்க் குற்றியலுகரம்

**1) நெடில் தொடர்க் குற்றியலுகரம்**

தனி நெடிலைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் நெடில் தொடர்க் குற்றியலுகரம் ஆகும்.

(தனி நெடில் என்பது உயிர் நெடிலாகவும், உயிர்மெய் நெடிலாகவும் இருக்கலாம்)

**எ.கா** பாகு, காசு, தோடு, காது, சோறு

**2) ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்**

ஆய்த எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் ஆகும்.

**எ.கா** எ.்.கு, அ.்.கு, க.்.சு

**3) உயிர்தொடர்க் குற்றியலுகரம்**

உயிரெழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் உயிர்த் தொடர்க்குற்றியலுகரம் ஆகும்.

**எ.கா.** அழகு, முரசு, பண்பாடு, எருது, மரபு, பாலாறு,

இச்சொற்களில் வல்லின மெய்களை ஊர்ந்து வந்த உகரம் (கு, சு, டு. து, பு, று) உயிரெழுத்தைத் தொடர்ந்து (ழ – ழ் + அ, ர – ர் + அ, பா – ப் + ஆ, உ+, ரு – ர் + உ, லா – ல் + ஆ) ஈற்றில் அமைந்து குறைந்து ஒலிப்பதால் குற்றியலுகரம் ஆயிற்று.

நெடில் தொடர் குற்றியலுகரம் அமைந்த சொல் நெடிலை உடைய இரண்டு எழுத்து சொல்லாக மட்டுமே வரும்.

**4) வன்தொடர் குற்றியலுகரம்**

வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் வன்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

**எ.கா.** பாக்கு, தச்சு, தட்டு, பத்து, உப்பு, புற்று

**5) மென்தொடர்க் குற்றியலுகரம்**

மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் மென்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

**எ.கா**. பாங்கு, பஞ்சு, வண்டு, பந்து, அம்பு, கன்று

**6) இடைத்தொடர்க் குற்றியலுகரம்**

இடையின மெய்யெழுத ்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் இடைத் தொடர்க் குற்றியலுகரம் ஆகும்.

**எ.கா** மூழ்கு, செய்து, சால்பு, சார்பு

**"நெடிலோடு ஆய்தம் உயிர்வலி மெலி இடைத்**

**தொடர்மொழி இறுதி வன்மையூ ருகரம்**

**அ.ஃ.கும் பிறமேல் தொடரவும் பெறுமே" (நன்னூல் - 94)**

**குற்றியலிகரம்**

குறுமை + இயல் + இகரம் = குற்றியலிகரம் (குறுகிய ஓசையையுடைய இகரம்) இகரம் தனக்குரிய ஒரு மாத ்திரை அளவில் இருந்து அரை மாத்திரையாகக் குறைந்தொலிப்பது குற்றியலிகரமாகும்

வீடு + யாது? = வீடியாது?

ஒரு குற்றியலுகரச் சொல்லின் (வீடு) முன் "யா" என்னும் எழுத்தை முதலாக உடைய சொல் (யாது) வந்து சேரும்போது, அக்குற்றியலுகரச் சொல்லின் இறுதியில் உள்ள உகரம் இகரமாக மாறும் (ட் + இ = டி) (வீடியாது) இதுவே குற்றியலுகரம் எனப்படும். இதற்குக் கால அளவு அரை மாத்திரை ஆகும்.

நிலைமொழியின் ஈற்றெழுத்து குற்றியலுகரமாக இருந்து வருமொழியின் முதலெழுத்து யகரமாக இருந்தால் அவையிரண்டும் புணரும்பொழது நிலைமொழி ஈற்றிலுள்ள குற்றியலகரம் இகரமாகத் திரியும்.

மேலும் 'மியா' என்னும் அசைச்சொல் வருமொழியாக வந்தால் அதில் உள்ள இகரமும் (ம் + இ = மி) ஒலி குறைந்து குற்றியலுகரம் ஆகும்.

**எ.கா.**

கொக்கு + யாது = கொக்கியது?

எ.ஃ.கு + யாது = எ.ஃ.குயாது?

உலகு + யாது = உலகுயாது?

கேள் மியா = கேள்மியா?

**“யகரம் வரக்குறள் ‘உ’ த்திரி இகரம்**

**அசைச்சொல் மியாவின் இகரமும் குரிய” (நன்னூல் - 93)**

**ஐகாரக்குறுக்கம்**

ஐகாரம் + குறுக்கம் = ஐகாரக்குறுக்கம் ஐகாரம் தனக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒன்றரை மாத்திரையாகவும், ஒரு மாத்திரையாகவும் ஒலிப்பது ஐகாரக்குறுக்கம் ஆகும்.

ஐ, வை, தை. ஐகாரம் தனித்து ஒலிக்கும்போது இரண்டு மாத்திரை அளவில் ஒலிக்கின்றது.

ஐகாரம் மொழிக்கு முதல், இடை, கடை ஆகிய இடங்களில் வரும்போது, மொழிக்கு முதலில் ஒன்றரை மாத்திரையளவும், ஏனைய இடங்களில் ஒரு மாத்திரையளவும் ஒலிக்கும் ஐகாரம் இவ்வாறு குறைந்து ஒலிப்பதே ஐகாரக் குறுக்கம் ஆகும்.

ஐந்து ⇒ ஐகாரம் மொழிக்கு முதலில் = 1½ மாத்திரை

இளைஞர் ⇒ ஐகாரம் மொழிக்கு இடையில் = 1 மாத்திரை

புறவை ⇒ ஐகாரம் மொழிக்கு கடையில் = 1 மாத்திரை

**ஔகாரக் குறுக்கம்**

ஔகாரம் + குறுக்கம் = ஔகாரக்குறுக்கம் ஔகாரம் தனக்குரிய இரண்டு மாத்திரையிலிருந்து குறைந்து ஒன்றரை மாத்திரையாகவும் ஒரு மாத்திரையாகவும் ஒலிப்பது ஔகாரக் குறுக்கும் ஆகும்.

ஔகாரம் தனித்த ஒலிக்கும் போது மட்டும் தனக்குரிய இரண்டு மாத்திரை அளவு ஒலிக்கும். மொழிக்கு முதலில் வரும்பொழுது ஒன்றரை மாத்திரை அளவே ஒலிக்கும். ஔகாரம் மொழிக்கு இடையிலும், கடையிலும் வராது.

**எ.கா.** ஔவை – மொழிக்கு முதலில் ஒன்றரை மாத்திரை

**“தற் சுட் டள மொழி ஐம்மூ வழியும்**

**நையும் ஔவும் முதல் அற்றாகும்” (நன்னூல் - 95)**

**மகரக்குறுக்கம்**

மகரம் + குறுக்கம் = மகரக்குறுக்கம், ‘ம்’ என்னும் எழுத்து தனக்குரிய அரை மாத்திரையிலிருந்து கால் மாத்திரையாகக் குறைந்தொலிப்பது மகரக்குறுக்கமாகும்.

செய்யுளில் போலும், மருளும் போன்ற சொற்களில் மருள்ம் என்றாகிப் போன்ம், மருண்ம் என்று திரியும். அவ்வாறு திரிந்த னகர, ணகரங்களின் முன் உள்ள மகரம் அரை மாத்திரையிலிருந்து கால் மாத்திரை அளவே ஒலிக்கும்.

தரும் வளவன், வரும் வண்டி ஆகிய தொடர்களில் நிலை மொழியீற்றில் மகரமும் வருமொழி முதலில் வகரமும் உள்ளன. இதுபோல் நிலை மொழியீற்றில் மகரம் இருந்து வகர முதல் மொழியோடு புணரும் போது நிலை மொழியீற்றிலுள்ள மகரம் குறைந்து கால் மாத்திரையளவே ஒலிக்கும். இவ்வாறு குறைந்தொலிக்கும் குறுக்கம் மகரக் குறுக்கம் ஆகும்.

**"ணன முன்னும் வ.்.கான் மிசையுமக் குறுகும்"**

**நன்னூல் - 96**

**ஆய்தக்குறுக்கம்**

ஆய்தம் + குறுக்கம் = ஆய்தக்குறுக்கம் ஆய்த எழுத்து தனக்குரிய அரை மாத்திரையிலிருந்து கால் மாத்திரையாகக் குறைந்தொலிப்பது ஆய்தக்குறுக்கமாகும்.

**எ.கா**

கல் + தீது = க.்.றீது

முள் + தீது = மு.்.டீது

நிலைமொழியில் தனிக்குறிலைச் சார்ந்து வரும் லகர, ளகர மெய்கள் முன்னே, வருமொழி முதலில் தகரம் வந்தால் லகரத்திற்கு முன் வரும் தகரம் நகரமாகும். ளகரத்திற்கு முன் வரும் தகரம் டகரமாகும் போது அவ்வாறு திரிந்து நகர, டகரங்கள் புணரும்போது நிலைமொழி ளகரங்கள் ஆய்த எழுத்தாகத்திரியும். இவ்வாறு திரிகின்ற ஆய்த எழுத்து தனக்குரிய அரை மாத்திரையிலிருந்து கால் மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும். இதற்கு ஆய்தக்குறுக்கம் என்று பெயர்.

**முற்றியலுகரம்**

தனக்குரிய ஒரு மாத்திரை அளவிலிருந்து குறையாத உகரம் முற்றியலுகரம் எனப்படும்.

1. பகு, பசு, படு, அது, தபு, பெறு = இவை தனிக்குறில் எழுத்தை அடுத்த வரும் வல்லின உகரம் பெற்ற முற்றியலுகரங்கள்.

2. காணு, உண்ணு, உறுமு = இவற்றின் மு உகரங்கள் முற்றியலுகரங்கள்

3. எழு, தள்ளு, கதவு = இவற்றின் ஈற்றிலுள்ள இடையின உகரங்கள் முற்றியலுகரங்கள்.

## மொழி முதல் இடை மற்றும் இறுதி எழுத்துக்கள்

எழுத்துகள் தனித்து நின்றும் தொடர்ந்து வந்தும் பொருள் தருவது சொல் எனப்படும். தனித்து நின்று பொருள் உணர்த்தும் சொல்லை ஓரெழுத்து ஒருமொழி என்பர்.

ஒன்றிற்கு மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்து வந்து பொருள் உணர்த்தும் சொல்லில், எழுத்துகள் முதலிலும் நடுவிலும் இறுதியிலும் எழுத்துகள் விரவி வரும். அவ்வாறு சொல்லின் முதலில் வரும் எழுத்துகளை மொழிமுதல் எழுத்துகள் என்றும், இறுதியில் வரும் எழுத்துகளை மொழி இறுதி எழுத்துகள் என்றும் கூறுவர்.

சொல்லின் இடையில் வரும் எழுத்துகளை இடைநிலைகள், மெய்மயக்கங்கள் என்று வகைப்படுத்துவர். தமிழ் எழுத்துகள் 247 சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் வருவது இல்லை.

சில எழுத்துகள் சொல்லின் முதலிலும் சில எழுத்துகள் சொல்லின் இறுதியிலும் சில எழுத்துகள் சொல்லின் இடையிலும் வருகின்றன அவற்றை இனிக் காண்போம்.

### மொழி முதல் எழுத்துகள்

சொல்லின் முதலில் வரும் எழுத்துகளை மொழி முதல் எழுத்துகள் என்பர்.

1. பன்னிரண்டு உயிர் எழுத்துகளும் மொழி முதலில் வரும்.

2. க, ங, ச, ஞ, த, ந, ப, ம, ய, வ ஆகிய பத்து மெய் எழுத்துகள் மட்டுமே மொழி முதலில் வரும்.

அவற்றுள் க, ச, த, ந, ப, ம என்னும் ஆறு மெய்களும் பன்னிரண்டு உயிரோடும் சேர்ந்து மொழிக்கு முதலாகி வரும்.

பன்னிரண்டு உயிருடன் சேர்ந்து வரும் **'க்'** வரிசை சொற்கள்,

கடவுள், காடு, கிளை, கீற்று, குளம், கூட்டம், கெட்டான், கேடு, கைபேசி, கொடுக்கு, கோட்டை, கௌவுதல்.

பன்னிரண்டு உயிருடன் சேர்ந்து வரும் **'ச்'** வரிசை சொற்கள்,

சட்டி, சாட்டை, சிவப்பு, சீப்பு, சுக்கு, சூடு, செக்கு, சேவல், சைகை, சொப்பு,

சோழி, சௌபாக்கியவதி.

பன்னிரண்டு உயிருடன் சேர்ந்து வரும் **'த்'** வரிசை சொற்கள்,

தம்பி, தார், திலகம், தீமை, துள்ளல், தூக்கம், தெய்வம், தேடினேன், தையல்,

தொண்டு, தோடு, தௌவை.

பன்னிரண்டு உயிருடன் சேர்ந்து வரும் **‘ந்’** வரிசை சொற்கள்,

நண்பன், நாக்கு, நிலம், நீட்டம், நுங்கு, நூல், நெடி, நேற்று, நைடதம், நொப்பு, நோக்கு, நௌவி.

பன்னிரண்டு உயிருடன் சேர்ந்து வரும் **‘ப்’** வரிசை சொற்கள்,

பந்து, பால், பிட்டு, பீடு, புள், பூண்டு, பெருமை, பேய், பைதல், பொன், போது, பௌவம்.

பன்னிரண்டு உயிருடன் சேர்ந்து வரும் **‘ம்’** வரிசை சொற்கள்,

மனம், மாடு, மின்னல், மீன், முடிவு, மூக்கு, மெட்டி, மேற்கு, மையல், மொட்டு, மோகம், மௌவல்.

‘ங்’ என்ற மெய் எழுத்து **‘அ’** வோடு மட்டுமே சேர்ந்து மொழி முதலில் வரும்.

ஙனம் – அங்ஙனம், இங்ஙனம், எங்ஙனம்

‘ஞ்’ என்ற மெய் எழுத்து அ, ஆ, எ, ஒ என்ற நான்கு உயிர் எழுத்துடன் சேர்ந்து மொழி முதலில் வரும்.

ஞமலி(நாய்), ஞாயிறு, ஞெகிழி(கொள்ளிக்கட்டை), ஞொள்கிறது(ஒலிக்கிறது)

‘ய்’ என்ற மெய் எழுத்து அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ என்ற ஆறு உயிர் எழுத்துடன் சேர்ந்து மொழி முதலில் வரும்.

யவனர், யார், யுகம், யூகி, யோகம், யௌவனம்(இளமை)

‘வ்’ என்ற மெய் எழுத்து அ, ஆ, உ,ஊ எ, ஏ, ஐ, ஔ என்ற எட்டு உயிர் எழுத்துடன் சேர்ந்து மொழி முதலில் வரும்.

வளம், வாழ்க, விருப்பம், வீடு, வெள்ளை, வேலை, வையம், வௌவுதல்(கவ்வுதல்)

| | | |
|---|---|---|
| உயிர் எழுத்துகள் | - | 12 |
| ககர வரிசை | - | 12 |
| சகர வரிசை | - | 12 |
| தகர வரிசை | - | 12 |
| நகர வரிசை | - | 12 |
| பகர வரிசை | - | 12 |

| | | |
|---|---|---|
| மகர வரிசை | - | 12 |
| ஙகர வரிசை | - | 01 |
| ஞகர வரிசை | - | 04 |
| யகர வரிசை | - | 06 |
| வகர வரிசை | - | 08 |
| மொத்தம் | - | 103 |

இந்த 103 எழுத்துகள் மட்டுமே தமிழ்ச்சொற்களின் முதலில் வரும்

மொழி இடையில் வரும் எழுத்துகளை விவரி

## மொழி இடை எழுத்துக்கள்

மெய் எழுத்துகள் பதினெட்டும் சொல்லின் இடையில் வரும்.

உயிர்மெய் எழுத்துகள் சொல்லின் இடையில் வரும்.

ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும்.

அளபெடையில் மட்டுமே உயிர் எழுத்துகள் சொல்லின் இடையில் வரும்.

### மொழி இடை மெய்ம்மயக்கம்

மொழி இடையில் ஒரு மெய் தன்னோடும் பிற மெய்யோடும் சேர்ந்து வருவதை மெய்ம்மயக்கம் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். க ச த ப எனும் நான்கு மெய்களும் தம்மொடு தாம் மட்டுமே மயங்கி வரும்˙ பிற மெய்களோடு மயங்கி வாரா. ர, ழ எனும் இரு மெய்களும் பிற மெய்களோடு மட்டுமே மயங்கி வரும்˙ தம்மோடு தாம் மயங்கி வாரா. ஏனைய பன்னிரண்டு மெய்களும் தம்மொடு தாமும், தம்மொடு பிறவுமாக மயங்கி வரும். ஆகவே தம்மொடு தாம் மயங்குவன ர ழ நீங்கிய பதினாறு மெய்களும் ஆகும். இம்மயக்கத்தைத் தொல்காப்பியர் உடனிலை எனக் குறிப்பிடுகிறார். தம்மொடு பிற வந்து மயங்குவன க ச த ப நீங்கிய பதினான்கு மெய்களும் ஆகும். இம்மயக்கத்தை மெய்ம்மயக்கு எனக் குறிப்பிடுகிறார்.

### உடனிலை

ஒரு மெய்யின் முன்னர் அதே மெய் மயங்கி வருதல் உடனிலை என்பதை மேலே கண்டோம். இதை நன்னூலார் உடனிலை மெய்ம்மயக்கம் என்று குறிப்பிடுவார்.

**(எ.டு)**

பக்கம் - பக்க்அம்

முந்நீர் - முந்ந்ஈர்

பாட்டு - பாட்ட்உ

தெவ்வர் - தெவ்வ்அர்

**மெய்ம்மயக்கம்**

ஒரு மெய்யின் முன்னர் அம்மெய் அல்லாத பிற மெய்கள் மயங்கி வருவது மெய்ம்மயக்கு ஆகும். இதனை நன்னூலார் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் எனக் குறிப்பிடுகிறார்.

**(எ.டு)**

மார்பு - மார்ப்உ

வீழ்து - வீழ்த்உ

பந்து - பந்த்உ

அம்பு - அம்ப்உ

காட்சி - காட்ச்இ

மேலே கூறப்பட்டவை இரண்டு மெய்களின் மயக்கம் பற்றியாகும். மொழி இடையில் மூன்று மெய்கள் அடுத்தடுத்துச் சேர்ந்து வருவதையும் தொல்காப்பியர் எடுத்துக் காட்டுகிறார்.

**மூன்று மெய்களின் மயக்கம்**

ய, ர, ழ ஆகிய மூன்று மெய்களின் முன்னர், க, ச, த, ப ஆகிய நான்கு மெய்கள் இரட்டித்து வரும்.

வாய்ப்பு - (ய்ப்ப்)

தேர்ச்சி - (ர்ச்ச்)

வாழ்க்கை - (ழ்க்க்)

வாழ்த்து - (ழ்த்த்)

ங, ஞ, ந, ம ஆகிய நான்கு மெய்கள் இரட்டித்தும், தமக்கு இனமான வல்லின மெய்களாகிய க, ச, த, ப ஆகிய நான்கோடு முறையே சேர்ந்தும் வரும்.

**மெய்ம்மை (ய்ம்ம்)**

**வீழ்ந்தது (ழ்ந்த்)**

இதுகாறும் தொல்காப்பியர் தமிழ் எழுத்துகளின் மொழி முதல், இடை, இறுதி வருகை முறை பற்றிக் கூறியவற்றைப் பார்த்தோம். இவ்விதிகள், தமிழ் மொழியின் அமைப்பை அவர் காலத்திற்குப் பின்பும் பன்னெடுங் காலமாகச் சிதைந்து விடாது

காத்து வந்துள்ளன. தமிழில் பிறமொழிச் சொற்கள், குறிப்பாக வடமொழிச் சொற்கள் வந்து கலக்கும்போது அவற்றை அப்படியே ஏற்றுக்கொள்ள இவ்விதிகள் இடம் தரவில்லை. சான்றாக, க, ச, த, ப ஆகிய மெய்களை அடுத்து அம்மெய்களே வரவேண்டும் பிற மெய்கள் வருதல் கூடாது என்பது தொல்காப்பியர் வரையறுத்துக் கூறிய விதி. ஆனால் தொல்காப்பியர் காலத்திற்குப் பின்பு சங்க காலம் தொட்டுத் தோன்றிய பிற்காலத் தமிழ் இலக்கியங்களில் வாக்யம், அக்ரமம், சுக்லம், வச்ரம், வாத்யம் போன்ற வடமொழிச் சொற்கள் வந்து கலந்தன. இச்சொற்களின் இடையில் க்ய், க்ர், க்ல், ச்ர், த்ய் என்ற மெய்ம்மயக்கங்கள் காணப்படுகின்றன. இவை தொல்காப்பியரின் விதிக்குப் புறம்பானவை. எனவே இச்சொற்கள் அவ்விலக்கியங்களில் தொல்காப்பியர் கூறிய தமிழ் ஒலியமைப்பிற்கு ஏற்பக் கீழ்க் கண்டவாறு மாற்றி ஏற்றிக் கொள்ளப்பட்டன.

அக்ரமம் - அக்கிரமம் இவற்றில் தமிழில் வரக்கூடாத மெய்க்கூட்டுகளின் இடையே உயிரெழுத்து ஒன்றைநுழைத்துத் தமிழின் ஒலியமைப்பு காக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

சுக்லம் - சுக்கிலம் (மருந்து)

வச்ரம் - வச்சிரம் (இந்திரனது படை)

வாத்யம் - வாத்தியம் (இசைக்கருவி)

இதுபோலத் தமிழ் மொழியின் ஒலியமைப்பைக் காலந்தோறும் தனித் தன்மையுடன் பேணிக் காப்பதற்கு ஏற்ற விதிமுறைகளைத் தொல்காப்பியர் வகுத்திருப்பது தனிச் சிறப்பாக உள்ளது.

### மொழி இறுதி எழுத்துகள்

சொல்லின் கடைசியில்(இறுதியில்) வரும் எழுத்துகளை மொழி இறுதி எழுத்துகள் என்பர்.

பன்னிரண்டு உயிர் எழுத்துகளும் மொழி முதலில் வரும்.

உயிர்க் குறில்(அ, இ, உ, எ, ஒ) ஐந்தும் அளபெடையின்போது சொல்லின் இறுதியில் வரும்.

குறில் எழுத்துகள் மட்டுமன்றி ஏனைய உயிர் எழுத்துகளும் மெய்யுடன் இணைந்து உயிர்மெய்யாக மொழி இறுதியில் வரும்.

சில, பலா, கிளி, தீ, சுடு, பூ, சே(ஒருவகை மரம்), தே(தெய்வம்), மலை, நொ (துன்பம்), போ, கௌ(கவ்வுதல்)

ஞ், ண், ந், ம், ய், ர், ல், வ், ழ், ள், ன் ஆகிய பதினொரு மெய்யெழுத்துகளும் மொழியின் இறுதியில் வரும்.

உரிஞ், மண், வெரிந்(முதுகு), மரம், காய், வேர், வேல், தெவ்(பகை), வாழ், வாள், பொன்

| | | |
|---|---|---|
| உயிர் எழுத்துகள் | - | 12 |
| வல்லின மெய் | - | 05 |
| இடையின மெய் | - | 06 |
| மொத்தம் | - | 23 |

இந்த 23 எழுத்துகள் மட்டுமே தமிழ்ச்சொற்களின் இறுதியில் வரும்

## வல்லினம் மிகும் - மிகா இடங்கள்

**வல்லினம் மிகும் இடங்கள்**

1. அ, இ, உ என்னும் சுட்டெழுத்துகளை அடுத்தும், எ என்னும் வினாவை அடுத்தும் வரும் வல்லினங்களாகிய க், ச், த், ப் மிகும்.

அ + பையன் = அப்பையன்

இ + செடி = இச்செடி

எ + பணி = எப்பணி

2. அந்த, இந்த, எந்த் அங்கு, இங்கு, எங்க் அப்படி, இப்படி, எப்படி என்னும் சுட்டு வினாச்சொற்களை அடுத்து வல்லினம் மிகும்.

அந்த + கோவில் = அந்தக்கோவில்

அங்கு + சென்றான் = அங்குச்சென்றான்

எங்கு + போனான் = எங்குப்போனான்

3. இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.

நூலை + படி = நூலைப்படி

பாலை + குடி = பாலைக்குடி

4. நான்காம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.

அவனுக்கு + கொடுத்தான் = அவனுக்குக் கொடுத்தான்

பணிக்கு + சென்றான் = பணிக்குச் சென்றான்.

5. இரண்டு, மூன்று, நான்கு, ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வல்லினம் மிகும்.

தண்ணீர் + குடம் = தண்ணீர்க்குடம்

மரம் + பெட்டி = மரப்பெட்டி

பூட்டு + சாவி = பூட்டுச்சாவி

விழி + புனல் = விழிப்புனல்.

6. பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.

பச்சை + பட்டு = பச்சைப்பட்டு

பச்சை + கிளி = பச்சைக்கிளி

7. இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.

சாரை + பாம்பு = சாரைப்பாம்பு

மல்லிகை + பூ = மல்லிகைப்பூ

8. உவமைத்தொகையில் வல்லினம் மிகும்.

மலர் + கண் = மலர்க்கண்

தாமரை + கை = தாமரைக்கை.

9. ஓரெழுத்து ஒரு மொழியின் பின் வல்லினம் மிகும்.

தீ + சுடர் = தீச்சுடர்

பூ + கூடை = பூக்கூடை

10. ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும்.

அழியா + புகழ் = அழியாப்புகழ்

ஓடா + குதிரை = ஓடாக்குதிரை

11. வன்தொடர்க் குற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்.

பத்து + பாட்டு = பத்துப்பாட்டு

எட்டு + தொகை = எட்டுத்தொகை

12. ட, ற ஒற்று இரட்டிக்கும் உயிர், நெடில் தொடர்க் குற்றியலுகரங்களின் பின் வல்லினம் மிகும்.

ஆடு + பட்டி = ஆட்டுப்பட்டி

நாடு + பற்று = நாட்டுப்பற்று

13. முற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்.

பொது + தேர்வு = பொதுத்தேர்வு

திரு + குறள் = திருக்குறள்

14. சால, தவ முதலிய உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.

சால + பேசினான் = சாலப்பேசினான்.

தவ + சிறிது = தவச்சிறிது.

15. ஆய், என, இனி, ஆக முதலிய இடைச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.

என + கூறினான் = எனக் கூறினான்.

இனி + காண்போம் = இனிக் காண்போம்.

## வல்லினம் மிகா இடங்கள்

1. அது, இது, அவை, இவை என்னும் சுட்டுச் சொற்களின் பின்னும் எது, எவை என்னும் வினாச்சொற்களின் பின்னும் வல்லினம் மிகாது.

அது + பறந்தது = அது பறந்தது.

அவை + பறந்தன = அவை பறந்தன.

எது + தங்கம் = எது தங்கம்

எவை + சென்றன = எவை சென்றன.

2. ஆ, ஏ, ஓ என்னும் வினா எழுத்துகளின்பின் வல்லினம் மிகாது.

அவனா + சென்றான் = அவனா சென்றான்.

அவனோ + பேசினான் = அவனோ பேசினான்.

அவனே + சிரித்தான் = அவனே சிரித்தான்.

3. எழுவாய்த்தொடரில் வல்லினம் மிகாது.

மலர் + பூத்தது = மலர் பூத்தது

வண்டு + பறந்தது = வண்டு பறந்தது.

4. அத்தனை, இத்தனை, எத்தனை என்னும் சொற்களுக்குப் பின் வல்லினம் மிகாது.

அத்தனை + படங்கள் = அத்தனை படங்கள்

இத்தனை + பறவைகள் = இத்தனை பறவைகள்

எத்தனை + காக்கைகள் = எத்தனை காக்கைகள்

5. வினைத்தொகையில் வல்லினம் மிகாது.

ஊறு + காய் = ஊறுகாய்

சுடு + சோறு = சுடுசோறு

6. உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது.

கபிலபரணர்

இரவுபகல்

7. இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வல்லினம் மிகாது.

தமிழ் + கற்றார் = தமிழ் கற்றார்.

கடல் + கடந்தார் = கடல் கடந்தார்.

8. மூன்றாம் வேற்றுமை உருபுகளின் பின் ( ஒடு, ஓடு ) வல்லினம் மிகாது.

பூவொடு + சேர்ந்த = பூவொடுசேர்ந்த

கபிலரோடு + பரணர் = கபிலரோடுபரணர்

9. எட்டு, பத்து தவிரப் பிற எண்களுக்குப்பின் வல்லினம் மிகாது.

ஒன்று + கொடு = ஒன்றுகொடு

இரண்டு + பேர் = இரண்டுபேர்

10. வியங்கோள் வினைமுற்றுக்குப்பின் வல்லினம் மிகாது.

வாழ்க + தமிழ் = வாழ்க தமிழ்

வாழிய + பல்லாண்டு = வாழிய பல்லாண்டு

11. இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர்களில் வல்லினம் மிகாது.

சல + சல = சலசல

பாம்பு + பாம்பு = பாம்பு பாம்பு

12. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் தவிரப் பிறபெயரெச்சங்களின் பின் வல்லினம் மிகாது.

கற்ற + சிறுவன் = கற்ற சிறுவன்

சறிய + பெண் = சிறியபெண்

## உடம்படுமெய்கள்

நிலைமொழியின் ஈற்றிலும் வரும்மொழியின் முதலிலும் உயிர் எழுத்துகள் வரும்போது அவற்றை ஒன்றுப்படுத்தத் தோன்றும் மெய்யெழுத்திற்கு "உடம்படுமெய்" எனப்படும்.

**இஈஐவழி யவ்வும் ஏனை**

**உயிர்வழி வவ்வும் ஏமுன் இவ்விருமையும்**

**உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும் – நன்னூல்.162**

ய், வ் – இவையிரண்டும் உடம்படு மெய்களாகும்.

நிலைமொழி இறுதி எழுத்து "இ" என்ற உயிரெழுத்தையும் வரும்மொழி முதலெழுத்து "அ" என்ற உயிரெழுத்தையும் பெற்று வந்துள்ளது. இவ்வாறு நிலைமொழி ஈறும், வரும்மொழி முதலிலும் உயிர் எழுத்துகள் வரும்போது ஒன்றுடன் ஒன்று புணராது. இப்போது இவ்விரண்டு உயிரெழுத்துகளையும் சேர்க்க "ய" என்கிற உடம்படுமெய் (ய்) தோன்றி வரும்மொழியுடன் சேர்ந்து "கிளியழகு" என்றானது.

கிளி + அழகு = கிளிய் + அழகு = கிளியழகு

தீ + அணைந்தது = தீய் + அணைந்தது தீயணைந்தது

பனை + ஓலை = பனைய் + ஓலை பனையோலை

இங்கு நிலைமொழி ஈற்றில் இ, ஈ, ஐ என்னும் உயிர் எழுத்துகளில் ஒன்று நிற்க வரும்மொழி முதலில் உயிர் வந்தால் யகர உடம்படுமெய் (ய்) தோன்றி வரும்மொழி முதல் உயிருடன் சேர்ந்தது.

பல + ஆறு = பலவ் + ஆறு = பலவாறு

பலா + அழகு = பலாவ் + அழகு = பலாவழகு

திரு + ஆரூர் = திருவ் + ஆரூர் = திருவாரூர்

பூ + அழகு = பூவ் + வழகு = பூவழகு

தே + ஆரம் = தேவ் + ஆரம் = தேவாரம்

கோ + இல் = கோவ் + இல் = கோவில்

மேலே உள்ள சொற்களில் நிலைமொழி ஈற்றில் அ, ஆ, உ, ஊ, ஏ, ஓ என்னும் உயிர் எழுத்துகள் நிற்க வரும்மொழி முதலில் உயிர் வந்தால் “வ“ கர உடம்படுமெய் (வ்) தோன்றி வரும்மொழி முதலில் உயிருடன் சேர்ந்தது.

சே + அடி சேவ் + அடி சேவடி

சே + அடி சேய் + அடி சேயடி

நிலைமொழி ஈற்றில் “ர“ என்னும் எழுத்து நின்று வரும்மொழி முதலில் உயிர் வந்தால்,

இ, ஈ, ஐ என்னும் உயிரெழுத்துகள் யகர மெய்யையும்,

அ,ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் உயிரெழுத்துகள் வகர மெய்யையும்

ஏ என்னும் உயிரெழுத்து ய், வ் என்னும் இரண்டையும் உடம்படு மெய்யாகப் பெற்றுப் புணரும்.

## சொல்லின் பொது இலக்கணம்

ஒரெழுத்து தனித்து நின்றோ, பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள் உணர்த்துமாயின் அவை சொல் எனப்படும். சொல்லின் அமைப்பு, வகைகள் பற்றியறிய இலக்கண முறைக்கு சொல் இலக்கணம் என்று பெயர்.

சொல், பதம், மொழி, கிளவி என்பவை ஒரு பொருளை உணர்த்தும் பல சொற்களாகும்.

### சொல்லின் வகைகள்

சொல் இலக்கணம் நான்கு வகையாக பிரிக்கப்படுகிறது.

1. பெயர்ச்சொல்
2. வினைச்சொல்
3. இடைச்சொல்
4. உரிச்சொல்

இலக்கிய வகையால் நான்காகப் பிரிக்கப்படுகிறது.

1. இயற்சொல்
2. திரிச்சொல்

3. திசைசொல்

4. வடச்சொல்

**பெயர்ச்சொல்லின் வகைகள்**

பெயரை உணர்த்தும் சொல் பெயர்ச்சொல் எனப்படுகிறது. பெயர்ச்சொல் ஆறு வகைப்படும்.

1. பொருட்பெயர்
2. இடப்பெயர்
3. காலப ் பெயர்
4. சினைப்பெயர்
5. பண்புப்பெயர் (அ) குணப்பெயர்
6. தொழிற்பெயர்

**1. பொருட்பெயர்**

பொருட்களின் பெயரைக்குறிக்கும் சொல் பொருட்பெயர் எனப்படும்.

(எ.கா) அழகன், குமரன், மலர்க்கொடி, தென்னை இவை உயிருள்ள பொருள்.

நாற்காலி, அடுப்பு, தட்டு, எண்ணெய், மண், நீர், காற்று இவை உயிரற்ற பொருள்கள் ஆகும்.

**2. இடப்பெயர்**

இடங்களின் பெயரைக் குறிக்கும் சொல் இடப்பெயர் எனப்படும்.

(எ.கா) வீடு, தெரு, பள்ளி, கோவில், மக்கள் வாழிடம், தோட்டம், காடு, இல்லம், குளம்

**3. காலப்பெயர்**

காலத்தைக் குறிக்கும் பெயர்ச்சொல் காலப்பெயர் எனப்படும்.

(எ.கா) காலை, சித்திரை, தைத்திங்கள், கோடைக்காலம், செவ்வாய்க்கிழமை

**4. சினைப்பெயர்**

உறுப்புகளைக் குறிக்கும் சொற்கள் சினைப்பெயர் எனப்படும்.

(எ.கா) தலை, கண், மூக்கு, வாய், செவி, நாக்கு, புல், வயது, கை, கால், விரல், வேர், தண்டு, கிளை, இலை, பூ, காய், கனி, விதை.

### 5. பண்புப் பெயர் (அ) குணப்பெயர்

நிறம், வடிவம், சுவை, குணம் ஆகியவற்றுள் ஒன்றினைக் குறிக்கும் சொல் பண்புப்பெயர் எனப˙படும்.

(எ.கா) பத்துமீட்டர் துணி, பத்து கிலோ அரிசி, ஐந்துபடி எண்ணெய், வட்டப ˙பலகை, சதுரவீடு, செவ்வகப் புத்தகம், முக்கோணம் கூம்பு, செம்மை.

### 6. தொழிற்பெயர்

தொழிலைக் குறிக்கும் பெயர்ச்சொல் தொழிற்பெயர் எனப்படும்.

(எ.கா) ஆட்டம், விளையாட்டு, எழுதுதல், சிரித்தல்.

**தொழிற்பெயர்கள்**

ஆக்கல் நீக்கல் விளையாட்டு

பொறுத்தல் மறத்தல் பொறுத்தல்

ஓரால் பொறை கண்ணோட்டம்

செல்லாமை உரைத்தல் என்றல்

காத்தல் ஈதல் மகிழ்ச்சி

குற்றம் இழுக்கல் ஒழுக்கம்

விடல் தெளிதல் கண்ணோட்டம்

வாழ்தல்

நீங்காமை - எதிர்மறை தொழிற் பெயர்

**தொழிற் பெயர்**

- ஒழுக்கம், இழுக்கம் சொலல்
- இடும்பை படுபாக்கு ஒழுக்கம்
- இழுக்கம் இடும்பை ஒழுகல்
- ஒடுக்கம் வாழ்தல் இயற்றுதல்
- இருக்கை களவு வாழ்க்கை
- ஒழுக்கம் துளங்குதல் பகை கொளல்
- விடல் ஒழுகுதல் தலை ஆற்றுதல்
- ஒழுகுதல் நோன்றல் பொறுத்தல்

- தொடர் (தொடர்பு) - முதனிலைத் தொழிற்பெயர்
- குத்து - முதல் நிலைத் தொழிற்பெயர்

| வ.எண் | பெயர் வகை | பெயர் |
|---|---|---|
| 1 | பொருட்பெயர் | கண்ணன், நாற்காலி |
| 2 | இடப்பெயர் | வேலூர், நாமக்கல் |
| 3 | காலப்பெயர் | தைத்திங்கள், நண்பகல் |
| 4 | சினைப்பெயர் | முகம், கை |
| 5 | குணப்பெயர் | வட்டம், அழகு |
| 6 | தொழிற்பெயர் | ஆடல், பாடல் |

## ஆகுபெயர்

ஒரு பொருளின் இயற்பெயர், அதனை உணர்த்தாமல் அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்குத் தொன்று தொட்டுப் பெயராகி வருவது ஆகுபெயர் எனப்படும்.ஒரு பொருளின் இயற்பெயர், அதனை உணர்த்தாமல் அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்குத் தொன்று தொட்டுப் பெயராகி வருவது ஆகுபெயர் எனப்படும்.

(எ.கா) ஊர் சிரித்தது

எங்கும் ஊர் சிரிக்காது. ஊரிலுள்ள மக்கள்தான் சிரிப்பார்கள். நேரிடையாக மக்கள் சிரிப்பதைச் சொல்லாமல் மக்கள் வசிக்கின்ற (தொடர்புடைய) ஊரைச் சொல்லியது ஆகும்.

**”பொருள்முதல் ஆறோடு அளவை சொல்தானி**

**கருவி காரியம் கருத்தன் ஆதியுள்**

**ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்**

**தொன்முறை உரைப்பன ஆகுபெயரே”** **– நன்னூல்.290**

என்பார் நன்னூல் ஆசிரியர் பவனந்தி முனிவர்.

**1.பொருளாகு பெயர்**

ஒரு முழுப்பொருளின் பெயர் தன்னைச் சுட்டாது அதன் உறுப்புக்கு ஆகி வருவது பொருளாகுபெயர் எனப்படும். இதனை முதலாகுபெயர் எனவும் கூறுவர்.

(எ.கா) தமிழரசி மல்லிகை சூடினாள்

இத்தொடரில் உள்ள மல்லிகை என்னும் சொல் வேர், கொடி. இலை, பூ ஆகிய உறுப்புகள் அனைத்தும் சேர்ந்த முழுப்பொருளைக் குறிக்கிறது ஆனால் அடுத்துள்ள சூடினாள் என்னும் பயனிலையால் மல்லிகை என்னும் பெயர், முழுப்பொருளை உணர்த்தாது, அதன் ஓர் உறுப்பாகிய மலரை மட்டும் உணர்த்துகிறது. எனவே இது **பொருளாகு பெயர்.**

(எ.கா) பூசணிச்சாம்பார் சுவையாக இருந்தது.

**2. இடவாகு பெயர்**

ஓர் இடத்தின் பெயர் அந்த இடத்தோடு தொடர்புடைய வேறு பொருளுக்கு ஆகி வருவது ‘இடவாகு பெயர்’ எனப்படும்.

(எ.கா) கிரிக்கெட்டில் இந்தியா வென்றது.

இந்தச் சொற்றொடரில் உள்ள இந்தியா என்னும் இடப்பெயர் அப்பெயரால் அமைந்த நாட்டைக் குறிக்காது அந்நாட்டிற்காக விளையாடிய வீரர்களைக் குறிக்கிறது. எனவே இது இடவாகு பெயர் ஆகும்.

(எ.கா) காஞ்சிபுரம் என்ன விலை?

**3. காலவாகுபெயர்**

காலப்பெயர் காலத்தோடு தொடர்புடைய வேறு பொருளுக்கு ஆகி வருவது காலவாகுபெயர் எனப்படும்

(எ.கா) மார்கழி சூடினாள்

மார்கழி என்னும் சொல் தமிழ்த்திங்களைக் குறிக்கும் காலப் பெயராகும். ஆனால் சூடினாள் என்னும் குறிப்பால் மார்கழித் திங்களில் மலர்ந்த மலரை (டிசம்பர் பூ எனப்படும் நீலக்கனகாம்பரம்) உணர்த்துகிறது. எனவே இது காலவாகுபெயர் ஆகும்.

(எ.கா) கோடை நன்றாக விளைந்துள்ளது.

**4. சினையாகு பெயர்**

ஒரு சினையின் (உறுப்பு) பெயர், அதனோடு தொடர்புடைய முழுப்பொருளுக்கு ஆகி வருவது சினையாகுபெயர் எனப்படும்.

(எ.கா) ஆசிரியர் தலைக்கு ஒரு வினாத்தாள் தந்தார்.

‘தலை’ என்பது நம்முடலின் ஓர் உறுப்பு இத்தொடரில் உள்ள ‘தலை’ என்னும் உறுப்பின் பெயர், ஆனால் அடுத்துள்ள குறிப்புச் சொற்களால் மாணவனைக் குறிக்கின்றது. எனவே இது சினையாகுபெயர் எனப்படும்.

(எ.கா) தலைக்கு ஒரு பழம் கொடு

**5. பண்பாகு பெயர்**

ஒரு பண்புப்பெயர், அப்பண்பைக் கொண்ட பொருளுக்கு ஆகி வருவது பண்பாகு பெயர் எனப்படும். இது ‘குணவாகு பெயர்’ என்றும் வழங்கப் பெறுகிறது.

(எ.கா) இளங்கோ இனிப்பு வழங்கினான்

இத்தொடரில் இனிப்பு என்னும் பண்புப்பெயர், ‘வழங்கினான்’ என்னும் குறிப்பால் இனிப்புச் சுவையுடைய பொருளை உணர்த்துகிறது. எனவே இது பண்பாகுபெயர் எனப்படும்

(எ.கா) செவலையை வண்டியில் பூட்டு

**6. தொழிலாகுபெயர்**

ஒரு தொழிற்பெயர், அத்தொழிலிருந்து பெறப்படும் பொருளுக்கு ஆகி வருவது தொழிலாகு பெயர் எனப்படும்.

(எகா) அழகன் அவியல் உண்டான்.

இத்தொடரில் அவியல் என்னும் சொல் காய்கறிகளை என்னும் பொருளைத் தருகிறது. எனவே இது தொழிலாகுபெயர் எனப்படும். அவித்தலாகிய தொழிலைக் குறிப்பதாகும். ஆனால் ‘உண்டான்’ என்னும் பயனிலையால் அவிக்கப்பட்ட காய்கறியினை உண்டான்.

(எ.கா) பொரியல் சுவையாக இருந்தது.

**7. தானியாகுபெயர்**

ஓர் இடப்பெயர். அவ்விடத்திலுள்ள பொருளுக்கு ஆகிவருவது இடவாகுபெயராகும். ஓரிடத்திலுள்ள பொருள் அவ்விடத்திற்கு ஆசி வருவது தானியாகுபெயர் எனப்படும்.

(எ.கா) பாலை வண்டியில் ஏற்று

பால் என்னும் நீர்மப்பொருள் ஏற்றும் என்னும் குறிப்பால், பால் வைக்கப்பட்டிருக்கும் தானமாகிய (இடமாகிய) குடத்திற்கு ஆகி வந்து தானியாகு பெயர் ஆயிற்று (தானம் – குடம், தானிக் பால்

**8. உவமையாகு பெயர்**

உவமானப் பெயர், தொடர்புடைய உவமேயப் பொருளுக்கு ஆகி வருவது உவமையாகுபெயர் எனப்படும்.

(எ.கா) காளை வந்தான்

காளை மாட்டைக் குறிக்கும் பெயராகிய காளை என்பது காளை மாடு போன்ற வலிமையும் வீரமும் வாய்ந்த ஆண் மகனுக்கு ஆகி வந்தது. காளை போன்றவன் வந்தான். எனவே இது உவமையாகுபெயர் ஆயிற்று

(எ.கா) பாவை ஆடினாள்

**9. கருவியாகுபெயர்**

ஒரு கருவியின் பெயர், அதனால் உண்டாகிய காரியப் பொருளுக்கு ஆகி வருவது கருவியாகுபெயர் எனப்படும்.

(எ.கா) குழல்கேட்டு மகிழ்ந்தான்.

குழல் என்னும் இசைக் கருவியின் பெயர், அதனால் உண்டான இசைக்கு ஆகிவந்து குழலோசை கேட்டு மகிழ்ந்தான் என்றானதால், இது கருவியாகுபெயர் ஆயிற்று

**10. காரியவாகு பெயர்**

ஒரு காரியத்தின் பெயர், அது உண்டாவதற்குக் காரணமான கருவிப் பொருளுக்கு ஆகிவருவது காரியவாகுபெயர் எனப்படும். இது கருவியாகு பெயர்க்கு எதிர்மறையாகும்.''

(எ.கா) களவியல் படித்தான்.

களவியல் என்றும் காரியத்தின் பெயர் அதனை உணர்த்துவதற்குக் கருவியாகிய நூலிற்கு ஆகி வந்தது, களவியல் என்னும் அகத்திணை இலக்கணத்தைப் படித்தான் என்றானதால் இது காரியவாகு பெயர் ஆயிற்று.

**11. கருத்தா ஆகுபெயர்**

ஒரு கருத்தாவின் பெயர், அவரால் இயற்றப்பட்ட நூலிற்கு ஆகிவருவது கருத்தா ஆகுபெயர் எனப்படும்.

(எ.கா) அழகனுக்குத் திருவள்ளுவர் மனப்பாடம்

திருக்குறளை எழுதிய கருத்தாவின் பெயர் திருக்குறள் என்பதாகும். இத்தொடரில் திருவள்ளுவர் என்னும் பெயர் அவரைக் குறிக்காது அவரால் எழுதப்பட்ட காரியமாகிய திருக்குறளுக்கு ஆகிவந்ததால் இது கருத்தாகுபெயர் ஆயிற்று.

**12. சொல்லாகுபெயர்**

ஒரு சொல்லின் பெயர், தொடர்புடைய பொருளுக்கு ஆகிவருவது சொல்லாகுபெயர் எனப்படும்.

(எ.கா) தம்பி என் சொல்லைக் கேட்டான்

'சொல்' என்னும் பெயர், கேட்பான் என்னும் குறிப்பால், எழுத்துகளாகிய சொல்லைக் குறிக்காது அறிவுரைக்கு ஆகிவந்ததால் சொல்லாகுபெயர் ஆயிற்று.

(எ.கா) பாட்டுக்கு உரை எழுதுக.

**13. எண்ணல் அளவை ஆகுபெயர்**

எண்ணைக் குறிக்கும் பெயர், தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது எண்ணல் அளவை ஆகுபெயர் எனப்படும்.

(எ.கா) நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி

இத்தொடரில் உள்ள நான்கு, இரண்டு என்னும் சொற்கள் எண்ணிக்கைப் பொருளை உணர்த்தாது. நான்கு அடிகளாலான நாலடியாரையும், இரண்டடிகளாலான திருக்குறளையும் குறிக்கின்றன. இவ்வாறு எண்ணலளவைப் பெயர் தொடர்புடைய நூல்களுக்கு ஆகிவருவதால் இ∴து எண்ணலளவையாகுபெயர் எனப்படும்.

(எ.கா) தலைக்கு ஒன்று கொடு

**14. எடுத்தல் அளவை ஆகுபெயர்**

எடுத்தல் அளவைப் பெயர், தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது எடுத்தல் அளவை ஆகுபெயர்.

(எகா) கிலோ என்ன விலை?

'கிலோ' என்னும் எடுத்தலளவைப் (நிறுத்தலளவை) பெயர், தொடர்புடைய பொருளுக்கு (அரிசி, பருப்பு, சர்க்கரை ) ஆகி வந்ததால் இது எடுத்தலளவையாகு பெயர் எனப்படும்.

**15. முகத்தல் அளவை ஆகுபெயர்**

முகத்தல் அளவைப் பெயர், தொடர்புடைய பொருளுக்கு ஆகிவருவது முகத்தல் அளவை ஆகுபெயர் எனப்படும்.

(எ.கா) இரண்டு லிட்டர் கொடு

லிட்டர் என்னும் முகத்தல் அளவைப் பெயர், தொடர்புடைய பொருளுக்கு (பால், மண்ணெண்ணெய்) ஆகி வந்தது. எனவே இது முகத்தளலவையாகு பெயர் எனப்படும்.

**16. நீட்டல் அளவை ஆகுபெயர்**

நீட்டல் அளவைப் பெயர் தொடர்புடைய பொருளுக்கு ஆகி வருவது நீட்டல் அளவை ஆகுபெயர் எனப்படும்.

(எ.கா) சட்டைக்கு இரண்டு மீட்டர் வேண்டும்.

மீட்டர் என்னும் நீட்டல் அளவைப் பெயர், தொடர்புடைய பொருளுக்கு (துணி) ஆகி வந்தது. எனவே இது நீட்டல் அளவையாகு பெயர் எனப்படும்.

**வேற்றுமைகள்**

வேற்றுமை என்பது வேறுபாடு ஆகும். பெயர்கள் தாம் ஏற்கும் வேற்றுமை உருபுகளுக்கு ஏற்ப பொருள் வேறுபடுவது வேற்றுமை எனப்படும். அதாவது ஒரு பெயர்ச்சொல்லின் பொருளை மாற்றி காட்டுவது வேற்றுமை ஆகும்.

**வேற்றுமை உருபுகள்**

வேற்றுமை உருபுகள், ஒரு பெயரை சார்ந்தே வரும் இடைச்சொற்கள் ஆகும். அவை தனித்து வருவதில்லை.

ஐ ஆல் ஆன் கண் கு ஒ ஓடு உடன் இன் இல் அது வேற்றுமை வகைகள்

தமிழில் எட்டு வகையான வேற்றுமைகள் காணப்படுகின்றன. அவையாவன,

முதலாம் வேற்றுமை (எழுவாய்)

இரண்டாம் வேற்றுமை (செயப்படுபொருள்)

மூன்றாம் வேற்றுமை (கருவி)

நான்காம் வேற்றுமை (கொடை)

ஐந்தாம் வேற்றுமை (நீங்கல்)

ஆறாம் வேற்றுமை (உடைமை)

ஏழாம் வேற்றுமை (இடம்)

எட்டாம் வேற்றுமை (விளி)

**1. முதலாம் வேற்றுமை (எழுவாய் வேற்றுமை)**

முதலாம் வேற்றுமைக்கு உருபுகள் ஏதுமில்லை. அதாவது உருபுகள் ஏதும் இன்றி எழுவாய் தனித்து நின்று பொருள் தருவது முதலாம் வேற்றுமை எனப்படும். இது எழுவாய் வேற்றுமை என்றும் அழைக்கப்படுகிறது.

அம்மா சமைத்தார்.

பசு புல் மேய்ந்தது.

**2. இரண்டாம் வேற்றுமை (செயப்படுபொருள்)**

பெயர்ச்சொல்லை செயப்படுபொருளாக மாற்றிக் காட்டுவது இரண்டாம் வேற்றுமை ஆகும். இதன் உருபு ‘‘ஐ’’ என்பதாகும்.

கபிலர் பாரியைப் பாடினார்.

இரண்டாம் வேற்றுமை உருபானது ஆறு பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது. அவையாவன,

ஆக்கல் பொருள்

அழித்தல் பொருள்

அடைதல் பொருள்

நீத்தல் பொருள்

ஒத்தல் பொருள்

உடமைப் பொருள்

ஆக்கல் பொருள்

ஒரு பொருளை உருவாக்குதல் பொருளில் அதாவது ஆக்கல் பொருளில் இரண்டாம் வேற்றுமை உருபு பயன்படுத்தப்படுகிறது.

குயவன் பானையை செய்தான்.

அழித்தல் பொருள்

ஒரு பொருளை அழித்தல் பொருளில் இரண்டாம் வேற்றுமை உருபு பயன்படுத்தப்படுகிறது.

கந்தன் மரத்தை வெட்டினான்.

அடைதல் பொருள்

ஒன்றை அடைதல் பொருளிலும் இரண்டாம் வேற்றுமை உருபு பயன்படுத்தப்படுகிறது.

கந்தன் மதுரையை அடைந்தான்.

நீத்தல் பொருள்

ஒன்றை விட்டு நீங்குதல் அல்லது விலகுதல் என்பவற்றை கூறும் நீத்தல் பொருளிலும் இரண்டாம் வேற்றுமை உருபு பயன்படுத்தப்படுகிறது.

கந்தன் இல்லறத்தை துறந்தான்.

ஒத்தல் பொருள்

ஒரு பொருளை அல்லது ஒருவரை இன்னொன்றுடன் ஒப்பிடும் முறையான ஒத்தல் பொருளிலும் இரண்டாம் வேற்றுமை உருபு பயன்படுத்தப்படுகிறது.

கந்தன் அவனது தந்தையை போன்றவன்.

உடமைப் பொருள்

உடமைப் பொருளிலும் இரண்டாம் வேற்றுமை உருபு பயன்படுத்தப்படுகிறது.

கண்ணன் பெரும்புகழைக் கொண்டவன்.

**3. மூன்றாம் வேற்றுமை (கருவி)**

மூன்றாம் வேற்றுமை ஆனது ''ஆல், ஆன், ஒடு, ஓடு'' எனும் உருபுகளை கொண்டுள்ளது. இது கருவிப்பொருள், கருத்தாப் பொருள், உடன்நிகழ்ச்சிப் பொருள் எனும் மூன்று பொருட்களின் அடிப்படையில் பயன்படுத்தப்படுகிறது.

**1. கருவிப்பொருள்**

கருவிப் பொருளானது முதல்கருவி, துணைக்கருவி என இருவகைப்படும்.

முதற்கருவி

முதற்கருவி உதாரணம்:

மரத்தால் சிலை செய்தான்.(ஆல்)

துணைக்கருவி

உளியால் சிலை செய்தான்.(ஆல்)

**2. கருத்தாப் பொருள்**

கருத்தா பொருள் என்பது செய்பவரை குறிப்பதாக அமைந்துள்ளது. இது இரண்டு வகைப்படும்.

ஏவுதல் கருத்தா

கரிகாலனால் கல்லணை கட்டப்பட்டது.(ஆல்)

இயற்றுதல் கருத்தா

திருவள்ளுவரால் திருக்குறள் இயற்றப்பட்டது. (ஆல்)

**3. உடன்நிகழ்ச்சிப் பொருள்**

தாயொடு மகள் வந்தாள். (ஒடு)

கண்ணனோடு அர்ஜுனன் வந்தான். (ஓடு)

**4. நான்காம் வேற்றுமை (கொடை)**

நான்காம் வேற்றுமை உருபு "கு" ஆகும். இந்நான்காம் வேற்றுமையானது பின்வரும் பொருளிலும் கையாளப்படுகிறது.

கொடை

மணி கண்ணனுக்கு பரிசு கொடுத்தான்.

பகை

துரிதஉணவு மனிதனுக்கு பகை

நட்பு

அர்ஜுனனுக்கு கண்ணன் நண்பன்.

தகுதி

கவிதைக்கு அழகு கற்பனை.

அதுவாதல்

**5. ஐந்தாம் வேற்றுமை (நீங்கல்)**

ஐந்தாம் வேற்றுமை உருபுகளாக " இல், இன்" காணப்படுகின்றது. ஐந்தாம் வேற்றுமையானது பல்வேறு பொருள்களில் அமைகிறது. அவையாவன,

நீக்கல்

தலையின் இழிந்த மயிர்.

ஒப்பு

பாம்பின் நிறம் ஒரு வகை.

எல்லை

ஊரின் கிழக்கே சத்திரம் அல்லது.

ஏது

சிலேடை பாடுவதில் வல்லவர் காளமேகம்.

**6. ஆறாம் வேற்றுமை (உடைமை)**

ஆறாம் வேற்றுமை உருபுகளாக "அது, ஆது, அ" என்பவை காணப்படுகின்றன. இந்த ஆறாம் வேற்றுமை உரிமைப் பொருளில் வருகிறது.

கண்ணனது வீடு. (அது)

**7. ஏழாம் வேற்றுமை (இடம்)**

காலா வேற்றுமை உருபாக ''கண்'' என்பது காணப்படுகிறது. இது எமது உடலில் காணப்படும் கண் எனும் உறுப்பை குறைக்காது. இது பழங்காலங்களில் பயன்படுத்தப்பட்ட வேற்றுமை உருபாக காணப்படுகிறது.

எங்கள் ஊரின் கண் மழை பெய்தது.

இரவின் கண் மழை பெய்தது.

**8. எட்டாம் வேற்றுமை (விளி வேற்றுமை)**

எட்டாம் வேற்றுமையானது படர்க்கை பெயரை முன்னிலை பேராக மாற்றும் வேற்றுமை ஆகும். இதற்கு உருபுகள் இல்லை. இது ஒரு பெயரை விளித்துக் கூற பயன்படுத்தப்படுகிறது

கந்தன் —, கந்தா

**வினைச்சொல்லின் வகைகள்**

எந்த ஒரு மொழியிலும் ஒரு தொடருக்கு இன்றியமையாத உறுப்பாகத் திகழ்வது வினைச் சொல்லே. தமிழில் வந்தான். வந்தாள், வந்தார் போன்ற பால்காட்டும் வினைமுற்றுச் சொற்கள் தனியே நின்று தொடர்களாகவும் அமைகின்றன. அத்தோடன்றி இத்தகு சொற்கள், பல இலக்கணக் கூறுகளை உணர்த்தும் ஆற்றல் வாய்ந்தவையாகவும் உள்ளன. சான்றாக, வந்தான் என்பது வருதல் என்ற தொழிலையும், தொழில் செய்தவனையும், தொழில் நிகழ்ந்த காலத்தையும் ஒருசேர உணர்த்தும் சொல்லாகத் திகழ்கின்றது. இவ்வாறு ஒரே வினைச்சொல் பல்வேறு இலக்கணக் கூறுகளை விளக்கி நிற்பதால் சொல் பாகுபாட்டில் அது முக்கியமான இடத்தைப் பெறுகிறது.

**வினைச்சொல் இலக்கணம்**

வினைச்சொல் வேற்றுமை உருபுகளை ஏற்காது காலம் காட்டும் என்கிறார் தொல்காப்பியர். (தொல். சொல். 200)

வினைச்சொற்களில் காலத்தை வெளிப்படையாகக் காட்டும் சொற்களே அல்லாமல், காலத்தைக் குறிப்பாகக் காட்டும் சொற்களும் வழங்கின.

**வினைச்சொல் வகைகள்**

வினைச்சொல்லானது வினை, குறிப்பு என இரு வகைப்படும். இவ்விரு சொற்களும் காலம் காட்டும் என்கிறார் தொல்காப்பியர். (தொல். சொல். 203)

வினை, குறிப்பு என்று தொல்காப்பியர் குறிப்பிட்ட இருவகை வினைச்சொற்களைப் பிற்கால இலக்கண ஆசிரியர்கள் முறையே தெரிநிலை வினை,

குறிப்பு வினை என்று தெளிவாகக் குறிப்பிடலாயினர். காலத்தை வெளிப்படையாகக் காட்டுவது தெரிநிலை வினை.

(எ.டு) உண்டான் - இறந்தகாலம்

உண்ணாநின்றான் - நிகழ்காலம்

உண்பான் - எதிர்காலம்

பொருளை உணர்த்தும் பெயர், பண்பை உணர்த்தும் பெயர் முதலியவற்றின் அடியாகத் தோன்றிக் காலத்தைக் குறிப்பாகக் காட்டுவது குறிப்பு வினை எனப்படும்.

(எ.டு) பொன் + அன் = பொன்னன்

நல் + அன் = நல்லன்

நல்லன் என்ற குறிப்பு வினை நேற்று நல்லன், இன்று நல்லன், நாளை நல்லன் என்று மூன்று காலத்தையும் குறிப்பாகக் காட்டுவதைக் காணலாம்.

பொருளையோ பண்பையோ உணர்த்தாத அல்லன், இலன், இலர் போன்ற குறிப்பு வினைமுற்றுகளும் உண்டு.

**திணை அடிப்படையில் வினைப் பாகுபாடு**

தொல்காப்பியர் தெரிநிலை வினை, குறிப்பு வினை என்று இருவகையாக அமையும் வினைச்சொற்களைத் திணை அடிப்படையில் உயர்திணை வினைகள், அஃறிணை வினைகள், விரவு வினைகள் (இரு திணைப் பொது வினைகள்) என மூவகையாகப் பிரிக்கிறார். இந்த மூவகைப்பட்ட வினைகளையும் வினைமுற்று, எச்சம் என்ற இருவகை அமைப்பில் விளக்கிக் காட்டுகிறார்.

**வினைமுற்றுகள்**

வினைமுற்றுகள், தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என இருவகைப்படும். தொல்காப்பியர் காலத்தில் தெரிநிலை வினைமுற்றுகள் இருவகை அமைப்பில் தோன்றின.

1. வினையடி + காலம் காட்டும் இடைநிலை + ஈறு (விகுதி)

(எ.டு) செய் + த் + ஆன் = செய்தான்

2. வினையடி + ஈறு

(எ.டு) உண் + உம் = உண்ணும் (அவன் உண்ணும்.)

பெயர் அல்லது பண்பு அடிச்சொல் + ஈறு என்ற அமைப்பில் குறிப்பு வினைமுற்றுகள் தோன்றின.

(எ.டு) பொன் + அன் = பொன்னன்

நல்+ அன் = நல்லன்.

வினைமுற்றுகளில் ஈறு கட்டாயம் இடம் பெற வேண்டும் என்பர் தொல்காப்பியர் (தொல். சொல். 10). வினைமுற்றுகள் ஈறு (விகுதி) கொண்டே திணை, பால், இடம், எண் ஆகியவற்றை உணர்த்துகின்றன. எனவே தொல்காப்பியர் ஒவ்வொரு வினைமுற்றையும் பற்றிக் கூறும் பொழுது அதற்குரிய ஈறுகளை எல்லாம் குறிப்பிடுகிறார்.

**உயர்திணை வினைமுற்றுகள்**

தன்மை ஒருமை, தன்மைப் பன்மை, படர்க்கை ஆண்பால், படர்க்கைப் பெண்பால், படர்க்கைப் பலர்பால் வினைமுற்றுகள் ஆகிய ஐந்தும் உயர்திணைக்கு உரியன. இவற்றிற்கு உரிய ஈறுகள் வருமாறு :

தன்மை ஒருமை - கு, டு, து, று, என், ஏன், அல் (7)

தன்மைப் பன்மை - கும், டும், தும், றும், அம், ஆம், எம், ஏம் (8)

படர்க்கை ஆண்பால் - அன், ஆன் (2)

படர்க்கைப் பெண்பால் - அள், ஆள் (2)

படர்க்கைப் பலர்பால்- அர், ஆர், ப, மார் (4)

இந்த 23 ஈறுகள் தெரிநிலை வினைமுற்றுக்கே கூறப்பட்டவை. இவற்றில் ஏற்புடையன குறிப்பு வினைமுற்றிலும் வரும்.

(எ.டு) உண்டேன், கரியேன் - தன்மை ஒருமை வினைமுற்று

உண்டேம், கரியேம் - தன்மைப் பன்மை வினைமுற்று

உண்டான், கரியன் - படர்க்கை ஆண்பால் வினைமுற்று

உண்டாள், கரியள் - படர்க்கைப் பெண்பால் வினைமுற்று

உண்டனர், கரியர் - படர்க்கைப் பலர்பால் வினைமுற்று

யார் எனும் வினாப்பொருள் உணர்த்தும் குறிப்பு வினைமுற்று உயர்திணையில் மூன்று பாலுக்கும் உரியது. எ-டு அவன் யார், அவள் யார், அவர் யார்?

**அ.ஂ.றிணை வினைமுற்றுகள்**

படர்க்கை ஒருமை, (ஒன்றன்பால்) படர்க்கைப் பன்மை (பலவின்பால்) ஆகிய இரண்டு வினைமுற்றுகளும் அ.ஂ.றிணைக்கு உரியன. படர்க்கை ஒருமை வினைமுற்று து, று, டு என்னும் மூன்று ஈறுகளையும், படர்க்கைப் பன்மை வினைமுற்று அ, ஆ, வ என்னும் மூன்று ஈறுகளையும் இறுதியில் கொண்டு வரும். இந்த ஈறுகளில் சில குறிப்பு வினைமுற்றுகளிலும் வரும்.

(எ.டு) உண்டது, கரியது - அ.ஂ.றிணை ஒருமை வினைமுற்று

உண்டன, கரியன - அ.ஂ.றிணைப் பன்மை வினைமுற்று

எவன் எனும் வினாக் குறிப்பு வினைமுற்று அ.ஂ.றிணையில் இரண்டு பாலுக்கும் உரியது.

(எ.டு) அ.ஂ.து எவன்? அவை எவன்?

**இருதிணைப் பொது வினைமுற்றுகள்**

முன்னிலை வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று, செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று ஆகியன உயர்திணை, அ.ஂ.றிணை என்னும் இரு திணைகளுக்கும் பொதுவானவை. மேலும் இல்லை, வேறு எனும் குறிப்பு வினைமுற்றுகளும் இருதிணைப் பொதுவானவையேயாகும்.

**முன்னிலை வினைமுற்று**

இது முன்னிலை ஒருமை வினைமுற்று, முன்னிலைப் பன்மை வினைமுற்று என இருவகையாக வரும். இவை பால் காட்ட மாட்டா ஂ ஒருமை பன்மை ஆகிய எண் வேறுபாடு மட்டுமே காட்டும்.

முன்னிலை ஒருமை வினைமுற்று இ, ஐ, ஆய் என்னும் மூன்று ஈறுகளையும், பன்மை வினைமுற்று இர், ஈர், மின் என்னும் மூன்று ஈறுகளையும் பெற்று வரும். குறிப்பு வினைமுற்று இவற்றுள் ஏற்பன கொண்டு வரும்.

(எ.டு) உண்டனை, உண்டாய், கரியை - முன்னிலை ஒருமைவினைமுற்று.

உண்டீர், உண்மின், கரியீர் - முன்னிலைப் பன்மை வினைமுற்று.

மேலும் நட, வா, போ, உண், செய் போன்ற தெரிநிலை வினையடிகள் எல்லாம் முன்னிலைக்கு உரியன. இவை ஏவல் பொருளில் வழங்கும் ஒருமையை மட்டும் உணர்த்தும் ஂ எதிர்காலம் காட்டும்.

**வியங்கோள் வினைமுற்று**

வியங்கோள் வினைமுற்று படர்க்கையில் மட்டுமே வரும். தன்மையிலும் முன்னிலையிலும் வாராது என்கிறார் தொல்காப்பியர். க, அல் என்னும் ஈறுகள் வியங்கோள் வினைமுற்று விகுதிகளாக அவர் காலத்தில் வழங்கின.

(எ.டு) அவன் செல்க, அவள் செல்க, அது செல்க, கூறல் (கூறுக).

சிறுபான்மையாக 'நீ வாழ்க' என முன்னிலையிலும், 'யான் உறைக' எனத் தன்மையிலும் வியங்கோள் வினைமுற்று வருவதை உரையாசிரியர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

**செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று**

செய்யும் எனும் வாய்பாட்டு வினைமுற்று நிகழ்காலம் மட்டும் காட்டும். இது பலர்பால் படர்க்கை, முன்னிலை, தன்மை ஆகியவற்றில் வாராது. ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்னும் படர்க்கைப் பெயர்களோடு மட்டுமே பொருந்தி வரும்.

(எ.டு) அவன் உண்ணும், அவள் உண்ணும், அது உண்ணும், அவை உண்ணும்.

**எச்சங்கள்**

தொல்காப்பியர் மேற்கூறிய இருதிணைப் பொது வினைமுற்றுகளைக் கூறிய பின்னர் எச்சங்களைப் பற்றிக் கூறுகிறார். வினைமுற்றில் ஈறு குறைந்து நின்றால் அது எச்சமாகும். எச்சங்களும் இருதிணைப் பொதுவினைகளேயாகும்.

இவ்வாறு வரும் எச்ச வினைகள் ஒரு வினையைக் கொண்டு கொண்டு முடியும் போது வினையெச்சம் என்றும், ஒரு பெயரைக் கொண்டு முடியும் போது பெயரெச்சம் என்றும் அழைக்கப்படுகின்றன. தொல்காப்பியர் இவ்விரண்டு எச்சங்களையும் முறையே வினை எஞ்சு கிளவி என்றும் பெயர் எஞ்சு கிளவி என்றும் குறிப்பிடுகிறார்.

(எ.டு) செய்து வந்தான் (வினையெச்சம்)

செய்த சாத்தன் (பெயரெச்சம்)

**வினையெச்சம்**

தொல்காப்பியர் வினையெச்சம் என்றால் என்ன என்பதை வரையறை செய்யவில்லை. ஆனால் அதன் அமைப்பைப் பல வாய்பாடுகள் கொண்டு விளக்கிக் காட்டுகிறார். செய் என்ற வினையடியிலிருந்து வினையெச்ச வாய்பாடுகளை

உருவாக்கிக் காட்டுகிறார். அவர் குறிப்பிடும் வினையெச்ச வாய்பாடுகள் மொத்தம் ஒன்பது. இவற்றை,

**செய்து, செய்யூ, செய்பு, செய்தென,**

**செய்யியர், செய்யிய, செயின், செய, செயற்கு என**

**அவ்வகை ஒன்பதும் வினை எஞ்சு கிளவி (தொல்.சொல். 230)**

என்ற நூற்பாவில் கூறுகிறார். அவர் காலத் தமிழில் வழங்கிய வினையெச்சங்களை எல்லாம் இந்த ஒன்பது வாய்பாடுகளில் அடக்கிக் காட்டுகிறார். இவற்றைச் சான்றுகளுடன் காண்போம்.

1. செய்து- உண்டு வந்தான்
2. செய்யூ- உண்ணூ வந்தான் (உண்டு வந்தான்)
3. செய்பு - நகுபு வந்தான் (சிரித்தவாறு வந்தான்)
4. செய்தென - மருந்து உண்டெனப்பிணி நீங்கிற்று
5. செய்யியர் - உண்ணியர் வந்தார் (உண்ண வந்தார்)
6. செய்யிய - உண்ணிய வந்தான் (உண்ண வந்தான்)
7. செயின் - உண்ணின் மகிழ்வேன் (உண்டால் மகிழ்வேன்)
8. செய - உண்ண வந்தான்
9. செயற்கு - உணற்கு வந்தான் (உண்பதற்கு வந்தான்)

**வினையெச்சம் அடுக்கி வரல்**

வினையெச்சங்கள் பலவாக ஒரு தொடரில் அடுக்கியும் வரும். அவ்வாறு வரினும் ஒரு வினை கொண்டே முடிய வேண்டும் என்கிறார் தொல்காப்பியர். (தொல்.சொல். 235)

(எ.டு) உண்டு தின்று ஆடிப் பாடி மகிழ்ந்து வந்தான்.

**பெயரெச்சம்**

தொல்காப்பியர் செய்யும், செய்த என்னும் இரண்டு வாய்பாடுகளை மட்டுமே பெயரெச்சத்திற்குக் கூறுகிறார். இந்த இரு வாய்பாடுகளைக் கொண்டு வரும் பெயரெச்ச வினைகள் நிலம் (இடம்), பொருள் (செயப்படுபொருள்), காலம், கருவி, வினைமுதல் (தொழில் செய்பவன்), வினை (தொழிலை உணர்த்தும் பெயர்) ஆகிய ஆறனை உணர்த்தும் பெயர்களைக் கொண்டு முடியும் என்கிறார் தொல்காப்பியர். இவற்றிற்கான

உண்ணும், உண்ட - வீடு (நிலம்)

- சோறு (பொருள்)

- நாள் (காலம்)

- வட்டில் (கருவி)

- சாத்தன் (வினைமுதல்)

- ஊண் (வினை)

**குறிப்பு வினையெச்சம், குறிப்புப் பெயரெச்சம்**

தொல்காப்பியர் எல்லா வினைச்சொற்களும் தெரிநிலையிலும் குறிப்பிலும் வரும் என்கிறார். எனவே வினையெச்சங்களும் பெயரெச்சங்களும் குறிப்பு வினையிலும் வரும் என்பது அவர் கருத்து.

(எ.டு) நன்கு பேசினான், இனிது பேசினான் (குறிப்பு வினையெச்சம்)

நல்ல மகன், இனிய மனைவி (குறிப்புப் பெயரெச்சம்)

இதுகாறும் தொல்காப்பியர் காலத்தில் வினைச்சொல் எவ்வாறு அமைந்திருந்தது என்பதைப் பார்த்தோம். இனி, அவர் காலத்தில் இடைச்சொற்களும் உரிச்சொற்களும் எவ்வாறு வழங்கின என்பதைப் பற்றிக் காண்போம்.

**இடைச்சொல்**

தனித்து இயங்காமல் பெயருடன் அல்லது வினையுடன் சேர்ந்து வரும் சொற்கள் இடைச்சொற்கள் எனப்படும்.

இவை பெயர்ச்சொல்லைப் போன்றோ வினைச்சொல்லைப் போன்றோ தனித்து நின்று பொருள் தருவன அல்ல. பெயர்களோடும் வினைகளோடும் சேர்ந்து அவற்றின் இடமாகவே வரும்.

பெயர் வினைகளைச் சார்ந்து அவற்றை இடமாகக் கொண்டு வருவதனால் இவை இடைச்சொற்கள் ஆகின்றன.

**இடைச்சொல்லின் வகைகள்**

இடைச் சொற்களானது அவற்றின் அமைப்பின் அடிப்படையிலும், பிரயோகப்பாட்டின் அடிப்படையிலும் எட்டு வகைப்படும். அவை பின்வருமாறு காணப்படுகிறது.

**வேற்றுமை உருபுகள்**

காலம் காட்டும் இடைநிலைகள் விகுதிகள்

சாரியைகள்

ஒப்புருபுகள் (உவம உருபுகள்)

தத்தம் பொருளை உணர்த்துவன

இசை நிறைப்பன

அசை நிலைகள்

குறிப்புப் பொருளை உணர்த்துவன

**உரிச்சொற்கள்**

உரிச்சொற்கள் பெயர்களையும் வினைகளையும் சார்ந்து வந்து பொருள் உணர்த்துகின்றன. உரிச்சொல் இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்களுக்கு உரியதாய் வரும். உரிச்சொற்கள் ஒவ்வொன்றும் தனித்த பொருள் உடையவை.

ஆனால் இவை தனித்து வழங்கப்படுவதில்லை. உரிச்சொற்கள் செய்யுளுக்கே உரியன என்று நன்னூலார் கூறுகிறார். அனைத்தும் பொருள் உடையவை.

ஒரு சொல் பல பொருளுக்கு உரியவை

கடிமலர் – மணம் மிக்க மலர்

கடிநகர் - காவல் மிக்க நகர்

கடிவிடுவதும் - விரைவாக விடுவோம்

கடி நனி - கூர்மையான நுனி

பல சொல் ஒரு பொருள் உறு, தவ, நனி என்ற மூன்று உரிசொற்களும் மிகுதி என்னும் பொருளில் வருகின்றன.

உறுபசி தவச்சிறிது நனி நன்று

உரிச்சொற்கள், பெயரையும் வினையையும் சார்ந்து அவற்றிற்கு முன்னால் வந்து பொருள் உணர்த்துகின்றன.

1) ஒரு சொல் பல பொருள்களுக்கு உரியதாய் வருவதும் உண்டு

2) பல சொல் ஒரு பொருளுக்கு உரியதாய் வருவதும் உண்டு

மழ, குழ என்பவற்றிலிருந்து உருவானவை மழலை, குழந்தை போன்ற சொற்கள்.

உவப்பு (உவகை), பசப்பு (நிறம் மங்குதல்), பயப்பு (பயன்) போன்றவை அப்படியே பயன்படுகின்றன.

செழுமை என்பது செழிப்பு, செழித்த, செழிக்கும் எனப் பெயராகவும், வினையாகவும் பயன்படுகிறது.

விழுமம் என்பது விழுப்பம், விழுமுதல், விழுமிய எனப் பெயராகவும் வினையாகவும் பயன்படுகிறது.

பிற உரிச் சொற்களும் அவ்வாறே தற்காலத்தில் பயன்படுகின்றன.

அன்று என்பது ஒருமைக்கும் அல்ல என்பது பன்மைக்கும் உரியன. இது பழம் அன்று இவை பழங்கள் அல்ல. எத்தனை என்பது எண்ணிக்கையைக் குறிக்கும். எத்துணை என்பது அளவைவையும் காலத்தையும் குறிக்கும்.

எத்தனை நூல்கள் வேண்டும்?

எத்துணை பெரிய மரம், எத்துணை ஆண்டு பழமையானது.

**வினாக்கள்**

**I சிறிய வினாக்கள்**

1. உடம்படுமெய் எழுத்துக்கள் எவை? சான்று தருக.
2. பெயர்ச்சொல் என்றால் என்ன? வகைளைச் சான்றுடன் விளக்குக.
3. வினைச் சொற்களின் வகைகள் யாவை?
4. இடைச்சொல், உரிச்சொல் - விளக்கம் தருக.
5. மொழிக்கு முதல் எழுத்துக்கள் எவை? சான்று தருக.

**II பெரிய வினாக்கள்**

1. எழுத்து என்றால் என்ன? வகைகளை சான்றுடன் விளக்குக.
2. வல்லினம் மிகும், மிகா இடங்களைச் சான்றுடன் விளக்குக.
3. ஆகுபெயர் என்றால் என்ன? வகைகளைச் சான்றுடன் விளக்குக.
4. வேற்றுமையின் வகைகளைச் சான்றுடன் விளக்குக.
5. மொழிக்கு முதல், இறுதியில் வரும் எழுத்துக்களை சான்றுடன் விளக்குக.

## அலகு - 2

## அகப்பொருள்

ஓர் ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையே ஏற்படும் காதல் உணர்வை மையமாகக் கொண்டு அகப்பொருள் இலக்கணம் அமைந்துள்ளது. இதில் ஆணைத் தலைவன் என்றும் பெண்ணைத் தலைவி என்றும் கூறுவர். தலைவியின் தோழியும் அகப்பொருள் பாடல்களில் முக்கிய இடம் வகிக்கும் ஒரு பாத்திரம் ஆவாள். காதல் பற்றிப் பாடும்போது தலைவன் தலைவி என்று பொதுவாகப் பாடுவார்களே தவிர ஒருவருடைய இயற்பெயரைச் சுட்டிப் பாடுவதில்லை. காதல் உணர்ச்சி எல்லோருக்கும் பொது என்பதால் தனி ஒருவருடைய பெயரைச் சுட்டிப் பாடுவதில்லை. அகப்பொருள் பாடல்கள் நாடகப் பாங்கிலான தன்மையைக் கொண்டிருக்கும். எல்லாப் பாடல்களும் தலைவன், தலைவி, தோழி முதலியவர்களில் யாராவது ஒருவர் கூறுவதாக அமைந்திருக்கும். ஒரே பாடலில் இருவர் உரையாடுவது போன்ற பாடல்களும் கலித்தொகையில் உண்டு. ஒவ்வொரு பாடலுக்கும் பிற்காலத்தில் திணை,துறை வகுத்துக் காட்டியுள்ளனர்.

தமிழின் முதல் இலக்கண நூல் என கருதப்படும் தொல்காப்பியத்தில், அதன் ஆசிரியர் தொல்காப்பியர், அகத்திணை இயலை ஏழு திணைகளாக பகுத்துள்ளார். அவை கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என்பனவாகும். அவற்றுள் ஒருதலைக்காதல் எனும் கைக்கிளை, பொருந்தா காமம் எனும் பெருந்திணை தவிர்த்த பிற ஐந்து திணைகளும், காளை ஒருவனுக்கும் கன்னி ஒருத்திக்கும் இடையே முகிழ்த்து வளரும் காதல் அன்பை பற்றி பாடும் திணைகள் ஆகும். இந்த அன்பின் எழுச்சியால் தலைவன், தலைவியரின் உள்ளத்தே தோன்றுகின்ற இன்பமும் துன்பமும், களிப்பும் கலக்கமும் இணைந்த வாழ்வியலை, இந்த ஐந்து திணைகளில் பிரித்து இலக்கியங்கள் பாடுகின்றன். இப்பாடல்கள், பெரும்பாலும் அவர் உள்ளத்திலே நிகழும் நினைவுப் போராட்டங்களாக தம் நெஞ்சுக்கு சொல்லுவாராக அமைந்தாலும், நெருங்கிய, தோழி, செவிலி, பாணன், பாங்காயினோர் போன்றோரிடம் தம் உள்ளம் திறந்து உரைப்பாராகவும் இவை விளங்குகின்றன.

**அகப்பொருள் திணைகள்**

குறிஞ்சித்திணை

முல்லைத்திணை

மருதத்திணை

நெய்தல்திணை

பாலைத்திணை

இந்த ஐந்து திணைகளுக்கும் உரிய அகப்பொருள் இலக்கணம் மூன்று வகைப்படும். அவை,

முதற்பொருள்

கருப்பொருள்

உரிப்பொருள்

ஆகியன ஆகும்.

**முதற்பொருள்**

தமிழ் இலக்கணத்தில் முதற்பொருள் என்பது சொற்களினால் உணரப்படும் மூன்று பொருள் வகைகளுள் ஒன்றாகும்.கருப்பொருள், உரிப்பொருள் என்பன ஏனைய இரண்டு வகைகள். முதற்பொருள் இருவகைப்படும். இவை காலம், நிலம் என இருவகைப்படும். ‘‘நிலம்’’ என்பதனுள் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐந்தும், ‘‘காலம்’’ என்பதனுள் மாத்திரை, நாழிகை, யாமம், பொழுது, நாள், பக்கம், திங்கள், இருது, அநயம், ஆண்டு, உகம் என்னும் பலவகையானவையும் அடங்கும்

**நிலம்**

தொல்காப்பியம் காடு, நாடு, மலை, கடல் என நான்கு வகை நிலங்களைக் குறிப்பிடுகிறது. தமிழ் இலக்கணத்தில் இவை ஐந்து திணைகளாக வகுக்கப்பட்டுள்ளன. இவை நிலத்திணைகள் எனப்படுகின்றன. இவற்றுள்,

மலையும் மலை சார்ந்த நிலமும் குறிஞ்சி எனப்படும்.

காடும் காடுசார்ந்த நிலமும் முல்லை எனப்படும்.

வயலும் வயல் சார்ந்த நிலமும் மருதம் எனப்படும்

கடலும் கடல் சார்ந்த நிலமும் நெய்தல் எனப்படும்.

மணலும் மணல் சார்ந்த பகுதிகளும் பாலை எனப்படும்.

**காலம்**

காலம் அல்லது பொழுதை பெரும் பொழுது, சிறு பொழுது என இரண்டு பெரும் பிரிவுகளாகத் தமிழ் இலக்கணம் வகுத்து உள்ளது.

பெரும்பொழுது: கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், வேனில் என அறுவகை.

சிறு பொழுது: மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல், பிற்பகல் என்பன.

**திணையும் காலமும்**

நிலத்திணையின் தன்மைக்கு ஏற்ப ஒவ்வொரு திணைக்கும் அவற்றுக்கு உரிய காலங்கள் உள்ளன.

முல்லைத் திணை: கார்காலமும் மாலைப் பொழுதும்

குறிஞ்சித் திணை: கூதிர் காலமும் யாமப் பொழுதும்

மருதத் திணை: வைகறையும் எல்லாப் பருவ காலங்களும்

நெய்தல் திணை: பிற்பகலும் எல்லாப் பருவ காலங்களும்

பாலைத் திணை: நண்பகலும் வேனிற் காலமும்

**கருப்பொருள்**

தமிழ் இலக்கணத்தில் கருப்பொருள் என்பது சொற்களினால் உணரப்படும் மூன்று பொருள் வகைகளுள் ஒன்றாகும்.முதற்பொருள், உரிப்பொருள் என்பன ஏனைய இரண்டு வகைகள். கருப்பொருள்கள் எத்தனை என்பது குறித்துத் தெளிவாகக் குறிப்பிடாத தொல்காப்பியம் தெய்வம், உணா, மா, மரம், புள், பறை, செய்தி, யாழின் பகுதி என்று எட்டு வைகளின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளதுடன், அவ்வகை பிறவும் கருப்பொருள் ஆகும் என்கிறது. இது பிற்காலத்தில் பதினான்கு என வரையறுக்கப்பட்டது. இப் பதினான்கு கருப்பொருள் வகைகளும் பின்வருமாறு

ஆரணங்கு (தெய்வம்), உயர்ந்தோர், அல்லோர் (உயர்ந்தோர் அல்லாதவர்), புள் (பறவை), விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணா (உணவு), பறை, யாழ், பண், தொழில்

**உரிப்பொருள்**

தமிழ் இலக்கணத்தில் உரிப்பொருள் என்பது சொற்களினால் உணரப்படும் மூன்று பொருள் வகைகளுள் ஒன்றாகும்.முதற்பொருள், கருப்பொருள் என்பன ஏனைய இரண்டு வகைகள். மக்கள் நிகழ்த்தும் ஒழுக்கமே உரிப்பொருள் ஆகிறது. பண்டைத் தமிழ் இலக்கியங்கள் ஐந்து திணைகளின் நிலப்பகுதிகள் சார்ந்த கருப்பொருள்களிலேயே அமைந்திருந்தன. அவற்றில் அந்தந்த நிலப்பகுதிக்குரிய ஒழுக்கங்களும் இடம்பெற்றிருந்தன.

இவ்வொழுக்கங்கள் ஐந்தும் அவற்றிற்கான நிமித்தங்கள் (காரணங்கள்) ஐந்துமாக உரிப்பொருள்கள் பத்து உள்ளன. இவ்வொழுக்கங்கள்:

புணர்தல்: ஒன்றுசேர்தல்

இருத்தல்: பிரிவைப் பொறுத்து இருத்தல்

ஊடல்: தலைவி தலைவன் மீது கோபம் கொள்ளல்

இரங்கல்: பிரிவு தாங்காது தலைவி வருந்துதல்

பிரிதல்: தலைவன் தலைவியைப் பிரிதல்

என்பனவாகும். ஐந்து நிலத்திணைகளுக்கும் அவற்றின் இயல்புக்கு ஏற்ப உரிப்பொருள்கள் உள்ளன. அவை வருமாறு:

குறிஞ்சி: புணர்தலும், புணர்தல் நிமித்தமும்.

பாலை: பிரிதலும், பிரிதல் நிமித்தமும்.

முல்லை: இருத்தலும், இர்த்தல் நிமித்தமும்.

மருதம்: ஊடலும், ஊடல் நிமித்தமும்.

நெய்தல்: இரங்கலும், இரங்கல் நிமித்தமும்

ஒரு அகத்திணைப் பாடல் இன்ன திணையைச் சார்ந்தது எனத் தீர்மானிப்பது உரிப்பொருளே. உரிப்பொருள் மயங்குவதில்லை. முதற்பொருளில் நிலம் மயங்காது. பிற மயங்கும். இது திணை மயக்கம் எனப்படும்.

## அகப்பொருள் திணைகள்

### குறிஞ்சித்திணை

குறிஞ்சியாவது, ‘மலையும் மலைசார்ந்த இடங்களும்’, இயற்கை அழகும், வளங்களும் நிறைந்தனவாக, இளம் பருவத்தாரிடையே ‘புணர்தலும் புணர்தல் நிமித்தமும்’ செல்லவும், இவைபற்றி எல்லாம் நினைக்கவும், அணுக்கரிடையே (தமக்கு நெருக்கமானவர்) தம் உணர்வை எடுத்து கூறவும் பொருந்துவனவாக அமைந்திருக்கும் நிலப்பகுதிகள். எனவே, தனித்து வேட்டை மேல் செல்லும் இளைஞனும், புனம் காத்து நிற்கும் கன்னியும் ஒருவரை ஒருவர் கண்டு காதலுற்று ஒன்றுபடுவதற்கு ஏற்ற நிலைக்களமாகி, இந்த துணிவு நிகழ்வதற்கு ஏற்ற வாழ்வியல் அமைந்தது குறிஞ்சி ஆகும் குறிஞ்சித்திணைக்கு கூதிர்காலம் மற்றும் முன்பனி காலம் பெரும்பொழுதுகளாகவும் யாமம் சிறுபொழுதாகவும் அமையும்.

### குறிஞ்சியின் கருப்பொருட்கள்

| | |
|---|---|
| கடவுள் | முருகக்கடவுள் |
| மக்கள் | பொருப்பன், வெற்பன், சிலம்பன், குறத்தி, குறவன், கொடிச்சி, வேம்பன், கானவர் |
| புள் | கிளி, மயில் |
| விலங்கு | புலி, கரடி, யானை |
| ஊர் | சிறுகுடி |
| நீர் | அருவி நீர், சுனை நீர் |
| பூ | வேங்கை, குறிஞ்சி, காந்தள், குவளை |
| மரம் | ஆரம் (சந்தனம்), தேக்கு, அகில்ம் அசோகம், நாகம், மூங்கில் |
| உணவு | மலைநெல், மூங்கில் அரிசி, தினை |
| பறை | தொண்டகப்பறை |
| யாழ் | குறிஞ்சி யாழ் |
| பண் | குறிஞ்சிப்பண் |
| தொழில் | வெறியாடல், மலைநெல் விதைத்தல், தினைப்புனம் |

காத்தல், தேன் அழித்தல், நெல் குற்றுதல், கிழங்கு எடுத்தல், அருவி மற்றும் சுனை நீர் ஆடல்

குறிஞ்சித்திணைக்கு உரித்தான துறையாக ஒரு எடுத்து காட்டு: ‘‘பகற்குறிக்கண் செறிப்பு அறிவுறீத் தோழி வரைவு கடாயது’’

**பாலைத்திணை**

பாலைக்கு என்று தனி நிலம் இல்லை. ஆனால் முல்லயும் குறிஞ்சியும் முறை முறை திரிந்து கதிரவன் வெம்மையாலே எங்கும் வளமை தீய்ந்து போயுள்ள இடங்களே பாலை என்பது ஆகும். இதனால், காதலர் இடையே ‘பிரிவும், பிரிதல் நிமித்தமும்’ ஆக ஏற்படும் பெரும் துயரத்தையும் பாலைக்கு உரிமை படுத்தினர். ஆறலை கள்வரும், கொலையும் துன்பமும் வெம்மையும் இந்நிலத்துக்கு உரிய தன்மைகள், பாலைத்திணைக்கு வேனில் காலம், மற்றும் பின்பனி காலம் பெரும்பொழுதுகளாகவும், நண்பகல் சிறுபொழுதாகவும் அமையும்.

**பாலையின் கருப்பொருட்கள்**

| | |
|---|---|
| கடவுள் | கொற்றவை (துர்க்கை) |
| மக்கள் | விடலை, காளை, மீளி, எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர் |
| புள் | புறா, பருந்து, எருவை, கழுகு |
| விலங்கு | செந்நாயும் வலிமை அழிந்த யானை, புலி |
| ஊர் | குறும்பு |
| நீர் | நீரில்லாகுழி, நீரில்லாகிணறு |
| பூ | குரா, மரா, பாதிரி |
| மரம் | உழிஞை, பாலை, ஓமை, இருப்பை |
| உணவு | வழிப்பறி பொருள், பதியில் கவர்ந்த பொருள் |
| பறை | துடி |
| யாழ் | பாலை யாழ் |
| பண் | பாலைப்பண் |
| தொழில் | வழிப்பறி |

பாலைத்திணைக்கு உரித்தான துறையாக ஒரு எடுத்து காட்டு: ‘‘பொருள்வயின் பிரிவு கடைக்கூடிய தலைவன் நெஞ்சுக்கு சொல்லியது’’ இதை தற்கால திரைப்படங்களிலும் நாம் காணலாம், தலைவன் தலைவி பிரிவின் போது பாடல் காட்சிகளை கண்டால் இது நன்கு விளங்கும் முள் மரங்கள், உடைந்த கட்டிடங்கள், பாலைவனம்.

**முல்லைத்திணை**

முல்லை என்பது காடும் காடு சார்ந்த நிலங்களும் ஆகும். இந்நிலத்து ஆயர்களது வாழ்வியல், ஆடவர் ஆனிரை (பசுக்கள்) மேய்த்தற்கு பகற்பொழுது எல்லாம் காட்டிடத்தே இருத்தல், மகளிர் பால், பயன்களை விற்று வருதல் போன்ற ஒழுக்கத்தோடு ஒட்டியதாகும். ஏறு தழுவி வெல்பவனுக்கே மகளைத் தரும் வழக்கமும், அவனையே விரும்பி ஏற்கும் கன்னியர் மனமும் இத்திணையின் சிறப்பான மரபுகள். இதனால் காத்திருத்தல் தன்மை இயல்பாக, ‘இருத்தல், இருத்தல் நிமித்தம்’ முல்லைத்திணைக்கு உரிமையாக்கி உள்ளனர். முல்லைத்திணைக்கு கார் காலம் பெரும்பொழுதாகவும் மாலை சிறுபொழுதாகவும் அமையும்.

**முல்லையின் கருப்பொருட்கள்**

| | |
|---|---|
| கடவுள் | மாயோன் (திருமால்) |
| மக்கள் | குறும்பொறை நாடன், தோன்றல், மனைவி, கிழத்தி, இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர், பொதுவர், பொதுவியர், கோவலர் |
| புள் | காட்டுக்கோழி |
| விலங்கு | மான், முயல் |
| ஊர் | பாடி, சேரி, பள்ளி |
| நீர் | குறுஞ்சுனை நீர், கான்யாற்று நீர் (காட்டாறு) |
| பூ | குல்லை, முல்லை, பிடவம், தோன்றிப்பூ |
| மரம் | கொன்றை, காயா, குருந்தம் |
| உணவு | வரகு, சாமை, முதிரை |

| | |
|---|---|
| பறை | ஏறுகோட்பறை |
| யாழ் | முல்லை யாழ் |
| பண் | முல்லைப்பண் |
| தொழில் | சாமை விதைத்தல், வரகு விதைத்தல், அவற்றின் களை கட்டல் மற்றும் அரிதல், கடா விடுதல், கொன்றை குழல் ஊதல், ஆவினம் மேய்த்தல், கொல்லேறு தழுவல், குரவை கூத்தாடல், கான்யற்று நீராடல். |

முல்லைத்திணைக்கு உரித்தான துறையாக ஒரு எடுத்து காட்டு: ‘‘வினைமுடிந்து மீளூம் தலைவன் தேர்ப்பாகற்கு சொல்லியது’’

**மருதத்திணை**

மருதம் என்பது வயலும் வயல் சார்ந்த நிலமும். இவை வளமான செந்நெல் விளையும் பகுதி என்பதால், இங்கே உழுவித்து உண்ணும் பெரும் செல்வர் வாழ்வது இயல்பு. இவர்கள் தம் வளமையால் காமத்தில் எளியராகி பரத்தமை மேற்கொள்ளுதல் நிகழ்வதாகும். இதனால் தலைவியர்க்கு ‘ஊடலும் ஊடல் நிமித்தமும்’ ஆக எழும் பேச்சுக்களும் இயல்பாகும். இது குறித்தே ஊடலும் ஊடல் நிமித்தமும் மருதத்திணைக்கு உரித்தாக்கினார்கள். மருதத்திணைக்கு ஆறு பருவங்களும் பெரும்பொழுதாகவும் விடியல் சிறுபொழுதாகவும் அமையும்.

**மருதத்தின் கருப்பொருட்கள்**

| | |
|---|---|
| கடவுள் | வேந்தன் (இந்திரன்) |
| மக்கள் | மள்ளர், ஊரன், மகிழ்நன்,கிழத்தி, மனைவி, உழவர், உழத்தியர், கடையர், கடைசியர் |
| புள் | வண்டானம், மகன்றில், நாரை, அன்னம், பெருநாரை, கம்புள், குருகு, தாரா. |
| விலங்கு | எருமை, நீர்நாய் |
| ஊர் | பேரூர், மூதூர் |
| நீர் | ஆற்று நீர், கிணற்று நீர் |

பூ தாமரை, கழுனீர்

மரம் காஞ்சி, வஞ்சி, மருதம்

உணவு செந்நெல் அரிசி, வெண்ணெல் அரிசி

பறை நெல்லரிகிணை, மணமுழவு

யாழ் மருத யாழ்

பண் மருதப்பண்

தொழில் விழாச்செய்தல், வயற்களைகட்டல், நெல் அரிதல், கடாவிடுதல், குளம் குடைதல், புது நீராடல்

மருதத்திணைக்கு உரித்தான துறையாக ஒரு எடுத்து காட்டு: ''பரத்தையின் பிரிந்து வந்த தலைமகனுக்கு கிழத்தி சொல்லியது''

**நெய்தல்திணை**

கடலும் கடல் சார்ந்த பகுதிகள் நெய்தலுக்கு நிலமாகும். மீன் வளம் நாடி கடலிலே திமில் ஏறி செலவது பெரும்பாலும் ஆடவர் தொழில் ஆதலின் அவர் குறித்த பொழுதில் திரும்பாத போது 'இரங்கலும் இரங்கல் நிமித்தமும்' ஆக எழும் பேச்சும் இந்நிலத்துக்கு இயல்பாயின. நெய்தல் திணைக்கு ஆறு பருவங்களும் பெரும்பொழுதாகவும் எற்பாடு (பிற்பகல்) சிறுபொழுதாகவும் அமையும்.

**நெய்தலின் கருப்பொருட்கள்**

கடவுள் வருணன்

மக்கள் சேர்ப்பன், புலம்பன், பரத்தி, நுழைச்சி, கொண்கண், துறைவன், நுளையர், நுளைச்சியர், பரதர், பரத்தியர், அளவர், அளத்தியர்

புள் கடற்காகம், அன்னம், அன்றில்

விலங்கு சுறா, உமண் பகடு

ஊர் பாக்கம், பட்டினம்

நீர் உவர்நீர் கேணி, மணற்கேணி

பூ நெய்தல், தாழை, முண்டகம், அடம்பம்

மரம் கண்டல், புன்னை, ஞாழல்

உணவு மீனும் உப்பும் விற்று பெற்றவை

பறை மீன்கோட்பறை, நாவாய் பம்பை

யாழ் விளரி யாழ்

பண் செவ்வழிப்பண்

தொழில் மீன்பிடித்தல், உப்பு விளைத்தல், மீன் உணக்கல், பறவை ஓட்டுதல், கடலாடுதல்

நெய்தல்திணைக்கு உரித்தான துறையாக ஒரு எடுத்து காட்டு: ''பகற்குறிக்கண் வந்த தலைவன் சிறைப்புறத்தான் ஆக தோழி தலைமகளுக்கு சொல்லுவாளாய் தலைமகனுக்கு சொல்லியது''

இக்கருப்பொருட்கள் அவ்வத் திணைக்குரிய சிறந்த பொருட்கள் என்றே கருத வேண்டும். இவையன்றி பிறவும் உள்ளன என்பதும் அவையும் இலக்கியங்களில் பயின்று வருதலும் உண்டு என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

**புறப்பொருள்**

புறப்பொருள் இலக்கணத்தினை விரித்துக் கூறும், நூல் புறப்பொருள் வெண்பாமாலையாகும். கைக்கிளைப் படலம் நீங்கலாக ஏனைய பகுதிகளில் உள்ள இலக்கியச் செய்யுட்கள் வெண்பா யாப்பில் அமைந்துள்ளன. கைக்கிளைப் படலச் செய்யுட்கள் மருட்பாக்களாக உள்ளன. இந்நூல், புறப்பொருள் இலக்கணத்திணை வெண்பா யாப்பில் அமைந்த செய்யுட்களால் மாலைபோலத் தொடுத்துச் சொல்வதால், புறப்பொருள் வெண்பாமாலை எனப் பெயர் பெற்றது. இந்நூல், பெரும்பாலும் வெண்பாமாலை என்றே வழங்கப்படும்.

இந்நூலின் ஆசிரியர் ஐயனாரிதனார். இவர் சேரர் பரம்பரையில் வந்தவர் ஆயினும், சோழ பாண்டியர்களையும் ஒப்பச் சிறப்பிக்கும் உள்ளத்தர். இவர் சைவ சமயத்தினர். இது, இந்நூற் கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள், விநாயகப் பெருமானையும், சிவபெருமானையும் பற்றியனவாக இருத்தலால் புலனாகும். என்றாலும் இவர் வைணவத்தையும் சைவத்தையும் ஒப்ப நோக்கும் நடுநிலையாளர் என்பது இவரது நூலால் விளக்கும் ஐயாரிதனார் என்பது திருவிடைக் கழியைச் சார்ந்த குராஞ்சேரியிலுள்ள சாஸ்தாவின் பெயர் என்பர். இப்படியே சாஸ்தாவின் பெயராக இது பலவிடத்தும வழங்குகினற்த என்றும கூறுவர். இந்நூலிலுள்ள வெண்பாக்களுள் பலவும், கொளுக்களுள் சிலவும் இளம்பூரணர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர், நச்சினார்க்கினியர் முதலிய பண்டை உரையாசிரியர்களால் மேற்கோளாக

எழுதப்பட்டும், உரைநடையாக எழுதப்பட்டும் உள்ளன. எனவே, இந்நூலாசிரியர், இவர்களுக்கு முற்பட்டவர் என்பது உறுதி. யாப்பருங்கல விருத்தியுரையில் இந்நூல் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது. அவ்வுரையின் காலம் கி.பி.10-ம் நூற்றாண்டு என்பர். இதனால் இந்நூலாசிரியர் கி.பி.10-ம் நூற்றாண்டிற்கும் முற்பட்டவர் என்பது தேற்றம். இவர் காலம் கி.பி.8-ம் நூற்றாண்டாக இருக்கலாம் என்பர். சிலர் கி.பி.6-ம் நூற்றாண்டு என்றும் கி.பி.7-ம் நூற்றாண்டு என்றம் கூறுவர்.

**உரையாசிரியர்**

இந்நூலுக்கு ஒரு பழைய உரை உள்ளது. இவ்வுரையாசிரியர், ஜெயங்கொண்ட சோழமண்டலத்து மேற்கானாட்டு மாகறலூர், கிழார் சாமுண்டி தேவநாயகர் என்பவர் ஆவர். இவர் பெயரினை நோக்கும் போது இவர் வேளாண் மரபினர் என்று தெரிகின்றது. இவர் ஊர் ஜெயங்கொண்ட சொழமண்டலத்து மேற்கா நாட்டு மாகறலூர் என்பதும் புலனாகின்றத. இவரது உரைப்போக்கிலிருந்து இவர் வைணவர் என்ற விளங்குகின்றது. 'மாயவன் மாயம்' (228) என்னும் வெண்பாவில் மாயவன் என்பதற்கு வைணவ மரபுப்படி கரியவன் என்று பொருள் எழுதியுள்ளார். பரிமேலழகரும் பரிபாடலில் 'மாயோன்' என்பதற்கு இப்பொருளே கொண்டனர். சாமுண்டிதேவநாயகர் காலம் எது என்று அறுதியிட்டுக் கூற இயலவில்லை. சிலர் கி.பி.13 அல்லது 14-ம் நூற்றாண்டினராக இருக்கலாம் என்பர்.

இவ்வுரை பதவுரையாக மட்டும் அமைந்துள்ளது. கொண்ட கூட்டிப் பொருள் எழுதப்படவில்லை. பெரும்பாலும் வடசொற்கள் பயின்றதாக உள்ளது. இலக்கணக் குறிப்புகளும் மிகுதியாக இல்லை. இவ்வுரையின்றேல் இந்நூலின் பொருள் நன்கு புலப்படாது. இவ்வுரையினை நோக்கும் போது இவ்வுரைக்கு முன்பும் உரை இருந்தது என்பது புலனாகின்றது. இவர் உரை பதவுரையே ஆயினும் சில துறைகளைச் சுருக்கமாக வேறுபாட்டுடன் குறிப்பார். தமிஞ்சி என்னும் துறை, காஞ்சிப் படலத்திலும் வஞ்சிப் படலத்திலும், முன் தேர்க் கரவை, பின்தேர்க் குரவை என்னும் துறைகள் தும்பைப் படலத்திலும் வாகைப் படலத்திலும் வந்துள்ளன. இவ்விடங்களில் இவர் விளக்கும் துறைக் கருத்துக்களைக் காண்க.

**நூல் அமைப்பு**

இந்நூல் 12 படலங்களை உடையது. அவை, வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி. நொச்சி, உமிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்னும் படலங்களாம். கைக்கிளைப் படலத்தில் முன்னர் ஆண்பாற் கூற்றும். பின்னர்ப் பெண்பாற் கூற்றும் உணர்த்துகின்றார். பெருந்திணைப் படலத்தில் முன்னர்ப் பெண்பாற் கூற்றும் பின்னர் இருபாற் பெருந்திணையும் உணர்த்துகின்றார். இப்பன்னிரண்டு படலமும் முடிந்ததும் ஒழிப என்னும் பகுதியில் பாடாண் பகுதியிலும் வாகையிலும் உள்ள சில புறத்திணைகளை விளக்குகின்றார். இந்நூலில் 19 சூத்திரங்கள் உள்ளன. 361

வெண்பாக்கள் காணப்படுகினற்ன. 341 கொளுக்கள் உள்ளன. ஒழிபுப்பகுதியில் கொளுக்கள் இல்லை. இவையன்றி. நூலின் முன், இரண்டு கடவுள் வாழ்த்துச் செய்யுட்களும் ஒரு சிறப்புப் பாயிரச் செய்யுளம், காரணப்படுகின்றன.

ஒவ்வொரு படலத்தின் தொடக்கத்திலும் அத்திணையும் துறையும் உணர்த்தும் நூற்பாக்கள் அமைந்துள்ளன. அதன்பின், திணையையம் துறையையும் விரித்துத் தனித தனியாகக் கூறுவர். இவ்வாறு கூறும்போது முதலில் கொழுவினைச் சொல்லி, அதன்பின் வெண்பாவை அமைப்பார். கொளுவாவது,வெண்பாவின் கருத்தைக் கொண்டு விளங்கும் நூற்பாவாகும். இக்கொளுக்கள் பெரும்பான்மை, இரண்டடியாலம் சிறபான்மை மூன்றடியாலும் ஆக்கப்பட்டள்ளன. கொளுவினைச் கூத்திர மென்றும் கூறுவர். சான்றாக மகள் மறுத்து மொழிதல் என்னும் துறையினைக் காண்போம்.

**“வெம்முரணான் மகள் வேண்ட**

**அம்மதிலோன் மறுத்துரைத்தன்று”**

**இது கொளு**

**“ஒள்வாள் மறவர் உருத்தெழுந்து உம்பர்நாள்**

**கள்வார் நறுங்கோதை காரணமாக் - கொள்வான்**

**மருங்கெண்ணி வந்தார் மழகளிற்றின் கோடிக்**

**கருங்கண்ணி வெண்கட்டிற் கால்”**

**இது வெண்பா.**

இவ்வெண்பாவின் கருத்தினைக் கொளு கொண்டு விளங்குதலைக் காண்க. இவ்வாறு கொளுவும் இலக்கியமும் கொண்ட இலக்கியங்களாகச் சில கோவை இலக்கியங்கள் காணப்படுகினற்ன. திருக்கோவையார், திருவாரூர்க் கோவை, பழனிக் கோவை, திருவம்பலக் கோவை, உருத்திரகோடிக் கோவை என்னும் கோவை நூல்களைக் காண்க. இந்நூல்களில் செய்யுள் முன்னும் கொழுபின்னும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. புறப்பொருள் வெண்பாமாலை அமைப்பே இவ்வகப் பொருள் இலக்கியங்களுக்கு வழிகாட்டியிருத்தல் வேண்டும்.

**1. வெட்சித்திணை**

பகைவருடைய பசுக்களைக் கவர்தல். போர் தொடங்கப் போவதற்கு முன் அறிகுறி. 19 துறைகளையுடையது. ஒரு சூத்திரம் 20 கொளுக்களும் 21 வெண்பாக்களும் உள்ளன. இவற்றுள் ஒரு கொளுவும் இரண்டு வெண்பாவும் திணையை விளக்குவன.

**2. கரந்தைத்திணை**

பகைவர் கவர்ந்த பசுக்களை, பசுக்களுக்குரியார் மீட்க வருதல். 13 துறைகளையுடையது. ஒரு சூத்திரம் 14 கொளுக்களும் 14 வெண்பாக்களும் உள்ளன. இவற்றுள் ஒரு கொளுவும் ஒரு வெண்பாவும் திணையை விளக்குவன.

**3. வஞ்சித்திணை**

பகைவருடைய நாட்டைக் கொள்ள நினைத்து போர் செய்தவற்குப் படையெடுத்துச் செல்லுதல். 20 துறைகளையுடையது ஒரு சூத்திரம் 25 கொளுக்களும் 25 வெண்பாக்களும் உள்ளன. இவற்றுள் ஒரு கொளுவும் ஒரு வெண்பாவும் திணையை விளக்குவன.

**4. காஞ்சித்திணை**

படையெடுத்து வந்த அரசனை எதிர்ப்பதற்குச் செல்லுதல். 21 துறைகளையுடையது. ஒரு சூத்திரமும் 25 கொளுக்களும் 25 வெண்பாக்களும் உள்ளன. இவற்றுள், ஒரு கொளுவும் ஒரு வெண்பாவும் திணையை விளக்குவன.

**5. நொச்சித்திணை**

கரந்தையரசன் தம்மதிலைக் காத்துக் கொள்ளுதல். 8 துறைகளையுடையது. ஒரு சூத்திரமும் 9 கொளுக்களும் 9 வெண்பாக்களும் உள்ளன. இவற்றுள் ஒரு கொளுவும் ஒரு வெண்பாவும் திணையை விளக்குவன.

**6. உழிஞைத்திணை**

பகைவருடைய மதிலை வெட்சியான் வளைத்துக் கொள்ளுதல். 28 துறைகளையுடையது. ஒரு சூத்திரமும். 32 கொளுக்களும் 32 வெண்பாக்களும் உள்ளன. இவற்றுள் ஒரு கொளுவும் ஒரு வெண்பாவும் திணை விளக்குவன.

**7. தும்பைத்திணை**

பகைவரோடு போர் செய்தல். 23 துறைகளையுடையது. ஒரு சூத்திரமும் 28 கொளுக்களும் 28 வெண்பாக்களும் உள்ளன. இவற்றுள் ஒரு கொளுவும் ஒர வெண்பாவும் திணையை விளக்குவன.

**8. வாகைத்திணை**

பகைவரை வெல்லுதல், வெற்றி 32 துறைகளையுடையது. ஒரு சூத்திரமும் 34 கொளுக்களும் 34 வெண்பாக்களும் உள்ளன. இவற்றுள் ஒரு கொளுவும் ஒரு வெண்பாவும் திணையை விளக்குவன.

**9. பாடாண்திணை**

ஒருவனுடைய கீர்த்தி, வலி, கொடை, தண்ணளி முதலியவற்றை ஆராய்ந்து சொல்லுதல். 47 துறைகளையுடையது. ஒரு சூத்திரமும் 51 கொளுக்களும் 51 வெண்பாக்களும் உள்ளன. இவற்றுள் ஒரு கொளுவும் ஒரு வெண்பாவும் திணையை விளக்குவன.

**10. பொதுவியல்**

மேற்கூறிய புறத்திணைகட்கு எல்லாம் பொது வாயுள்ளனவும் அவற்றில் கூறாதொழிந்தனவுமாகிய இலக்கணங்களைக் கூறுவது. நான்கு பகுதிகளையும் நான்கு சூத்திரங்களையும் 37 துறைகளையும் உடையது. 45 கொளுக்களும் 45 வெண்பாக்களும் உள்ளன.

**11. கைக்கிளைத்திணை**

ஒருதலைக்காமம், ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்று என்னும் இரண்டு பகுதிகளையுடையது. 2 சூத்திரங்களும் 19 துறைகளும் 21 கொளுக்களும் 21 வெண்பாக்களும் உள்ளன.

**12. பெருந்திணை**

பொருந்தாக் காமம், ஆண்பாற் கூற்று, இருபாற் பெருந்திணை என்னும் இரண்டு பகுப்புகளையுடையத. 2 சூத்திரங்களும், 36 துறைகளும் 37 வெண்பாக்களும் உள்ளன.

**13. ஒழிபு**

பாடாண் பகுதிகளும், வகையிலும் கூறப்படாதொழிந்த புறத்துறைகளைப் பற்றி விளக்குவத. ஒரு சூத்திரமும் 19 வெண்பாக்களும் உடையது. இது ஒழிபியல் போன்றது இங்குக் கொளுக்கள் இல்லை.

நூலின் இறுதியில் உள்ள சூத்திரம், புறமும் புறப்புறமும் ஆகிய இரண்டு பிரிவில் 10 திணைகளை அடக்கிக் கூறுகின்றது. வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உமிஞை, நொச்சி, தும்பை என்பன புறம் எனவும், வாகை, பாடாண், பொதுவியல் மூன்றும் புறப்புறம் எனவும் பெயர் பெறும் என்று வகுத்துக் கூறுவர். கைக்கிளை, பெருந்திணை இரண்டும் அகப்புறம் ஆகும்.

**இந்நூலின் முதல் நூல்**

இந்நூல் பன்னிரு படலத்தின் வழி நூல். இது, 'பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த பன்னிரு படலமும் பழிப்பின்றுணர்ந் தோன்' என்பதனால் பெறப்படும். பேராசிரியரும் இந்நூலினைப் பன்னிருபடலத்தின் வழி நூல் என்பர். வெட்சித்திணை, தன்னுறு தொழில், மன்னுறு தொழில் என இரண்டு வகைப்படும் என்பது பன்னிரு

படலத்தின் வெட்சிப்படல் ஆசிரியா் கொள்கை. இக்கொள்கையினை இந்நூலாசிரியா் உடன்பட்டுக் கூறியுள்ளாா். ஆதலால் இந்நூலின் முதல் நூல் பன்னிரு படலம் என அறியலாம்.

**நூல் இயல்பு**

இந்நூலும் தொல்காப்பியமும் திணை பற்றிய விளக்கத்திலும் துறைபற்றிய பிரிவிலும் வேறுபட்டுள்ளன. இவ்விரண்டு நூல்களின் புறப்பொருள் பற்றிய கருத்துக்களை ஒப்பிட்டு விரிவாக ஆராய்தல் வெண்டும். பின் வந்த உரையாசிரியா்கள், புறப்பொருள் பாடல்களுக்குத் திணையும் துறையும் கூறும்போது வெண்பா மாலையைப் பின்பற்றவில்லை. தொல்காப்பியத்தினையே பெரிதும் தழுவிக் கூறியுள்ளனா். இந்நூலில் உள்ள வெண்பாக்கள் பொருளுணா்ச்சி நிறைந்தனவாய் அழகிய கட்டமைப்பு உடையனவாய் உள்ளன. வெண்பாக்கள் தலைமை பெற்றிருந்த காலத்தில் இந்நூல் இயற்றப்பட்டிருக்கலாம். பொதுவியலில் முல்லைப் பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்னும் பகுதிகளில் அமைந்த பாடல்கள் முத்தொள்ளாயிரப் பாடல்களை நினைவூட்டுகின்றன.

**அகத்திணைக்குரிய புறத்திணைகள்**

அகத்திணைகள் ஏழற்கும் ஏழு புறத்திணைகளை இணைத்து இன்னின்ன அகத்திணைகளுக்கு இன்னின்ன புறத்திணைகள் உரியனவாகும் எனப் பிரித்து விளக்கியுள்ளமையை முன்னர்க் கண்டோம்.

**தொல்காப்பியர் புறத்திணையியலின் முதல் நூற்பாவில்**

> **அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்**
> **புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்**
> **வெட்சி தானே குறிஞ்சியது புறனே**
> **உட்குவரத் தோன்றும் ஈர்ஏழ் துறைத்தே**

என்பதன் மூலம் அகத்திணை இலக்கணத்தை முழுமையாக உணர்ந்தோர் மட்டுமே புறத்திணை இலக்கணத்தைச் சிறப்பாக அறிய இயலும் என்ற கருத்தினைக் கூறுகிறார்.

தொல்காப்பியர் அகப் புறப் பொருள்களைப் பிரித்து விளக்கியுள்ள அடிப்படையில் புறத்திணைப் பாகுபாடுகளைக் காண்போம்.

**குறிஞ்சியும் வெட்சியும்**

அகத்திணைக்குரிய குறிஞ்சி, புறத்திணையாகிய வெட்சி என்னும் திணை ஒழுக்கத்தைத் தனக்குப் புறத்திணையாகக் கொண்டமைக்கு நுண்ணிய காரணங்கள் உண்டு. தொல்காப்பியர்,

**வெட்சி தானே குறிஞ்சியது புறனே**

**உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே**

**-(புறத்திணையியல், 1)**

என்று கூறுவார்.

இந்நூற்பாவால் வெட்சித்திணைக்குரிய இடத்தையும், துறையையும் வரையறுத்துக் கூறியுள்ளார். வெட்சி என்ற புறத்திணைகுறிஞ்சி என்ற அகத்திணைக்குப் புறமாக அமைந்தமைக்குரிய காரணங்களாகப் பின்வருவனவற்றைக் குறிக்கலாம்:

பகை நாட்டினர் ஆநிரைகளைக் கவர்ந்து கொள்ளுதல் என்பது பசுக்கள் மேயும் குறிஞ்சி நிலத்தில் கோட்டைக்கு வெளியே (காவல் காட்டில்) கட்டப்பட்டுள்ள ஆநிரைகளைக் கவர்வதால் அதுகுறிஞ்சிக்குப் புறமாயிற்று எனலாம்.

மகளின் உள்ளத்தை இளைஞன் ஒருவன் களவாடுவதே குறிஞ்சித் திணை. அதே போல ஒரு மன்னன் ஆநிரைகளை, வேற்று மன்னனின் வேளையில் கவர்ந்து வருதல் இரவு வெட்சித் திணையாகும்.

**முல்லையும் வஞ்சியும்**

வஞ்சியாகிய புறத்திணை முல்லையாகிய அகத்திணைக்குப் புறமாகும். மாற்றார் நாடெல்லாம் தனக்கே வேண்டுமென்று நினைத்துப் போருக்குச் சென்ற வேந்தனை, ஒரு மன்னன் அஞ்சாது எதிர் சென்று போர் செய்ய முற்படுவதை வஞ்சி கூறும். இதனைத் தொல்காப்பியர்,

**வஞ்சி தானே முல்லையது புறனே**

**எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்**

**அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே (புறத்திணையில்,6)**

என்று கூறுவார்.

இத்திணையை முல்லைத் திணைக்குப் புறமாகக் கூறியதற்கு நுண்ணிய காரணம் உண்டு. படையெடுத்துச் செல்லும்போது படை இளைப்பாறவும் நீர் அருந்தி, உணவு சமைத்து உண்ணவும், நிழல் சூழ்ந்த இடம் தேவைப்படும். நிழல் சூழ்ந்த காடும், கார் காலத்தில் வேண்டுமளவு நீரும் தேவைப்படுவதால் முல்லைக்கு வஞ்சி புறத்திணையாயிற்று. மேலும் தலைவனுக்காகக் காத்திருக்கும் தலைவியின் நிலையும் இங்குப் போர்க்களத்தில் வெற்றிக்காகக் காத்திருக்கும் வீரனுக்குப் பொருந்தும்.

**மருதமும் உழிஞையும்**

**உழிஞை தானே மருதத்துப் புறனே**

**முழு முதல் அரணம் முற்றலும் கோடலும்**

**அனைநெறி மரபிற்று ஆகும் என்ப (புறத்திணையில்,8)**

என்று தொல்காப்பியர் உழிஞைத் திணையை மருதத்துக்குப் புறத்திணையாகக் கூறுவார்.

அரண் என்பது இயற்கையான, மற்றும் செயற்கையான அரண்களாகும். உழிஞைத் திணை மருதத்திற்குப் புறமாதற்குரிய காரணம் வருமாறு :வஞ்சியில் போரிட்டுத் தோற்ற வேந்தன், தன் நாடு சென்றுஅரண்மனைக்குள் புகுந்து தாளிட்டுக் கொண்டிருப்பான். போரிட்டு வென்ற வேந்தன் அவன் நாட்டில் புகுந்து இரவில் முற்றுகையிடுவான். போரிடும் காலம் விடியற்காலமாகும். மருதத் திணையில் ஊடல் கொண்ட மகளிர், கணவன் மார்களுக்குக் கதவடைத்துத் தனிமையில் இருப்பர். தலைவனும் விடியற்காலையில் வந்து கதவினைத் திறந்து உள்புக நினைப்பது மருத ஒழுக்கமாகும். இதனால் உழிஞையும் மருதமும் இணையாயின.

**நெய்தலும் தும்பையும்**

தும்பை என்னும் புறத்திணை நெய்தல் என்னும் அகத்திணைக்குப் புறமாகும்.

இருபெரும் வேந்தரும் ஒரு களத்தில் போரிடுவர். அதற்கு, களரும் மணலும் பரந்த நிலமே போரிடும் களமாக அமையும். அவ்வாறு போரிடுவதற்குப் போதிய இடம் கடலைச் சார்ந்த மணல் பகுதியாக இருப்பது சிறப்புடையது கதிரவன் மறையும் காலம் போர் முடியும் நேரமாகும். எனவே நெய்தலுக்கு உரிய எற்பாடு நேரமே தும்பைக்கும் உரியதாயிற்று. மேலும் போர்க்களம் சென்ற காதலன் உயிருடன் திரும்பி வருதல் அவ்வளவு உறுதியில்லை. எனவே நெய்தலின் உரிப்பொருளாகிய இரங்கலும் இரங்கல் நிமித்தமும் தும்பைக்குப் பொருந்துவதாயின.

**இதனைத் தொல்காப்பியரும்**

**தும்பை தானே நெய்தலது புறனே˙**

**மைந்து பொருளாக வந்த வேந்தனைச்**

**சென்று தலை அழிக்கும் சிறப்பிற்று என்ப (புறத்திணையில்,12)**

என்று உரைப்பர்.

**பாலையும் வாகையும்**

**வாகை தானே பாலையது புறனே**

**தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்**

**பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப (புறத்திணையில்,15)**

என்று தொல்காப்பிய நூற்பா கூறும்.

வாகை என்பது வெற்றியைக் குறிக்கும். வாகைத் திணை பாலை என்னும் அகத்திணையினது புறமாகும். பாலைக்கு வாகை எவ்வாறு புறமானது என்பதற்குக் கீழ்வரும் காரணங்களைக் கூறலாம்.

பாலை தனக்கென ஒரு நிலமின்றி எல்லா நிலத்திலும் வறட்சிக் காலத்தில் உருவாகும். அதுபோல வாகையும் எல்லா நிலத்திலும் நிகழ்வது.

காதலுற்ற தலைவனும் தலைவியும் புணர்ச்சியினின்று நீங்கி இல்லறம் நிகழ்த்தி, பொருள் தேடுவதற்காகப் பிரிவது பாலைத் திணை யாகும். வாகையில் புகழ் எய்துவதற்காக, வெற்றி பெற்ற வேந்தன் துறக்கம் (வீடுபேறு) பெறும் கருத்தினால் பிரிவான். எனவே இரண்டிலும் பிரிவு உண்டு.

பாலை அறக் காதலை வளர்த்து, மீண்டும் இன்பத்தை மிகுவிப்பது போல, வாகை மறக் காதலை வளர்த்து வெற்றி இன்பம் விளைவிப்பதாலும், பாலை போல வாகையும் குறிப்பிட்ட நிலம் என்ற வரையரையின்றி எங்கும் நிகழுவதாதலாலும் இரண்டும் ஒப்புமையாயின.

பாலைக்குரிய பெரும்பொழுதும், சிறுபொழுதுமே போர் நிகழ்ச்சி முடிவு பெறுதற்குச் சிறந்தனவாதலின் நிலம், பொழுது என்னும் இரண்டு முதற்பொருள்களால் வாகை பாலைக்குப் புறமாயிற்று. எத்துறையிலும் வெற்றி காண வேண்டுமாயின் தலைவியைப் பிரிந்தே ஆதல் வேண்டும். எனவே உரிப்பொருளாலும் புறமாயிற்று.

**கைக்கிளையும், பாடாண் திணையும்**

பாடாண் திணையானது கைக்கிளைக்குப் புறத்திணையாகும்.

கைக்கிளையாவது ஒரு நிலத்திற்கோ, ஒரு பொழுதுக்கோ உரியதாகாமல் எல்லா நிலத்திற்கும், எல்லாப் பொழுதுக்கும் உரிய ஒருதலைக் காமமாகும். அதுபோல இதுவும் ஒரு பாலுக்கு உரியது அன்று. ஒருவனை ஒருவன் ஏதேனும் காரணம் பற்றிப் பாராட்டி நிற்பது பாடாண் திணையாகும்.

வெட்சி முதல் வாகை ஈறாக உள்ள திணைகள் போர் தொடுப்போரும் எதிர்ப்போருமாகிய இருவருக்கும் உரியது காஞ்சியாவருக்கும் உரியது ˙அவ்வாறு இல்லாமல் பாடாண் திணைபாடப்படுபவர், பாடுபவர் என்னும் இருவருள் பாடுவோர் விருப்பம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருத்தலின் கைக்கிளை போல இதுவும் ஒருவர் விருப்பமாயிற்று.

**இதனைத் தொல்காப்பியர்,**

**பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே**

**நாடுங் காலை நாலிரண்டுடைத்தே (புறத்திணையில்,20)**

எனக் கூறுவார்.

**பெருந்திணையும் காஞ்சியும்**

காஞ்சி என்பது நிலையாமையைக் குறிக்கும். காஞ்சித் திணை அகத்திணையாகிய பெருந்திணைக்குப் புறத்திணையாகும். அது நன்று அல்லாத சிறப்பினை உடையது மேலும் நிலைபேறில்லாத இவ்வுலகத்தைப் பற்றிய வழியினைக் கூறுவது ஆகும்.

நன்றல்லாத சிறப்பாவது செயலால் நன்றல்லாதது போல் தோன்றி, கொள்கையால் சிறந்திருத்தல். அன்பின் ஐந்திணைகளில் பெருந்திணையாகிய மடல் ஏறுதல் போல்வன வரின் அவற்றிற்குப் புறமாக ஓதுக்கப்படுதல் போல, வெட்சி முதலிய புறத்திணைகளில் நிலையாமை உணர்வு வெறுக்கப்பட்டு ஓதுக்கப்படுதலின், காஞ்சி பெருந்திணைப் புறமாயிற்று.

இதனைத் தொல்காப்பியர்,

**காஞ்சி தானே பெருந்திணைப் புறனே**

**பாங்கரும் சிறப்பின் பல்லாற் றானும்**

**நில்லா உலகம் புல்லிய நெறித்தே. (புறத்திணையில்,18)**

எனக் கூறுகிறார்.

## யாப்பு

நம் முன்னோர்கள் முத்தமிழின் பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே இலக்கணம் அமைத்தனர். இலக்கணம் என்பது ஒரு மொழியை பிழையின்றி பேசுவதற்கும், எழுதுவற்கும் தேவையான இலக்கண வீதிகளில் உள்ள ஒரு தொகுப்பு தமிழலக்கணம் மொத்தம் ஐந்து வகைப்படும். அவை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகும். தமிழ் இலக்கணத்தின் ஐந்து வகைகளில் ஒன்றான யாப்பு இலக்கணத்தை பற்றி இந்த தொகுப்பில் விரிவாக படித்து தெரிந்து கொள்வோம்.

யாப்பிலக்கணம் என்பது செய்யுள் எழுதுவற்குரிய இலக்கணத்தைக் குறிக்கும் யாத்தல் என்பதற்கு கட்டுதல் என்று பொருள். யாப்பிலக்கணம் என்பது செய்யுளின் இலக்கணம் என்றும் பொருள் தரும்.

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை போன்ற உறுப்புக்களை கட்டி அமைப்பதால் இதனை செய்யுள் யாத்தல் என்கிறார்கள்.

பாட்டு, தூக்கு, தொடர், கவிதை, செய்யுள் போன்றவை யாப்பிற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் ஆகும்.

யாப்பு இலக்கணம் வகைகள்

1. உறுப்பியல் 2. செய்யுளியல்

உறுப்பியலில் செய்யுள் உறுப்புகளும், செய்யுளியலில் பா மற்றும் பாவினம் விளக்ககப்பட்டுள்ளது.

**யாப்பின் உறுப்புகள் மொத்தம் ஆறு வகைப்படும்**

1. எழுத்து
2. அசை
3. சீர்
4. தளை
5. அடி
6. தொடை

**1. எழுத்து**

தமிழ் எழுத்துகளை யாப்பிலக்கண முறையில் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. குறில் (க)
2. நெடில் (கா)
3. ஒற்று (க்) என்பனவாம்.

தொல்காப்பியர் எழுத்துகளை குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் என்று மூன்றாகப் பிரிப்பார். நன்னூல் ஆசிரியர் சார்பெழுத்துக்கள் எனப் பத்து வகைகளாகச் சுட்டுகின்றார்.

**2. அசை**

குறில், நெடில், ஒற்று என்னும் மூவகை எழுத்துகளால் அசைக்கப்படுவது அசை எனப்படும். எழுத்துகள் ஒன்று சேர்ந்து வருவது அசை (சொல்) ஆகும். அசை இரண்டு வகைப்படும்.

1. நேர் அசை
2. நிரை அசை

**நேரசை**

1. குறில் தனித்து வருதல் – க
2. குறிலும் ஒற்றும் இணைந்து வருதல் – கல்
3. நெடில் தனித்து வருதல் – பா

4. நெடிலும் ஒற்றும் இணைந்து வருதல் – பால்

**நிரையசை**

1. இரண்டு குறில்கள் இணைந்து வருதல் – பல
2. இரண்டு குறில்கலோடு ஒற்றும் இணைந்து வருதல் – பலர்
3. குறிலும் நெடிலும் இணைந்து வருதல் – படா
4. குறிலும் நெடிலும் ஒற்றும் இணைந்து வருதல் -படாம்

**குறிப்பு**

- முதல் எழுத்து நெடில் வந்தால் தனித்துதான் வரும்.
- ஓற்றுகள் அசையாகாது. ஓன்றுக்கும் மேற்பட்ட ஒற்றுகள் சேர்ந்து வரினும் அவை ஒரு ஒற்றாகவே கருதப்படும். (உம்-ஙங்ஙங்)
- இரண்டு நெடில் எழுத்துக்கள் சேர்ந்து வராது. அப்படி வந்தால் பிரிக்கவேண்டும்.
- நெடில் எழுத்தை அடுத்து குறில் சேர்ந்து ஓர் அசையாக வராது.

**3. சீர்**

செய்யுளில் ஓர் அசை தனியாகவோ, பல அசைகள் சேர்ந்தோ அமைந்து வருவது சீர் எனப்படும். அசைகள் ஒன்று சேர்ந்து வரவது சீர் ஆகும். (சீர்- ஒழுங்கு). சீர் நான்கு வகைப்படும். அவை,

1. ஓரசைச்சீர்
2. ஈரசைச்சீர்
3. மூவசைச்சீர்
4. நாலசைச்சீர்

**1. ஓரசைச்சீர்**

அசைச்சீர் என்ற மற்றொரு பெயரும் உண்டு. வெண்பாவின் ஈற்றில் நேரசை அல்லது நிரையசையென தனித்து நின்று சீராய் அமையும். இவை நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்ப்பாட்டைக் கொண்டு முடியும்.

நேர் – நாள்

நிரை – மலர்

நேர் + நேர் = நேர்பு – காசு

நிரை + நேர் = நிரைபு – பிறப்பு

**2. ஈரசைச்சீர்**

இயற்சீர், ஆசிரிய உரிச்சீர் என வேறுபெயர்கள் உண்டு. நேர்,நிரை என்னும் அசைகள் இரண்டிரண்டாக இணைந்து வரும் சீர்கள் ஈரசைச்சீர்கள் எனப்படும். வெண்பா, ஆசிரியப்பாவில் வரும். இவை

மாச்சீர் (தேமா, புளிமா),

விளச்சீர் (கூவிளம், கருவிளம்) என இரண்டு வகைப்படும்.

அசையின் அமைப்பு வாய்ப்பாடு

நேர் + நேர் = தேமா

நிரை + நேர் = புளிமா

நேர் + நிரை = கூவிளம்

நிரை + நிரை = கருவிளம்

**3. மூவசைச்சீர்**

ஈரசைச்சீர்கள் ஒவ்வொன்றின் இறுதியிலும் நேர் என்னும் அசையைத் சேர்த்தால் காய்ச்சீர் நான்கு இடம்பெறும். இதனை வெண்சீர், வெண்பா உரிச்சீர் என அழைக்கப்படும்.

நேர் + நேர் + நேர் – தேமாங்காய்

நிரை + நேர் + நேர் – புளிமாங்காய்

நேர் + நிரை + நேர் – கூவிளங்காய்

நிரை + நிரை + நேர் – கருவிளங்காய்

மேற்கூறிய நான்கும் நேரீற்று மூவசைச்சீர் என்று அழைக்கப்படுகிறது.

ஈரசைச்சீர்கள் ஒவ்வொன்றின் இறுதியிலும் நிரை என்னும் அசையைத் சேர்த்தால் கனிச்சீர் நான்கு இடம்பெறும். இதனை வஞ்சிச்சீர், வஞ்சி உரிச்சீர் என அழைக்கப்படும்.

நேர் + நேர் + நிரை – தேமாங்கனி

நிரை + நேர் + நிரை – புளிமாங்கனி

நேர் + நிரை + நிரை – கூவிளங்கனி

நிரை + நிரை + நிரை – கருவிளங்கனி

மேற்கூறிய நான்கும் நிரையீற்று மூவசைச்சீர் என்று அழைக்கப்படுகிறது. மூவசைச்சீர்களாகிய காய்ச்சீர்கள் நான்கும், கனிச்சீர்கள் நான்கும் சேர்த்து மொத்தம் எட்டு வகைப்படும்.

**4. நாலசைச்சீர்**

பொதுச்சீர் என்ற வேறுபெயரும் உண்டு. மூவசைச்சீர் எட்டுடன் நேரசையைச் சேர்க்க வேண்டும். அவை தண்பூ, நறும்பூ எனக் கொண்டு முடியும். இவை எட்டும் பூச்சீர் என்றும், நேரீற்றுப் பொதுச்சீர் எனவும் வழங்கப்பெறும்.

**பூச்சீர் எட்டின் அமைப்பு வாய்ப்பாடு**

நேர் + நேர் + நேர் + நேர் – தேமாந்தண்பூ

நிரை + நேர் + நிரை + நேர் - புளிமாந்தண்பூ

நேர் + நிரை + நிரை + நேர் - கூவிளந்தண்பூ

நிரை + நிரை + நிரை + நேர் - கருவிளந்தண்பூ

நேர் + நேர் + நேர் + நேர் - தேமாநறும்பூ

நிரை + நேர் + நிரை + நேர் - புளிமாநறும்பூ

நேர் + நிரை + நிரை + நேர் - கூவிள நறும்பூ

நிரை + நிரை + நிரை + நேர் - கருவிள நறும்பூ

மூவசைச்சீர் எட்டுடன் நிரையசையைச் சேர்க்க வேண்டும். அவை தண்ணிழல், நறுநிழல் எனக் கொண்டு முடியும். இவை எட்டும் நிழற்சீர், நிரையீற்றுப் பொதுச்சீர் என வழங்கப்பெறும்.

**நிழற்சீர் எட்டின் அமைப்பு வாய்ப்பாடு**

நேர் + நேர் + நேர் + நிரை - தேமாந்தண்ணிழல்

நிரை + நேர் + நிரை + நிரை - புளிமாந்தண்ணிழல்

நேர் + நிரை + நிரை + நிரை - கூவிளந்தண்ணிழல்

நிரை + நிரை + நிரை + நிரை - கருவிளந்தண்ணிழல்

நேர் + நேர் + நேர் + நிரை - தேமாநறுநிழல்

நிரை + நேர் + நிரை + நிரை - புளிமாநறுநிழல்

நேர் + நிரை + நிரை + நிரை - கூவிளநறுநிழல்

நிரை + நிரை + நிரை + நிரை - கருவிளநறுநிழல்

இவ் பூச்சீர் எட்டும், நிழற்சீர் எட்டும் ஆகிய பதினாறும் நாலசைச்சீர்களாக கருதப்படும்.

**4. தளை**

சீர்கள் ஒன்றோடொன்று கட்டுப்பட்டு நிற்கும் நிலை தளை எனப்படும். சீர்கள் ஒன்றி வருவது தளை ஆகும். (தளை – கட்டு). நின்ற சீரின் ஈற்றசையும், வருஞ்சீரின் முதலசையும் ஒன்றியும் ஒன்றாமலும் வருவது தளை எனப்படும். தளை கூறும்போது முதல்சீர் இறுதி அசையின் வாய்ப்பாட்டோடு அடுத்த சீரின் முதல் அசையைச் சேர்த்துக் கூற வேண்டும். தளை ஏழு வகைப்படும். அவை,

1. நேரொன்றாசிரியத்தளை
2. நிரையொன்றாசிரியத் தளை
3. இயற்சீர் வெண்டளை
4. வெண்சீர் வெண்டளை
5. கலித்தளை
6. ஒன்றிய வஞ்சித்தளை
7. ஒன்றா வஞ்சித்தளை

**1. நேரொன்றாசிரியத்தளை ( மா முன் நேர் )**

நிலைமொழியின் ஈற்றசை ‘மா’ என முடிந்து வரும்மொழியின் முதலசை ‘நேர்’ என வருமாயின் அது நேரொன்றாசிரியத்தளை எனப்படும்.

**(உம்)** பரிசில் வென்றான்

பரிசில் = நிரை நேர் = புளிமா , வென்றான் = நேர் நேர் = தேமா

**2. நிரையொன்றாசிரியத்தளை ( விள முன் நிரை )**

நிலைமொழியின் ஈற்றசை ‘விளம்’ என முடிந்து வரும்மொழியின் முதலசை ‘நிரை’ என வருமாயின் அது நிரையொன்றாசிரியத்தளை எனப்படும்.

**(உம்)** மாம்பழம் விழுந்தது

மாம்பழம் – நேர் நிரை – கூவிளம், விழுந்தது – நிரை நிரை – கருவிளம்

**3. இயற்சீர் வெண்டளை (மா முன் நிரை, விள முன் நேர்)**

நிலைமொழியின் ஈற்றசை 'மா' என முடிந்து வரும்மொழியின் முதலசை 'நிரை' என வந்தாலும், நிலைமொழியின் ஈற்றசை 'விளம்' என முடிந்து வரும்மொழியின் முதலசை 'நேர்' என வந்தாலும் அது இயற்சீர் வெண்டளை எனப்படும்.

**(உ.ம்)** கன்று குதித்தது – மா முன் நிரை

பணிவுடன் சென்றான் – விள முன் நேர்

**4. வெண்சீர் வெண்டளை (மா முன் நேர்)**

நிலைமொழியின் ஈற்றசை 'காய்' என முடிந்து வரும்மொழியின் முதலசை 'நேர்' என வருமாயின் அது வெண்சீர் வெண்டளை எனப்படும்.

**(உ.ம்)** கல்விக்கு கம்பன் – மா முன் நேர்

**5. கலித்தளை (மா முன் நிரை)**

நிலைமொழியின் ஈற்றசை 'காய்' என முடிந்து வரும்மொழியின் முதலசை 'நிரை' என வருமாயின் அது கலித்தளை எனப்படும்.

**(உ.ம்)** வள்ளுவரின் திருக்குறள் – மா முன் நிரை

**6. ஒன்றிய வஞ்சித்தளை ( கனி முன் நிரை)**

நிலைமொழியின் ஈற்றசை 'கனி' என முடிந்து வரும்மொழியின் முதலசை 'நிரை' என வருமாயின் அது ஒன்றிய வஞ்சித்தளை எனப்படும்.

**(உ.ம்)** செந்தாமரை முகத்துடையாள்

**7. ஒன்றா வஞ்சித்தளை (கனி முன் நேர் )**

நிலைமொழியின் ஈற்றசை 'கனி' என முடிந்து வரும்மொழியின் முதலசை 'நேர்' என வருமாயின் அது ஒன்றா வஞ்சித்தளை எனப்படும்.

**(உ.ம்)** மாமுனிவரே அகத்தியர்

**5. அடி**

சீர்கள் பல தொடர்ந்து வந்து ஓர் அடியாக அமைந்து செய்யுளுக்கு உறுப்பாவது அடி எனப்படும். ஓர் அடியில் சீர்கள் தொடர்ந்து வருவது சீர் அடிகள் ஆகும். அடிகள் ஐந்து வகைப்படும். அவை,

1. குறளடி
2. சிந்தடி

3. அளவடி
4. நெடிலடி
5. கழிநெடிலடி

**1. குறலடி**

இரண்டு சீர்களால் ஆன அடி. பல சீர்களால் ஆன இரண்டு அடிகள் ஆனது குறளடிகள் எனப்படும். இவ்வடிகள் வெண்பாவில் பயின்று வரும்.

**(உ.ம்)** ''இனிய உளவாக இன்னாது கூறல்

கனியிருப்பக் காய்கவர்ந் தற்று'' – இரண்டு அடிகளால் ஆன குறலடி.

''காயும் கனியும்'' – சீர்களால் ஆன குறலடி.

**2. சிந்தடி**

மூன்று சீர்களால் ஆன அடி. பல சீர்களால் ஆன மூன்று அடிகள் ஆனது சிந்தடிகள் எனப்படும். வெண்பாவின் ஈற்றடிகள் சிந்தடிகளாக இருக்கும். இவ்வடிகள் ஆசிரியப்பா, வஞ்சிப்பாவிலும் பயின்று வரும்.

**(உ.ம்)** ''அகவன் மகளே! அகவன் மகளே!

மனவுக் கோப்பு அன்ன நல்நெடுங் கூந்தல்

அகவன் மகளே! பாடுக பாட்டே'' – மூன்று அடிகளால் ஆன சிந்தடி.

''ஞானத்தின் மாணப் பெரிது'' – சீர்களால் ஆன சிந்தடி.

**3. அளவடி**

நான்கு சீர்களால் ஆன அடி. பல சீர்களால் ஆன நான்கு அடிகள் ஆனது அளவடிகள் எனப்படும். நேரடி என்றும் அழைக்கப்பெறும். வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, மருட்பாவிலும் இடம்பெறும்.

**(உ.ம்)** அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தன்மை – நான்கு சீர்களால் ஆன அளவடி

''தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி

பன்றியருவா வதன்வடக்கு – நன்றாய

சீதமலாடு புனனாடு செந்தமிழ்சேர்

ஏதமில் பன்னிரு நாட் டெண்'' – நான்கு அடிகளால் ஆன அளவடி.

**4. நெடிலடி**

ஐந்து சீர்களால் ஆன அடி. பல சீர்களால் ஆன ஐந்து அடிகள் ஆனது நெடிலடிகள் எனப்படும்.

**(உ.ம்)** மங்குவென் உயிரோடென்றுன் மலரடி சென்னி வைத்தாள் – ஐந்து சீர்களால் ஆன நெடிலடி.

கல்லாக் கோவலர் கோலின் தோண்டிய

ஆன் நீரப் பந்தல் யானை வெளவும்

கல்லதர்க் கவலை செல்லின், மெல் இயல்

புயல் நெடும் கூந்தல் புலம்பும்

வயமான் தோன்றல்! வுல்லாதீமே. (ஐங்.304)- ஐந்து அடிகளால் ஆன நெடிலடி

**5. கழிநெடிலடி**

ஐந்துக்கும் மேற்பட்ட சீர்களால் ஆன அடி. பல சீர்களால் ஆனதும் ஐந்துக்கும் மேற்பட்ட பல அடிகள் கொண்டது நெடிலடிகள் எனப்படும்.

**(உ.ம்)** “மூலையில் கிடக்கும் வாலிபனே – தினம்

முதுகிலா வேலையைத் தேடுகிறாய்!

பாலை வனம்தான் வாழ்க்கையென – வெறும்

பல்லவி எதற்குப் பாடுகிறாய்?

வெறுங்கை என்பது மூடத்தனம் – உன்

விரல்கள் பத்தும் மூலதனம்!

கருங்கல் பாறையும் நொறுங்கி விழும் -உன்

கைகளில் பூமி சுழன்று வரும்!” – ஐந்துக்கும் மேற்பட்ட சீர்களால் ஆன அறுசீர் கழிநெடிலடி.

**6. தொடை**

தொடை – தொடுக்கப்படுவது. ஒரு செய்யுளில் எழுத்துக்களை அசைகளாக்கி, அசைகளைச் சீர்களாக்கி, சீர்களையெல்லாம் அடிகளாகக் கொண்டது மட்டுமல்லாமல் ஓசையின் இன்பமும், செய்யுளில் தோன்றும் பொருட்பயனும் முழுமையாக தொடுக்கப்படுவது தொடை எனப்படும். தொடை எட்டு வகைப்படும். அவை,

1. மோனைத் தொடை

2. எதுகைத் தொடை
3. முரண் தொடை
4. இயைபுத்தொடை
5. அளபெடைத் தொடை
6. அந்தாதித் தொடை
7. இரட்டைத்தொடை
8. செந்தொடை என்பதாகும்.

**1. மோனைத்தொடை**

செய்யுளின் முதலெழுத்து ஒன்றி வருவது மோனை எனப்படும். இவ்வகைகளில் முதலெழுத்துகளின்றி அதற்குரிய இனவெழுத்துகளும் ஒன்றி வரும். இதனை இணை மோனை, கிளை மோனை என்றும் கூறுவர். (மோனை – முதன்மை). மோனைத் தொடை இரு வகைப்படும். அவை,

- அடி மோனை
- சீர் மோனை என்பன.

**1. அடி மோனை**

அடிகள் தோறும் முதலெழுத்து ஒன்றி வருவது அடி மோனை எனப்படும்.

**(உம்)** **"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்"**

இங்கு, முதலடியின் முதலெழுத்தும் (சொ) இரண்டாமடியின் முதலெழுத்தும் (சொ) ஒன்றி வந்துள்ளன. இவ்வாறு அடிகளில் முதலெழுத்து ஒன்றி வருவது அடி மோனை எனப்படும்.

**2. சீர் மோனை**

சீர்கள் தோறும் முதலெழுத்து ஒன்றி வருவது சீர் மோனை எனப்படும்.

**(உம்)** **"கற்க கசடற கற்றவை கற்றபின்"**

இங்கு, நான்கு சீர்களிலும் முதலெழுத்தாக (க) வந்துள்ளது. இதுபோல் ஓர் அடியில் சீர்கள் தொறும் முதலெழுத்து ஒன்றி வருவது சீர் மோனை எனப்படும்.

**2. எதுகைத் தொடை**

செய்யுளின் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகைத் தொடை எனப்படும். எதுகைத் தொடை இரு வகைப்படும். அவை,

1. அடி எதுகை

2. சீர் எதுகை

**1. அடி எதுகை**

அடிகள் தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது அடி எதுகை எனப்படும்.

**(உம்)** **“காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்**

**ஞாலத்தின் மாணப் பெரிது”**

இங்கு, முதலடியின் இரண்டாம் எழுத்தும் (ல) இரண்டாமடியின் இரண்டாம் எழுத்தும் (ல) ஒன்றி வந்துள்ளன. இவ்வாறு அடிகளில் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது அடி எதுகை எனப்படும்.

**2. சீர் எதுகை**

சீர்கள் தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது சீர் எதுகை எனப்படும்.

**(உம்)** **“நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல”**

இங்கு, மூன்று சீர்களிலும் இரண்டாம் எழுத்தாக (ன்) வந்துள்ளது. இதுபோல் ஓர் அடியில் சீர்கள் தொறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது சீர் எதுகை எனப்படும்.

**3. முரண் தொடை**

செய்யுள் அடிகளில் உள்ள முதற்சீர்களோ அல்லது ஓர் அடியில் உள்ள சீர்களோ சொல்லாலும், பொருளாலும் முரண்பட்டு (எதிர்மாறாக) நிற்பது முரண்தொடை எனப்படும். இவையும் அடி முரண், சீர் முரண் என இரண்டு வகைப்படும்.

- ஒரு செய்யுளில் அடிகளில் முரண்படுவது அடிமுரண் ஆகும்.
- ஓர் அடியில் உள்ள சீர்களில் முரண்படுவது சீர் முரண் எனப்படும்.

**(உம்)** **“துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி**

**இன்பம் பயக்கும் வினை”**

இக்குறட்பாவில் துன்பம் – இன்பம் என அடிகளில் முரண்பட்டு நிற்பதைக் காண்கிறோம். இவை அடிமுரண் ஆகும்.

**(உம்)** **“இனிய உளவாக இன்னாது கூறல்”**

இவ்வடியில் இனிய – இன்னாத என சீர்கள் முரண்படுவதால் இவை சீர்முரண் எனப்படும்.

**4. இயைபுத் தொடை**

ஒரு செய்யுளின் அடிகளிலும், சீர்களிலும் இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ, ஒன்றி வருவது இயைபுத்தொடை எனப்படும்.

- ஒரு செய்யுள் அடிகளில் இயைபு அமைவது அடிஇயைபு ஆகும்.
- ஓர் அடியில் உள்ள சீர்களில் இயைபு அமைவது சீர் இயைபு எனப்படும்

**(உ.ம்)** **"திங்கள்முடி சூடுமலை தென்றல்விளை யாடுமலை**

**தங்குபுயல் சூழுமலை தமிழ்முனிவன் வாழுமலை"**

இங்கு மலை என இரண்டு அடிகளிலும் இயைந்து வந்ததால் இவை அடி இயைபு எனப்படும்.

**(உ.ம்)** **"பழமணல் மாற்றுமின் புதுமணல் பரப்புமின்"**

இவ்வடியில் உள்ள சீர்களில் மின் என இயைந்து வந்துள்ளதால் இவை சீர் இயைபு எனப்படும்.

**5. அளபெடைத்தொடை**

ஒரு செய்யுளின் அடிகளிலும், சீர்களிலும் அசைகள் அளபெடுத்து வருவது அளபெடைத்தொடை எனப்படும்.

- ஒரு செய்யுள் அடிகளில் அளபெடை அமைவது அடிஅளபெடை ஆகும்.
- ஓர் அடியில் உள்ள சீர்களில் அளபெடை அமைவது சீர் அளபெடை எனப்படும்.

**(உ.ம்)** **"கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே**

**எடுப்பதூஉம் எல்லாம் மழை"**

இங்கு கெடுப்பதூஉங் – எடுப்பதூஉம் என இரண்டு அடிகளிலும் அளபெடுத்து வந்துள்ளதால் இவை அடி அளபெடை எனப்படும்.

**(உ.ம்)** **"அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்"**

இவ்வடியில் உள்ள சீர்களில் அழிவதூஉம் – ஆவதூஉம் என அளபெடுத்து வந்துள்ளதால் இவை சீர் அளபெடை எனப்படும்.

**6. அந்தாதித்தொடை**

செய்யுளில் ஓர் அடியின் இறுதிச்சீரின் இறுதி எழுத்தோ அல்லது அசையோ அல்லது சீரோ அடுத்த அடியின் தொடக்கமாக வருவது அந்தாதித் தொடை எனப்படும்.

**(உ.ம்) "செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**

**செல்வத்துள் எல்லாம் தலை"**

**7. இரட்டைத்தொடை**

செய்யுளில் ஓர் அடி முழுவதும் ஒரே சொல்லை தொடர்ச்சியாக வருமாறு அமைத்துப் பாடுவது இரட்டைத் தொடை எனப்படும்.

**(உ.ம்) "வாழி வாழி வாழி வாழி**

**அம்ம கோவே வாழி"**

**8. செந்தொடை**

மோனைத் தொடை முதல் இரட்டைத் தொடை வரையிலான ஏழு தொடைகளுக்கும் சொல்லப்பட்ட இலக்கணங்கள் எதற்குள்ளும் பொருந்தாமல் தனித்து நிற்கும் தொடை செந்தொடை எனப்படும்.

**(உ.ம்) "தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**

**நாவினால் சுட்ட வடு"**

தொடையின் வகைகள் அமையும் முறை

மோனை – முதல் எழுத்து ஒன்றுபடல்

எதுகை – இரண்டாம் எழுத்து ஒன்றுபடல்

இயைபு – இறுதி எழுத்து ஒன்றுதல்

முரண் – முரண்பட்டு நிற்றல்

அளபெடை – அளபெடுத்து வருதல்

அந்தாதி இறுதி – முதலாக வருதல்

இரட்டைத் தொடை – ஒரே சொல்லே அடிமுதல் வருதல்

செந்தொடை – இவற்றில் பொருந்தாமல் தனித்து

தொடை விகற்பத்தின் வகைகள்

விகற்பங்கள் தொடைகளுடன் சேரும் முறை

விகற்பங்கள்

1. இணை = 1, 2 சீர்கள்

2. பொழிப்பு = 1, 3 சீர்கள்

3. ஒரூஉ = 1, 4 சீர்கள்

4. கூழை = 1, 2, 3 சீர்கள்

5. மேற்கதுவாய் = 1, 3, 4 சீர்கள்

6. கீழ்க்கதுவாய் = 1, 2, 4 சீர்கள்

7. முற்று = 1, 2, 3, 4 சீர்கள்

**உதாரணம்**

ஐந்து தொடைகளுடன் ஏழு விகற்பங்களும் ஒன்றாய்ச் சேரும்.

1. இணை மோனைத் தொடை
2. பொழிப்பு மோனைத் தொடை
3. ஒரூஉ மோனைத் தொடை
4. கூழை மோனைத் தொடை
5. மேற்கதுவாய் மோனைத் தொடை
6. கீழ்க்கதுவாய் மோனைத் தொடை
7. முற்று மோனைத் தொடை

இது போன்று ஒவ்வொரு விகற்பமும் தொடையுடன் சேர்ந்து வரும்.

**குறிப்பு**

- அந்தாதித் தொடை, இரட்டைத் தொடை, செந்தொடை ஆகிய மூன்றுக்கும் தொடை விகற்பங்கள் இல்லை.
- இதன் அடிப்படையில் தொடை விகற்பங்கள் மொத்தம் (7ஒ 5ஶ்ரீ35) 35 ஆகும்.

இவற்றையும் காண்க..

1. புறப்பொருள் வெண்பாமாலை 'பொருள் விளக்கம்' திணைகளும் துறைகளும்
2. அணி இலக்கணம் (தண்டியலங்காரம்)

## பா வகைகள்

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா எனப் „பா‟ நால்வகைப்படும்.

**வெண்பாவின் பொது இலக்கணம்**

1. (மாச்சீர், விளச்சீர்) வெண்சீர், (காய்ச்சீர்) வரும். பிற சீர்கள் வாரா.

3. இயற்சீர் வெண்டளையும் (மாமுன் நிரை, விளமுன் நேர்) வெண்சீர் வெண்டளையும் (காய்முன் நேர்) வரும், பிறதளைகள் வாரா.

4. மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளுள் ஒன்றுகொண்டு முடியும்.

5. செப்பலோசை பெற்று வரும்.

6. இரண்டடி முதல், பன்னிரண்டு அடிவரை வரும்.

**வெண்பாவின் வகைகள்**

வெண்பாவின் வகைகள் ஆறு. அவை குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, ப∴றொடை வெண்பா, நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா என்பன.

**1. குறள் வெண்பா**

வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று, இரண்டு அடிகளைக் கொண்டதாய், ஒரு விகற்பத ்தானும் இரு விகற்பத்தானும் வருவது குறள்வெண்பா (குறள் - இரண்டடி)

**"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**

**பகவன் முதற்றே உலகு"**

இக்குறட்பா ஒரு விகற்பத்தான் வந்த குறள் வெண்பா. (க என்னும் எழுத்து எதுகையாக இரண்டு அடிகளில் ஒன்றி வந்துள்ளது)

**"பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்**

**எண்ணிய தேயத்துச் சென்று"**

இக்குறட்பா இரு விகற்பத்தான் வந்த குறள் வெண்பா.

**2. நேரிசை வெண்பா**

வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று, நான்கு அடிகளைக் கொண்டதாயும், இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்றும், முதல் இரண்டடி ஒரு விகற்பமாயும், கடைசி இரண்டடி ஒரு விகற்பமாயும், நான்கடிகளும் ஒரு விகற்பமாயும் வருவது நேரிசை வெண்பா எனப்படும்.

**"நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்**

**புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல்லுலகில்**

**நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்(டு)**

**எல்லார்க்கும் பெய்யும் மழை".**

இப்பாடலின் நான்கடியிலும். இரண்டாமடியின் இறுதிச் சீரிலும் ஒரே எதுகை பெற்று ஒரு விகற்பத்தான் வந்த நேரிசை வெண்பா.

உன்னுள் கலைவைத்தாய் ஊக்க மலைவைத்தாய் கன்னல் மொழியுன்னுள் கள்வைத்தாய் மின்வைத்தாய் மண்ணில் புதுமை மலர்க்குள் மணம்வைத்தாய் தண்ணீர்த் தமிழேநீ தாய்.

இ∴து ஒரு விகற்பத்தான் வந்த நேரிசை வெண்பா.

**3. இன்னிசை வெண்பா**

வெண்பாவின் பொது இலக்கணம் பெற்றுத் தனிச்சொல் இன்றி நான்கடிகள் உடையதாய் வரும் . இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று, மூன்று விகற்பத ஷ்தான் வரும் மூன்றாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று, மூன்று விகற்பத ˙தான் வரும். மூன்றாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று, இரண்டு விகற்பத்தானும் வருவதும் இன்னிசை வெண்பா எனப்படும்.

**"தாய்தமக்கே ஒப்பில்லை தாரணியில் எப்பொருளும்**

**சேய்நம்மைச் சீராட்டி செந்நீரைப் பாலாக்கி**

**வாய்வழியாய்த் தாமூட்டி வாழ்விக்குந்**

**தெய்வமொன்று தாய்போலும் உண்டாமோ தான்".**

இப்பாடலில் இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் இல்லை. நான்கடிகளும் ஒரு விகற்பத்தான் வந்துள்ளன. (இரண்டாம் எழுத்து ய் எதுகையாகி ஒன்றி வந்துள்ளது)

**"தானங் கொடுக்குந் தகைமையும் மானத்தார்**

**குற்றங் கடிந்த வொழுக்கமும் - தெற்றெனப்**

**பல்பொரு ணீங்கிய சிந்தையும் இம்மூன்றும்**

**நல்வினை யார்க்குங் கயிறு".**

இப்பாடலில் இரண்டாம் அடியில் தனிச்சொல் வந்துள்ளது. ஆனால், நான்கடியிலும் மூன்று விகற்பங்கள் வந்துள்ளதால், இ∴து இன்னிசை வெண்பாவாயிற்று.

**4. ப∴றொடை வெண்பா**

வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று ஐந்தடிமுதல் பன்னிரண்டு அடிவரை பெற்று வருவது ப∴றொடை வெண்பா.

**"முக்கனியே! முப்பாலே! மூவாத முத்தமிழே!**

**சொக்கனது மாநகரைச் சூழ்ந்த பெரும்பேறே!**

**இத்தரைச் சூரியனே! எங்கள் உயிரமுதே!**

**சித்திரைத் தண்ணிலவே! தேயா மொழிவெற்பே!**

**செம்மொழி மாக்குடும்பம் சீராட்டும் செம்மொழியே!**

**எம்மொழிக்கும் மூத்தவளே! என்றும் இருப்பவளே!**

**பண்புணர்த்தும் ஆசானே! பார்போற்றும் தேனூற்றே!**

**கண்ணே! நீ ஞாலக் கனி!**

இப்பாடல் ஏனைய அடிகள் நான்கு சீராயும் வந்த ப∴றொடைவெண்பா.

**5. நேரிசைச் சிந்தியல் வெண்பா**

வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று நேரிசை வெண்பாவைப் போல இரண்டாமடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று, ஒரு விகற்பத்தானும் இருவிகற்பத்தானும் மூன்றடிகளாய் வருவது நேரிசைச் சிந்தியல் வெண்பா.

**"அறிந்தானை ஏத்தி அறிவாங் கறிந்து**

**சிறந்தார்க்குச் செல்வனுரைப்ப – சிறந்தார்**

**சிறந்தமை ஆராய்ந்து கொண்டு".**

மூன்றடிகள் உடையதாய் ஒரு விகற்பமாய் இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று வந்த நேரிசைச் சிந்தியல் வெண்பா.

**6. இன்னிசைச் சிந்தியல் வெண்பா**

வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று மூன்றடி கொண்டதாய்த் தனிச்சொல்லின்றி ஒரு விகற்பத்தானும் பல விகற்பத்தானும் வருவது இன்னிசைச் சிந்தியல் வெண்பா எனப்படும்.

**"பார்மொழிகள் அத்தனைக்கும் பாங்கான நற்றாயாம்**

**சீர்கொண்ட செந்தமிழே சிந்தனையில்**

**ஏற்றிடுவாய் பார்முழுதுஞ் சாற்றிடுவாய் பாய்ந்து".**

இ∴து இரண்டாம் அடியில் தனிச்சொல் இன்றி, ஒரு விகற்பத்தான் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

அலகிட்டு வாய்பாடும் தளையும் கூறுதல் ஒரு சீரைப் பிரித்து அசை பார்ப்பதே அலகிடுதல் அலகிடப் பின்பற்ற வேண்டிய எளிய வழிகள் மெய்யெழுத்தின் பக்கத்தில் ∴இக்குறியிடுக நெடில் பக்கத்தில் ∴இக்குறியிடுக இரு குறில் அடுத்து ∴இக்குறியிடுக

ஒற்று அல்லது ஆய்த எழுத்தை நீக்கி, ஓர் எழுத்து இருப்பின் நேர் எனக் கொள்க. இரண்டு எழுத்தாய் இருப்பின் நிரை எனப் கொள்க.

இவ்விதியைப் பின்பற்றிக் குறட்பாக்களைப் பிரித்துக் காண்போம்.

**சீர் அசை வாய்பாடு**

1. இல்.᛫.லா.᛫.ரை நேர் நேர் நேர் தேமாங்காய்
2. எல்.᛫.லா.᛫.ரும் நேர் நேர் நேர் தேமாங்காய்
3. எள்.᛫.ளுவர் நேர் நிரை கூவிளம்
4. செல்.᛫.வரை நேர் நிரை கூவிளம்
5. எல்.᛫.லா.᛫.ருஞ் நேர் நேர் நேர் தேமாங்காய்
6. செய்.᛫.வர் நேர் நேர் தேமா
7. சிறப்.᛫.பு நிரைநேர்-நிரைபு பிறப்பு

**ஆசிரியப்பாவின் பொது இலக்கணம்**

1. அளவடிளைப் (நான்கு சீர்) பெற்று வரும்.
2. இயற்சீர் (மாச்சீர், விளச்சீர்) பயின்று வரும். பிற சீரும் வரும். ஆனால் வஞ்சியுரிச்சீர்கள் வாரா.
3. ஆசிரியத் தளைகள் பயின்று வரும். பிற தளைகள் கலந்தும் வரும்.
4. மூன்றடிச் சிற்றெல்லையும், பாடும் புலவனின் மனக்கருத்திற்கேற்பப் பல அடிகளைப் பெற்று வரும்.
5. அகவலோசை பெற்று வரும்.
6. ஈற்றடியின் ஈற்றுச்சீர் ஏகாரத்தில் முடிவது சிறப்பு.

**2. ஆசிரியாப்பாவின் வகைகள்**

ஆசிரியப்பாவுக்கு அகவற்பா என்ற பெயரும் உண்டு. அவ்வாசிரியப்பா,நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப ்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா என நான்கு வகைப்படும்.

**1. நேரிசை ஆசிரியப்பா**

ஆசியரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று. ஈற்றயலடி முச்சீராயும் பிற அடிகள் நாற்சீராயும் வருவது நேரிசை ஆசிரியப்பா.

**"பாரி பாரி என்று பல ஏத்தி**

ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்

பாரி ஒருவனு மல்லன்

மாரியும் உண்டீன் டுலகு புரப்பதுவே".

இப்பாடல் ஈற்றயலடி முச்சீராயும் பிற அடிகள் நாற்சீராயும் வந்துள்ளன.

**2. இணைக்குறள் ஆசிரியப்பா**

ஆசிரியப்பாவின் பொது ,லக்கணத்தோடு முதலடியும் கடைசியடியும் நாற்சீர் அடிகளாகவும், இடையில் உள்ள அடிகள் இருசீர் (குறளடி) அடிகளாயும் முச்சீர் (சிந்தடி) அடிகளாயும் வருவது இணைக்குறள் ஆசிரியப்பா.

"நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்

சாரச் சார்ந்து

தீரத்தீரும் சாரல் நாடன் கேண்மை

சாரச் சாரச் சார்ந்து

தீரத் தீரத் தீர்பொல் லாதே."

இப்பாடலில் முதலடியும் இடையடிகள் குறளடியாகவும், சிந்தடியாகவும் வந்துள்ளன.

**3. நிலைமண்டில ஆசிரியப்பா**

ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று, எல்லா அடிகளும் நாற்சீர் (அளவடி) அடிகளாய் வருவது, நிலைமண்டில ஆசிரியப்பா எனப்படும்.

"இளையோர் சூடார் வளையோர் கொய்யார்

நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப

பாணன் சூடான் பாடினி அணியாள்

ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த

வல்லேற் சாத்தன் மாய்ந்த பின்றை

முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே"

இப்பாடலில் எல்லா அடிகளும் நாற்சீர்கள் கொண்டே அளவடிகளாக வந்துள்ளன.

**4. அடிமறி மண்டல ஆசிரியப்பா**

ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று, எல்லா அடிகளையும் முன்பின்னாக மாற்றி மாற்றிப் படித்தாலும் ஓசையும் பொருளும் மாறாது வருவது, அடிமறி மண்டில ஆசிரியப்பா.

**"தாய்மொழி வளர்த்தல் தமிழர்தங் கடனே**

**வாய்மொழி புரத்தல் மற்றவர் கடனே**

**காய்மொழி தவிர்த்தல் கற்றவர் கடனே**

**ஆய்மொழி யுரைதல் அறிஞர்தங் கடனே"**

இப்பாடலில் உள்ள அடிகளை முன்பின்னாக மாற்றினாலும் பாடலின் ஓசையும் பொருளும் மாறாமல் வருகின்றது

## பாவினங்கள்

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நான்கு பாக்களுக்கும், தாழிசை, துறை, விருத்தம் என்னும் மூவகைப் பாவினங்களும் அமைந்துள்ளன. ஆனால் பாவின் இலக்கணத்திற்கும் பாவின இலக்கணத்திற்கும் நெருங்கிய தொடர்பு இல்லை. பாவினங்களைப் பொருத்தவரையில் சீர், அடி எண்ணிக்கையும் வாய்பாட்டு அமைப்புமே கருத்தில் கொள்ளப் பெறுகின்றன.

### தாழிசை

குறள் தாழிசை, வெள்ளொத் தாழிசை, வெண்டாழிசை, ஆசிரியத் தாழிசை, கலித்தாழிசை, வஞ்சித் தாழிசை என்பனவாகத் தாழிசையின் வகைகள் அமைகின்றன.

ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வருதல் என்பது தாழிசையின் தனிச் சிறப்பாகும். பெரும்பாலும் நாட்டுப்புறப் பாடல்கள் ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வரும் தன்மையுடையன என்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

தாழிசைகளுள் வஞ்சித் தாழிசை பயன்பாட்டிற்குரியது.

**பாட்டாளர் நலம்பேணாத்**

**தேட்டாள ராய்வாழ்வார்**

**மாட்டாத மரமென்ன**

**நாட்டாரால் நகையுண்பர்** (1)

**எளியவர்க் கிரங்காமல்**

**ஒளியராய் உறவாழ்வார்**

**துளியிலா விசும்பென்ன**

**வெளியரால் இளிவுண்பர்** (2)

**உழவர்தம் உழைப்புண்டு**

**விழவராய் மிகவாழ்வார்**

**இழவராம் இவரென்னக்**

**கிழவரால் இழிவுண்பர் (3)**

(பாட்டாளர் = உழைப்பாளி தேட்டாளர் = செல்வ வசதியர் மாட்டாத = பயன்தர இயலாத் நாட்டார் = உலகினர் ஒளி = புகழ் விழவு = மகிழ்வு இழவர் = இழிவினர் கிழவர் = உரிமையுடையவர்)

எனப் புலவர் குழந்தை இதற்குச் சான்று காட்டுகின்றார்.

**துறை**

குறள்வெண் செந்துறை, ஆசிரியத் துறை, கலித்துறை, கட்டளைக் கலித்துறை, வஞ்சித்துறை என்பன துறை வகைகள் ஆகும். இவற்றுள் கலித்துறை, கட்டளைக் கலித்துறை, வஞ்சித் துறை ஆகியன தெரிந்துணர வேண்டியவையாகும்.

கலித்துறை

நெடிலடி (ஐஞ்சீரடி) நான்கு கொண்டது இது. மா, விளம், விளம், விளம், மா என்னும் வாய்பாட்டில் அமைந்த பாடல்.

**எனக்கு நல்லையும் அல்லைநீ என்மகன் பரதன்**

**தனக்கு நல்லையும் அல்லைஅத் தருமமே நோக்கின்**

**உனக்கு நல்லையும் அல்லைவந்(து) ஊழ்வினை தூண்ட**

**மனக்கு நல்லன சொல்லினை மதியிலா மனத்தோய்**

**(மந்தரை சூழ்ச்சிப் படலம் - 65**

(நல்லை = நல்லவள் அல்லை = நல்லவளில்லை மனக்கு = மனத்துக்கு)

என்பது கம்பராமாயணத்துத் தசரதன் கூற்று.

**கட்டளைக் கலித்துறை**

வெண்சீர் அமைந்த ஐந்து சீர்களையுடையதாய், ஐந்தாம் சீர் விளங்காய் வாய்பாட்டில் அமைந்ததாய், நேரசையில் தொடங்கின் 16 எழுத்தும், நிரையசையில் தொடங்கின் 17 எழுத்தும் என ஒற்று நீக்கி எண்ணத்தக்கதாய் அமைவது கட்டளைக் கலித்துறையாகும். கந்தரலங்காரம், அபிராமி அந்தாதி போன்ற நூல்கள் இவ்வகையில் அமைந்தனவாகும். பாவேந்தர் பாரதிதாசனாரின் வள்ளுவர் வழங்கிய முத்துகள் என்னும் தலைப்பிலான பாடல் வருமாறு:

**வெல்லாத இல்லை திருவள் ளுவன்வாய் விளைத்தவற்றுள்**

**பொல்லாத தில்லை புரைதீர்ந்த வாழ்வினி லேஅழைத்துச்**

**செல்லாத தில்லை பொதுமறை யான திருக்குறளில்**

**இல்லாத தில்லை இணையில்லை முப்பாலுக் கிந்நிலத்தே**

(புரை = குற்றம்)

**வஞ்சித் துறை**

குறளடி நான்கு கொண்டது இது. புளிமாங்காய் ␣ கருவிளம் என்னும் வாய்பாட்டிலமைந்த, ஆழிப்பேரலை குறித்த கி.சிவகுமாரின் பாடல் பின்வருமாறு:

**பிழைமூன்று பொறுப்பையாம்**

**பிழைச்சொல்லோ பெருங்கடல்!**

**அழைக்காமல் நுழைந்தனை!**

**பிழைக்காமல் விழுங்கினை!**

(பிழை = தவறு பிழைக்காமல் = யாரும் உயிர் பிழைக்காமல், தவறாமல்)

**விருத்தம்**

அளவொத்த நான்கு அடிகளையுடையது விருத்தம் எனப் பொதுவாகக் கூறலாம். வெளி விருத்தம், ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், வஞ்சி விருத்தம் என்பன விருத்தப்பா வகைகள். இவற்றுள் வெளிவிருத்தம் தவிர்த்த ஏனையன அறிய வேண்டியனவாகும்

**ஆசிரிய விருத்தம்.**

கழிநெடிலடி நான்கு உடையது இது. சீர்களின் எண்ணிக்கைக்கேற்பப் பெயர் பெறும்.

**1. விளம் மா தேமா - அறுசீர் விருத்தம்**

**தாயெழில் தமிழை என்றன்**

**தமிழரின் கவிதை தன்னை**

**ஆயிரம் மொழியில் காண**

**இப்புவி அவாவிற் றென்றே**

**தோயுறும் மதுவின் ஆறு**

**தொடர்ந்தென்றன் செவியில் வந்து**

**பாயுநாள் எந்த நாளோ?**

**ஆரிதைப் பகர்வார் இங்கே**

(மது = தேன் பாயுநாள் = பாயும் நாள்)

பாவேந்தரின் பாடல் இது. விளச்சீருக்குப் பதில் மாங்காய்ச் சீரும் வரலாம்.

**2. மா மா காய் வாய்பாடு - அறுசீர் விருத்தம்**

**இல்லாப் பொருளுக் கேங்காமல்**

**இருக்கும் பொருளும் எண்ணாமல்**

**எல்லாம் வல்ல எம்பெருமான்**

**இரங்கி அளக்கும் படிவாங்கி**

**நல்லார் அறிஞர் நட்பையும்நீ**

**நாளும் நாளும் நாடுவையேல்**

**நில்லா உலகில் நிலைத்தசுகம்**

**நீண்டு வளரும் நிச்சயமே**

**உமர்கய்யாம் - கவிமணி)**

**3. விளம் மா விளம் மா, விளம் விளம் மா - எழுசீர் விருத்தம்.**

**தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னை**

**சங்கரா ஆர்கொலோ சதுரர்?**

**அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்**

**யாதுநீ பெற்றதொன் றென்பால்?**

**சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்!**

**திருப்பெருந் துறையுறை சிவனே!**

**எந்தையே! ஈசா! உடலிடம் கொண்டாய்!**

**யான்இதற்கு இலன்ஓர்கைம் மாறே!**

**(கோயில் திருப்பதிகம் - 10)**

(சங்கரன் = சிவன் சதுரர் = திறமையுடையவர் அந்தம் = முடிவு கைம்மாறு = பதிலுதவி)

என்பது மாணிக்கவாசகரின் திருவாசகம்.

**4.காய் காய் மா தேமா - எண்சீர் விருத்தம்.**

**ஆவீன மழைபொழிய இல்லம் வீழ**

**அகத்தடியாள் மெய்ந்நோவ அடிமை சாவ**

**மாவீரம் போகுமென்று விதைகொண் டோட**

**வழியிலே கடன்காரன் மறித்துக் கொள்ளச்**

**சாவோலை கொண்டொருவன் எதிரே செல்லத்**

**தள்ளவொண்ணா விருந்துவரச் சர்ப்பம் தீண்டக்**

**கோவேந்தன் உழுதுண்ட கடமை கேட்கக்**

**குருக்களோ தட்சணைகள் கொடுவென் றாரே**

(ஆவீன = ஆ ஈன, பசுகன்று ஈன் இல்லம் = வீடு மாவீரம் = பெரிய ஈரம்)

என்பது இராமச்சந்திர கவிராயரின் தனிப்பாடல். காய்ச்சீருக்குப் பதில் சில இடங்களில் விளச்சீர் வருதலும் உண்டு.

**கலி விருத்தம்**

அளவடி நான்கு கொண்டது இது. விளம், விளம், மா, விளம் என்னும் வாய்ப்பாட்டில் அமைந்த வில்லிபாரதப் பாடல் வருமாறு:

**அருமறை முதல்வனை ஆழி மாயனைக்**

**கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனைத்**

**திருமகள் கேள்வனைத் தேவ தேவனை**

**இருபத முளரிகள் இறைஞ்சி ஏத்துவாம்**

(முளரி = தாமரை பதம் = திருவடி)

**வஞ்சி விருத்தம்**

சிந்தடி நான்கு கொண்டு அமைவது இது. விளம், விளம், காய் வாய்பாட்டிலான கி.சிவகுமாரின் பாடல் வருமாறு:

என்பது பெண்என எழுச்சியுறும்

வன்கலும் புணைஎன மிதக்கலுறும்

முன்சுவை மகவினை முதலைதரும்

தென்தமிழ்த் திருமுறைச் செயலாலே்

(என்பது = எலும்பானது கலும் = கல்லும் சுவை மகவு = விழுங்கிய குழந்தை)

மரபுக் கவிதை வகைமை குறித்து அறிந்தோம். இனி இசைப்பா வகைமையைக் காண்போம்.

**வினாக்கள்**

## I சிறிய வினாக்கள்

1. அகப்பொருள் என்றால் என்ன? விளக்கம் தருக.
2. புறப்பொருள் என்றால் என்ன? விளக்கம் தருக.
3. யாப்பு உறுப்புகள் எவை?
4. பா வகைகள் எவை?
5. பாவினங்களின் பெயரிகளைக் குறிப்பிடுக.

## II பெரிய வினாக்கள்

1. யாப்பின் உறுப்புகளைச் சான்றுடன் விளக்குக.
2. தொடையின் வகைகளைச் சான்றுடன் விளக்குக.
3. அசை, சீர், அடி சான்றுடன் விளக்குக.
4. பாவகைகளை கூறி சான்றுடன் விளக்குக.
5. அகப்பொருள் தரும் செய்திகளைத் தொகுத்துரைக்க.
6. புறப்பொருள் தரும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

# அலகு - 3

## அணி இலக்கணம்

அணி என்றால் அழகு என்று பொருள். செய்யுளில் அமைந்து கிடக்கும் சொல்லழகு, பொருளழகு ஆகியவற்றை வரையறுத்துக் கூறுவது அணி இலக்கணம்.

செய்யுளும் அழகுபடச் சொல்லப்பட வேண்டும். பாடலில் சொல்லப்படும் கருத்தையும் எளிதாக புரிய வைக்க வேண்டும். இதற்காக செய்யுளில் பல்வேறு உத்திகள் கையாளப்பட்டிருக்கும். அதனைத்தான் அணி இலக்கணம் என்கிறோம்.

அணி இலக்கண நூல்களில் மிகவும் தொன்மையான நூல் தண்டியலங்காரம். தண்டி என்ற ஆசிரியர் எழுதிய அலங்காரம் அதாவது அணி பற்றி எழுதப்பட்ட நூல் தண்டியலங்காரம்.

இந்த நூலில் முப்பத்தைந்து அணிகளுக்கான இலக்கணம் கூறப்பட்டுள்ளது. அவற்றுள் வேற்றுமையணிக்காணம் யாது என்பது பற்றிய செய்திகளை இக்கட்டுரையில் காண்போம்.

பிரிமொழிச் சிலேடை இலக்கணம் என்பது தமிழ் மொழியின் விதிகளையும் கூறுகளையும் விளக்குவது அதாவது ஒரு மொழியை பிழையில்லாமல் பேசுவதற்கும் எழுதுவதற்கும் தேவையான இலக்கண விதிகளில் உள்ள ஒரு தொகுப்பு. தமிழில் மொத்தம் ஐந்து இலக்கணங்கள் உள்ளன. அவை பொருள், யாப்பு இலக்கணம், எழுத்து இலக்கணம், அணி இலக்கணம், அவற்றுள் ஒன்றான அணி இலக்கணம் பற்றிய இந்த பதிவில் தெரிந்து கொள்ளலாம் வாங்க.

அணி என்பதற்கு அழகு என்று பொருள்படும் அதாவது ஒரு செய்யுளில் இருக்கும் சொல்லின் அழகு மற்றும் பொருளின் அழகு ஆகியவற்றை எடுத்து கூறுவது அணி இலக்கணம் எனப்படும். இந்த இலக்கணம் கூறும் தொன்மையான நூல் தண்டியலங்காரம்.

**அணிகள் எத்தனை வகைப்படும்.**

**அணிஇலக்கணம் வகைகள்**

அவை இரண்டு வகைப்படும். அவை,

- சொல்லணி
- பொருளணி

**சொல்லணி**

யமகம், மடக்கு முதலான அணிகள் சொல்லணிகள் ஆகும். இவை ஆறு வகைப்படும்.

1. எதுகை
2. மோனை
3. சிலேடை
4. மடக்கு
5. பின்வருநிலையணி
6. அந்தாதி

**பொருளணி**

உவமை, உருவகம் போன்றவற்றை விலகும் அணிகள் பொருளணியில் அடங்கும். பொருளணிகளை கூறுகின்றது.

1. அதிசய அணி
2. அவநுதியணி
3. ஆர்வமொழியணி
4. இலேச அணி
5. உதாத்த அணி
6. ஏது அணி
7. ஒட்டணி
8. ஒப்புமைக் கூட்ட அணி
9. ஒழித்துக்காட்டணி
10. சங்கீரண அணி
11. சமாகித அணி
12. சிலேடையணி
13. சுவையணி
14. தற்குறிப்பேற்ற அணி
15. தன்மேம்பாட்டுரை அணி
16. தன்மையணி

17. தீவக அணி
18. நிதரிசன அணி
19. நிரல்நிறையணி
20. நுட்ப அணி
21. பரியாய அணி
22. பரிவருத்தனை அணி
23. பாவிக அணி
24. பின்வருநிலையணி
25. புகழாப்புகழ்ச்சி அணி
26. புணர்நிலையணி
27. மயக்க அணி
28. மாறுபடு புகழ்நிலையணி
29. முன்ன விலக்கணி
30. வாழ்த்தணி
31. விசேட அணி
32. விபாவனை அணி
33. விரோக அணி
34. வேற்றுப்பொருள் வைப்பணி
35. வேற்றுமையணி

**உவமை அணி**

**“மயில்போல ஆடினாள்**

**மீன் போன்ற கண்”**

இது தொடர்களை படியுங்கள். இத்தொடர்களில் நடனம் ஆடும் பெண்ணோடு மயிலையும், கண்ணுடன் மீனையும் ஒப்பீட்டு உள்ளனர். இவ்வாறு ஒப்பிட்டுக் கூறப்படும் பொருளை உவமை அல்லது உவமானம் என்பர். இதே பல உவமையால் விளக்கப்படும் பொருளை உவமேயம் என்பர். இத்தொடர்களில் வந்துள்ள ”போல“, போன்ற“ என்பவை உவம உருபுகள் ஆகும்.

**எடுத்துக்காட்டு**

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

அணி விளக்கம்:

பூமி தன்னை தோண்டுபவரை பொறுத்துக் கொள்வது போல நாம் நம்மை இகழ்ந்து பேசுபவரை பொறுத்துக் கொள்ள வேண்டும் என்பது இக்குறளின் பொருள்.

இதில் பூமி தன்னை தோன்றுபவரே பொறுத்துக் கொள்ளுதல் என்பது உவமை. நாம் நம்மை இகழ்ந்து பேசுபவரை பொறுத்துக் கொள்ள வேண்டும் என்பது ஒப்பிடப்படும் பொருள் உவமேயம். போல என்பது உவமை உருபு. ஒரு பாடலில் உண்மையும் நியாயமும் வந்து உவம உருபு வெளிப்படையாக வந்தால் அது உவமை அணி எனப்படும்.

- போல
- புரைய
- அன்ன
- இன்ன
- அற்று
- மான
- கடுப்ப
- ஒப்ப
- உறழ

போன்றவை உவம உருபுகள் ஆகும்.

**உருவக அணி**

உவமை அணியில் ஒரு பொருளோடு ஒரு பொருளை ஒப்பிட்டுக் கூறும் போது அவை ஒப்புமை உள்ள வேறுவேறு பொருள்கள் எனவே காட்டப்படும். ஆனால் சில போது உவமைக்கும் அது கொண்டு விளக்கப்படும் பொருளுக்கும் இடையிலான ஒப்புமை மிக அதிகமாக உள்ளது எனக் காட்ட விரும்பகிறார். கவிஞர்.

தாமரை போன்ற முகம் எனக் கூறிவந்த கவிஞருக்கு இரண்டினுக்கும் உள்ள ஒற்றுமை மிகுந்து. வேற்றுமை குறைவு எனத் தோன்றுகிறது. காலப்போக்கில் அவை இரண்டினுக்கும் வேற்றுமை இல்லை. அவை இரண்டும் ஒன்றே என்ற உணர்வு தோன்றுகிறது.

முகம் ஆகிய தாமரை என்று கூறிவிடுகிறார் இங்கு முகமே தாமரை எனப்பொருள் வருகிறது. இவ்வாறு வரும் போது உவமையணியிலிருந்து உருவக அணி தோன்றுவதை உணரலாம்.

**வேற்றுமை அணி**

செய்யுளில் இரு பொருள்களுக்குரிய ஒற்றுமைகளை முதலில் கூறி, பின்னர் பிரிதொரு காரணத்தால் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபட்டதெனக் காட்டுவது வேற்றுமை அணி எனப்படும்.

எ.கா

**“தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**

**நாவினால் சுட்ட வடு”**

தீயினால் சுட்டபுண் உடம்பில் தோன்றினாலும் உள்ளே ஆறிவிடும்.ஆனால் நாவினால் பேசிய தீய சொற்கள் ஒருவர் உள்ளத்தைச் சுட்டு என்றும் நீங்காதிருக்கும் வடுவாகி நிரந்தரமாக இருக்கும் என்பது இப்பாடலின் பொருள்.

தீ சுடும். நாவும் சுடும். அதாவது நாவினால் ஒருவரைக் கடுமையாகப் பேசிவிட்டால் அது அவர் உள்ளத்தைக் காயப்படுத்திவிடும். அதனால் தீ, நாவு இரண்டிற்கும் சுடுகின்றதான ஒற்றுமை குணம் உண்டு. ஆனால் இவை இரண்டிற்கும் இடையே ஒரு வேற்றுமையும் உண்டு.

தீயினால் சுட்டபுண் ஆறிவிடும். ஆனால் நாவினால் சுட்டபுண் என்றும் ஆறாது. சொல்லிய வார்த்தையைத் திரும்பப் பெற முடியாது. நம்மால் ஒருவர் உள்ளம் ஒருமுறை காயப்பட்டுவிட்டால்... காயப்பட்டது காயப்பட்டதுதான். அதனை ஆற்றவே முடியாது. அது நிரந்தர வடுவாகிப் போகும். தீயும் சுடும். கடுமையான வார்த்தைகளும் சுடும்.

ஆனால்.....தீயினால் சுட்டப்புண் ஆறிவிடும். நாவினால் சுட்டப்புண் ஆறாது.

இது வேற்றுமை. ஆதலால் இது வேற்றுமை அணி.

**வேற்றுப் பொருள் வைப்பணி**

முதலில் ஒரு பொருளினது திறத்தைத் தொடங்கிய கவிஞர் பின்னர் அதனைச் சிறப்பாக முடிப்பதற்கு ஏற்ற வலிமை வாய்ந்த உலகறிந்த, வேறு ஒரு பொருளை ஏற்றி வைத்துச் சொல்வது வேற்றுப்பொருள் வைப்பு அணி ஆகும். இவ்வாறு கவிஞன் தான் சொல்லத் தொடங்கிய பொருளை உறுதிப்படுத்துவதற்காக வேற்றுப் பொருளைச் சொல்லி முடிப்பதால் இவ்வணிக்கு இப்பெயர் அமைந்தது.

**“முன்ஒன்று தொடங்கி மற்றுஅது முடித்தற்குப்**

**பின் ஒருபொருளை உலகுஅறி பெற்றி**

**ஏற்றிவைத்து உரைப்பது வேற்றுப்பொருள் வைப்பே” (தண்டி.46)**

வேற்றுப் பொருள் வைப்பு அணியில் கவிஞா் முன்னா்க் கூறும் பொருளைச் சிறப்புப் பொருள் என்றும் பின்னா் அதனை முடித்தற்கு அவா் கூறும் உலகு அறிந்த வலிமையான பொருளைப் பொதுப் பொருள் என்றும் குறிப்பிடுவர். சிறப்புப் பொருளைப் பொதுப் பொருள் கொண்டு முடித்தல் வேற்றுப்பொருள் வைப்பு அணி என்று இதன் இலக்கணத்தைச் சுருக்கமாகக் கூறலாம்.

**சொற்பொருள் பின்வரும்நிலையணி**

செய்யுளில் முன்பு வந்த ஒரு சொல், மீண்டும் மீண்டும் பலமுறை வந்து அதே பொருளை விளக்கினால், அது சொல் பொருள் பின்வரு நிலையணி என அழைக்கப்படும்.

எடுத்துக்காட்டு

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும் துணைவலியும் தூக்கிச் செயல்.

பொருள்

ஒரு செயலை செய்வதற்கு முன் செய்யக்கூடிய செயலின் வலிமை, தன்னுடைய வலிமை, பகைவனின் வலிமை மற்றும் துணையாளரின் வலிமை ஆகியவற்றினை சீர்தூக்கி ஆராய வேண்டும்.

குறலளில் வலி என்வற சொல் பலமுறை வந்து வலிமை என் ற ஒரே பொருளை விளக்குவதால் இந்த குறளில் சொல் பொருள் பின்வரு நிலையணி பயின்று வந்துள்ளது.

**தற்குறிப்பேற்ற அணி**

தற்குறிப்பேற்ற அணி என்பது இயல்பாக நடக்கும் ஒரு நிகழ்வின் மீது கவிஞர் தன் குறிப்பை ஏற்றுவதாகும்.

எ.கா.

**“போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி**

**வாரல் என்பனபோல் மறித்துக் கைகாட்ட” (சிலப்பதிகாரம்)**

கோவலனும் கண்ணகியும் மதுரை மாநகரத்திற்குள் நுழைய முற்படும்போது இயல்பாகக் காற்றிலாடும் தோரண வாயிற் கொடிகளைக் கவிஞர் தம் கற்பனையினால் கோவலன் மதுரையில் கொல்லப்படுவான் என்று முன்னமே அறிந்து வர வேண்டாம் என அக்கொடிகள் எச்சரிப்பதாகக் குறிப்பேற்றிக் கூறுவார்.

## வஞ்சப்புகழ்ச்சி அணி

ஒருவரை புகழ்வது போல் இகழ்வதும், இகழ்வது போல் புகழ்வதும் வஞ்சப்புகழ்ச்சியணி ஆகும்.

- புகழ்வது போல் இகழ்தல்
- இகழ்வது போல் புகழ்தல்

**புகழ்வது போல் இகழ்தல் - அணி இலக்கணம்**

எ.கா.

**“தேவ ரனையர் கயவர் அவருந்தாம்**

**மேவன செய்தொழுக லான்”**

இக்குறட்பாவில் கயவர்கள் தேவர்களுக்கு ஒப்பானவர்கள் என்று புகழ்வது போல தோன்றினாலும், தேவா்கள் உயர்ந்த செயல்களை மட்டும் செய்வார்கள் என்றம், கயவர்கள் இழிவான செயல்களை செய்வார்கள் என்று புகழ்வது போல இகழ்வதை இக்குறட்பாவில் காணலாம்.

**இகழ்வது போல் புகழ்தல் - அணி இலக்கணம்**

எ.கா.

**“பாரி பாரி என்றுபல ஏத்தி**
**ஒருவர்ப் பகழ்வா், செந்நாப் புலவர்**
**பாரி ஒருவனும் அல்லன்;**
**மாரியும் உண்டு, ஈண்டு உலகுபுரப் பதுவே”**

இந்த பாடலில் புலவர்கள் பாரியை புகழ்கின்றனா். பாரி மட்டும் கைம்மாறு கருதாமல் பொருள்களை கொடுக்கிறான்? மழையம் இவ்வுலகத்தில் அனைத்து பகுதியிலும் கைம்மாறு கருதாமல் பொழிகிறது. இதில் பாரியை இகழ்வது போல இருந்தாலும் பாரிக்கு நிகராக கொடை செய்வதற்கு யாரும் இல்லை என்று கூறி புகழ்வது ஆகும்.

## பிறிது மொழிதல் அணி

பிறிது மொழிதல் அணி என்பது உவமையை கூறி பொருளை பெற வைப்பது பிறிது மொழிதல் அணி எனப்படும்.

உருவக அணி உவமை அணியில் ஒரு பொருளோடு ஒரு பொருளை ஒப்பிட்டுக் கூறும் போது அவை ஒப்புமை உள்ள வேறுவேறு பொருள்கள் எனவே காட்டப்படும். ஆனால் சிலபோது உவமைக்கும் அது கொண்டு விளக்கப்படும் பொருளுக்கும் இடையிலான ஒப்புமை மிக அதிகமாக உள்ளது எனக் காட்ட விரும்புகிறார். கவிஞர்.

“தாமரை போன்ற முகம்“ எனக் கூறிவந்த கவிஞருக்கு, இரண்டினுக்கும் உள்ள ஒற்றுமை மிகுந்து, வேற்றுமை குறைவுளனத் தோன்றுகிறது. காலப்போக்கில் அவை இரண்டினுக்கும் வேற்றுமை இல்லை அவை இரண்டும் ஒன்றே என்றமனவுணர்வு தோன்றுகிறது,

**முகம் ஆகிய தாமரை**

என்று கூறிவிடுகிறார். இங்கு முகமே தாமரை எனப்பொருள் வருகிறது. இவ்வாறு வரும்போது உவமையணியிலிருந்து உருவக அணி தோன்றுவதை உணரலாம்.

உருவக அணியின் இலக்கணம் உவமையாகின்ற பொருளுக்கும் (உவமானம்) உவமிக்கப்படும் (உவமேயம்) பொருளுக்கும் இடையிலான வேறுபாட்டை நீக்கி, அவை இரண்டும் ஒன்றே என்னும் உள்ளுணர்வு தோன்றுமாறு ஒற்றுமைப் படுத்திக் கூறுவது உருவகம் என்னும் அணியாகும். அதாவது உவமேயத்தில் உவமானத்தை ஏற்றிக் கூறுதல். இதனை,

**“உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து**

**ஒன்று என மாட்டின் அஃது உருவகம் ஆகும்” (தண்டி. 35)**

என்ற நூற்பாவால் அறியலாம்.

உருவக அணி விளக்கம் உவமையணியில் உவமானம் முன்னும் உவமேயம்பின்னும் இருக்கும். இரண்டினுக்கும் ஒப்புமை காட்ட இடையில்போல, புரைய, அன்ன முதலான உவமை உருபுகளுள் ஒன்றுவரும். உருவக அணியில் உவமேயம் முன்னும் உவமானம்பின்னும் வரும். இவற்றை ஒற்றுமைப் படுத்துவதற்காக “ஆகிய“என்ற உருபு இடையில் வரும். “ஆக“ என்ற உருபும்வருவதுண்டு. இவை “உருவக உருபுகள்“ என்று கூறப்படும்.இவை மறைந்து வருதலும் உண்டு.

**மலர்போன்ற கண், மலர்க்கண் - உவமை**

**கண் ஆகிய மலர், கண்மலர் - உருவகம்**

மலர் போன்ற கண் என்ற உவமையில் மலரும் கண்ணும்வேறு வேறு எனும் உணர்வு தோன்றுவதையும், கண் ஆகியமலர் என்ற உருவகத்தில் கண்ணே மலர், கண்ணும் மலரும்வேறுவேறல்ல என்னும் உணர்வு தோன்றுவதையும் நீங்கள் காணலாம்.

**சிலேடை அணி**

ஒருவகை நின்ற சொற்றொடர் பல பொருட்களைப் புலப்படுத்துமாறு விளங்கி வருவது சிலேடை என்னும் அணியாகும்.

இரட்டுறமொழிதல் அணி என்ற வேறுபெயரும் உண்டு. (இரண்டு + உற + மொழிதல் = இரட்டுறமொழிதல்) அதாவது, இரண்டு பொருள்பட அமைத்துக் கூறுதல் சிலேடை அணி எனப்படும். இது,

1. செம்மொழி சிலேடை
2. பிரிமொழி சிலேடை என இரு வகைப்படும்.

**1. செம்மொழி சிலேடை**

இது ஒரே வகையாய் நின்று பல பொருள் தருவது ஆகும்.

**2. பிரிமொழி சிலேடை**

இது ஒரே வகையாய் நின்ற சொல்லைப் பிரித்துத் தொகை வேறுபடுத்திப் பல பொருள் கொள்வதாகும்.

**வினாக்கள்**

**I சிறிய வினாக்கள்**

1. அணி இலக்கணம் தருக?
2. உவமையணி என்றால் என்ன?
3. வேற்றுமையணி என்றால் என்ன?
4. சிலேடை என்றால் என்ன? விளக்கம் தருக.
5. சொற்பொருள் பின்வருநிலையணி - விளக்கம் தருக.

**II பெரிய வினாக்கள்**

1. அணி இலக்கணம் என்றால் என்ன? வகைகளைச் சான்றுடன் விளக்கக.
2. உவமை, உருவக அணியினைச் சான்றுடன் விளக்குக.
3. வஞ்சப்புகழ்ச்சி, பிறிதுமொழிதல் அணியினைச் சான்று தந்து விளக்குக.
4. தற்குறிப்பேற்ற, வஞ்சப்புகழ்ச்சி அணியினை விளக்குக.

# அலகு - 4

### ஓரெழுத்து ஒரு மொழி எழுத்துக்கள்

வணக்கம் நண்பர்களே, இன்றைய தமிழ் பகுதியில் ஓரெழுத்து ஒரு மொழி என்றால் என்ன? ஒரெழுத்து ஒரு மொழிக்கான பல எடுத்துக்காட்டுகளை இந்த பதிவில் தெரிந்துக்கொள்ளலாம். இந்த ஓரெழுத்து ஒரு மொழி எழுத்துக்கள் பற்றிய கேள்விகள் தேர்வுகளில் கேட்கப்படுகிறது. இந்த ஓரெழுத்து ஒரு மொழி எழுத்துக்கள் முக்கியமான பொது தமிழ் குறிப்பகளாகும். வாங்க ஓரெழுத்து ஒரு மொழிகளை படித்து தெரிந்துக்கொள்ளலாம்.

### ஓரெழுத்து ஒரு மொழி

ஒரெழுத்து ஒரு மொழி என்பது ஒரே ஒரு எழுத்து ஒரு சொல்லாக வந்து பொருள் தருவது ஒரெழுத்து ஒரு மொழி ஆகும். ஒரே ஒரு எழுத்து மட்டும் தனித்து வந்து ஒரு பொருளைக் குறிக்குமானால் அதற்கு ஓரெழுத்து ஒரு மொழி என்று பெயர்.

**எ.கா.**

‘‘தை - தை என்ற எழுத்து தை மாதத்தில் ஒன்றான மாத்தின் பெயரை குறிக்கிறது. இதே எழுத்து தைத்தல், பொருத்துதல் என்ற பொருளிலும் வரும். இது போன்ற ஒரே ஒரு எழுத்தானது ஒரு கொருளை தரக்கூடியது ஓரெழுத்து ஒரு மொழியாகும்.

**ஒரெழுத்து ஒரு மொழிக்கு சில எடுத்துக்காட்டு**

**ஓரெழுத்து ஒரு மொழி சொற்கள்**

**உயிர் இனம் (6) - ஆ, ஈ, ஊ, ஏ,ஐ, ஓ**

ஆ - பசு

ஈ - பறக்கும் பூச்சி, கொடு

ஊ - இறைச்சி

ஏ - அம்பு

ஐ - அழகு, தலைவன், வியப்பு

ஓ - வியப்பு,வினா, மதகுநீர் தாங்கும் பலகை

**“ம்“ இனம் (6) - மா,மீ,மு,மே,மை,மோ**

மா - பெரிய, சிறந்த உயர்ந்த மாமரம்,அழகு,மேன்மை,விலங்கு

மீ - மேலே, உயர்ச்சி, வான்

மு - மூப்பு, முதுமை

மே -மேன்மை,அன்பு

மை - கண்மை (கருமை), அஞ்சனம்

மோ - முகர்தல், முகத்தல்

**“த்“ இனம் (5) - தா,தீ,தூ, தே, தை**

தா- கொடு,கேட்பது

தீ- நெருப்பு, தீமை

தூ - வெண்மை, தூய்மை

தே - கடவுள்

தை - தமிழ்மாதம், தைத்தல்

**“த்“ இனம் (1) - து - குறிலெழுத்துகளால் ஆகிய சொல்**

து - கெடு,பிரிவு, உண்

**“ப்“ இனம் (5) - பா, பூ, பே, பை, போ**

பா - பாட்டு, பாடல்

பூ - மலர்,புவி

பே˙ நுரை, மேகம்

பை - இளமை,கைப்பை

போ - செல்

**“ந்“ இனம் (5) - நா, நீ,நே, நை, நோ**

நா - நாக்கு, நாவு

நீ - முன்னிலை ஒருமை, நீக்குதல்

நே - அன்பு

நை - வருந்து, இழிவு

நோ - வறுமை

**“ந்“ இனம் (1) - நொ- குறிலெழுத்துகளால் ஆகிய சொல்**

நொ - துன்பம், நோய்

**“க்“ இனம் (4) - கா, கூ, கை, கோ**

கா - காத்தல், சோலை

கூ - பூமி

கை - உறுப்பு,கரம், ஒழுக்கம்

கோ - வேந்தன்,அரசன்

**“ச்“ இனம் (4) - சா, சீ, சே, சோ**

சா - மரணம்,பேய், இறந்துபோ

சீ - இகழ்ச்சி

சே - எருது, உயர்வு

சோ - மதில், அரண்

**“வ்“ இனம் (4) - வா, வீ, வை, வௌ**

வா - வருக, அழைத்தல்

வீ - மலர்

வை - வைத்தல், புல்

வௌ - வவ்வுதல், கௌவுதல், கவர்

**“ய்“ இனம் (1) - யா**

யா- ஒரு வகை மரம், யாவை, அகலம்

**எண்ணும்மை**

‘உம்’ என்னும் இடைச்சொல் வெளிப்பட்டே வருமானால் அது ‘எண்ணும்மை’ என்று அழைக்கப்படுகிறது.

(எ.கா) இரவும் பகலும், ஆணும் பெண்ணும், நீயும் நானும், காயும் கனியும்

**அன்மொழித்தொகை**

வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகைநிலைத் தொடர்களுக்குப் புறத்தே அல்லாத சில மொழிகள் தொக்கி (மறைந்து) நின்று பொருள் தருவது அன்மொழித்தொகை ஆகும்.

எகா) (பொற்றொடி வந்தாள் (தொடி என்றால் வளையல் ஆகும்)

இத்தொடரில் முதலில் உள்ள 'பொற்றொடி' என்னும் சொல் 'பொன்னால் ஆன வளையல் என்னும்' பொருளைத் தரும். இது மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்சு தொகையாகும். இத்தொடர் 'வந்தாள்' என்னும் வினைச்சொல்லைத் தழுவி நிற்பதால் பொன்னால் ஆன வளையலை அணிந்த பெண் வந்தாள் எனப்பொருள் தருகிறது. அணிந்த பெண் என்பது தொடரில் இல்லாத மொழியாகும். வேற்றுமைத் தொகையை அடுத்து அல்லாத மொழி தொக்கி நிற்பதால் இத்தொடர் 'வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை எனப்படும்.

**குற்றியலுகரம்**

குற்றியலுகரம் – குறுமை ¸ இயல்¸உகரம். குறைந்த அளவு ஒலிக்கின்ற 'உ' என்னும் எழுத்து. இது அரை மாத்திரை அளவு ஒலிக்கும். வல்லின மெய்களுள் ஏதேனும் ஒன்றன்மேல் சேர்ந்து வரும் உகரம் (கு, சு, டு, து, பு, று) சொல்லின் இறுதியில் வரும்பொழுது, தனக்குரிய ஒரு மாத்திரையிலிருந்து குறைந்து அரை மாத்திரை அளவினதாக ஒலிக்கும். இதுவே குற்றியலுகரமாகும்.

ஆயின், இவ்வாறு ஒலிக்கும்பொழுது இரண்டு எழுத்துக்களாலான சொல்லாக இருப்பின் முதல் எழுத்து நெடிலாக இருத்தல் வேண்டும்.

| வ.எண் | குற்றியலுகர வகைகள் | எடுத்துக்காட்டுகள் |
|---|---|---|
| 1 | நெடில் தொடர்க்குற்றியலுகரம் | பாகு, காசு. தோடு. காது. சோறு |
| 2 | ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் | எ∴து |
| 3 | உயிர்த் தொடர்க்குற்றியலுகரம் | அழகு, முரசு, முரடு, எருது, மரபு, பயறு |
| 4 | வன்றொடர்க் குற்றியலுகரம் | பாக்கு, தச்சு, தட்டு. பத்து, உப்பு, புற்று |
| 5 | மென்றொடர்க் குற்றியலுகரம் | பாங்கு, பஞ்சு, வண்டு, பந்து, அம்பு, கன்று |
| 6 | இடைத்தொடர்க் குற்றியலுகரம் | மூழ்கு, செய்து, சால்பு |

**குற்றியலுகர வகைகள்**

உ என்னும் எழுத்தைத் தனியாக ஒலிக்கும் பொழுது உதடுகள் குவிந்து ஒரு மாத்திரை அளவு ஒலிக்கின்றது.

குறிப்பு : இரண்டே எழுத்தாலான சொல்லில் இறுதி எழுத்து வல்லின மெய்யுடன் சேர்ந்த உகரமாக இருந்தாலும் முதல் எழுத்து குறிலாக இருந்தால் குற்றியலுகரம் ஆகாது.

எ-டு : பசு என்பதன் இறுதி உகரம் குற்றியலுகரம் அன்று.

குற்றியலுகரத்தை ஆறு வகையாகப் பிரித்துக் கூறுவர். அவையாவன.

**குற்றியலிகரம்**

குற்றியலிகரம் = குறுமை + இயல் + ‍ இகரம். குறைந்த ஒலியை உடைய ‘இ’ என்னும் எழுத்து இது அரை மாத்திரை அளவு ஒலிக்கும். ‘‘இ‘‘ என்னும் எழுத்தைத் தனியாக ஒலிக்கும் பொழுது முழுமையாக ஒரு மாத்திரை அளவு ஒலிக்கின்றது.

பட்டு + யாது: பட்டியாது. ‘டி’ என்னும் எழுத்தில் உள்ள இகர ஒலி (ட் + இ) முழுமையாக ஒலிக்கவில்லை. அரை மாத்திரை அளவே ஒலிக்கின்றது. ஆதலின் ‘பட்டியாது’ என்பதில் உள்ள இகரம் குற்றியலிகரமாகும்.

ஒரு குற்றியலுகரச் சொல்லின் முன், யா என்னும் எழுத்தை முதலாக உடைய சொல் வந்து சேரும்பொழுது அக்குற்றியலுகரச் சொல்லின் இறுதியில் உள்ள உகரம் இகரமாக மாறும். இதுவே குற்றியலிகரம் எனப்படும். இதற்குக் கால அளவு அரை மாத்திரை ஆகும். மேலும் ‘மியா என்னும் அசைச்சொல் வருமொழியாக வந்தால் அதில் உள்ள இகரமும் (ம் + இ =மி) ஒலி குறைந்து, குற்றியலிகரம் ஆகும்.

**எடுத்துக்காட்டு**

வீடு + யாது? – வீடியாது

எ∴கு + யாது? – எ∴கியாது?

உலகு + யாது? – உலகியாது?

பட்டு + யாது? – பட்டியாது?

பந்து + யாது? – பந்தியாது?

சால்பு + யாது? – சால்பியாது?

கேள் + மியா? – கேண்மியா

**தொழிற்பெயர்**

ஒரு தொழிலை உணர்த்தும் பெயர் தொழிற்பெயர் எனப்படும். தொழில் என்பது இங்கு ஒரு பொருளின் புடைபெயர்ச்சியைக் குறிக்கும்.

காலை எழுந்தவுடன் படிப்பு

மாலை முழுவதும் விளையாட்டு

என்கிற இத்தொடர்களில் உள்ள படிப்பு, விளையாட்டு தொழில்களைக் குறிக்கும் சொற்கள்.

எ.டு. பொறுத்தல் தலை

பொறுத்தல் என்பதில் ‘பொறு’ என்பது முதலிலும் ‘தல்’ என்பது இறுதியிலும் அமைந்துள்ளன. முதலில் உள்ளதை முதனிலை அல்லது பகுதி என்றும் இறுதியில் உள்ளதை இறுதிநிலை அல்லது விகுதி என்றும் கூறலாம். பொறுத்தல் என்பது ‘தல்’ என்னும் விகுதி பெற்ற தொழிற்பெயராகும். தொழிற்பெயர் விகுதிகள் பலவாகும். தொழிற்பெயர் விகுதிகளும் எடுத்துக்காட்டுகளும் கீழே தரப்பெற்றுள்ளன.

| வ.எண் | விகுதி | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| 1 | தல் | நடத்தல் |
| 2 | அல் | பாடல் |
| 3 | அம் | ஆட்டம் |
| 4 | ஐ | கொலை |
| 5 | கை | தொழுகை |
| 6 | வை | பார்வை |
| 7 | பு | நடப்பு |
| 8 | வு | வரவு |
| 9 | தி | மறதி |
| 10 | சி | வளர்ச்சி |
| 11 | வி | உதவி |
| 12 | உள் | கடவுள் |
| 13 | காடு | சாக்காடு |
| 14 | பாடு | கோட்பாடு |
| 15 | அரவு | தோற்றரவு |
| 16 | ஆனை | வாரானை |
| 17 | மை | கொல்லாமை |
| 18 | து | பாய்ந்து |

**வினையாலணையும் பெயர்**

குமரன் படித்தான். படித்தவன் தேர்ச்சி பெற்றான். இவற்றுள் குமரன் என்பது பெயர்ச்சொல் படித்தான் என்பது வினைச்சொல். படித்தவன் என்பது சொல்லா? வினைச்சொல்லா? படித்தவன் என்பது எழுவாயாக இருப்பதால் பெயர்ச்சொல்லின்

தன்மையும் பெற்றுள்ளது. படித்தல் என்னும் தொழிலையும் இறந்த காலத்தையும் காட்டுவதால் வினைச்சொல்லின் தன்மையும் பெற்றுள்ளது.

எனவே ‘படித்தவன்’ என்னும் சொல், வினையின் தன்மையும் பெயரின் தன்மையும் அமைந்த சொல் ஆகும். இவ்வாறு வருவதே வினையால் அணையும் பெயர் என்று குறிப்பிடப்படும்.

ஒரு வினைமுற்று, பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்றும் ஏற்காமலும் வேறொரு பயனிலையைக் கொண்டு முடிவது வினையாலணையும் பெயர் எனப்படும். அது. தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூன்று இடங்களிலும் மூன்று காலங்களிலும் உணர்த்தி வரும்.

**எடுத்துக்காட்டு**

அகழ்வாரைத் தாங்கும் நிலம் (அகழ்வாரை வினையாலணையும் பெயர்)

இகழ்வார்ப் பொறுத்தல் தலை (இகழ்வார் வினையாலணையும் பெயர்)

| வ.எண் | தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|---|
| 1 | நடித்தல் | நடித்தவன் |
| 2 | எழுதுதல் | எழுதினவன் |
| 3 | உண்டல் | உண்டவன் |
| 4 | படித்தல் | படித்தவன் |
| 5 | நோன்பு | நோற்பார் |
| 6 | சேர்தல் | சேர்ந்தார் |
| 7 | வாழ்தல் | வாழ்வார் |

**வினையாலணையும் பெயர்**

தொழிற் பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகள்

| | | |
|---|---|---|
| 1 | தொழிலை மட்டும் உணர்த்தும் | தொழிலையும் தொழில் செய்த பொருளையும் உணர்த்தும் |
| 2 | படர்க்கை இடத்தில் மட்டும் வரும் | மூன்று இடங்களிலும் வரும் |
| 3 | பெரும்பாலும் காலம் காட்டாது பொறுத்தல் | காலம் காட்டும் பொறுத்தார் |

**1. தெரிநிலை வினைமுற்று**

செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்னும் ஆறினையும் வெளிப்படையாகத் தெரிவிக்கும் வினைமுற்று தெரிநிலை வினைமுற்று எனப்படும்.

எ.டு. மங்கை, கூடத்தில் அரிசிமாக்கோலம் அமைத்தனள்.

மங்கை, இல்லத்தில் யாழ் எடுத்துத் தமிழிசை பாடினாள்.

**2. குறிப்பு வினைமுற்று**

செய்பவனையும் திணை பால்களையும் வெளிப்படையாகக் காட்டிக் காலத்தைக் குறிப்பாக உணர்த்தும் வினைமுற்று, இவ்வினைமுற்று குறிப்பு வினைமுற்று எனப்படும். இவ்வினைமுற்று பொருள், இடம் முதலான அடிப்படையில் தோன்றும்.

எ.டு. பொன்னினன், புறத்தினன், ஆதிரையான் செங்கண்ணன், கரியன். இன்சொல்லன்.

**3. உடன்பாடு வினைமுற்றுகள் மற்றும் 4. எதிமறை வினைமுற்றுகள்**

செயல் நிகழ்வைக் குறிக்கும் வினைமுற்று உடன்பாட்டு வினைமுற்று எனப்படும்.

செயல் நிகழாமையைக் குறிக்கும் வினைமுற்று எதிர்மறை வினைமுற்று எனப்படும்.

எ.டு. நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்

நாண் துறவார் நாணாள் பவர்.

பெருங்குணத்தார்ச் சேர்மின்

பிறர் பொருள் விரும்பான்

துறப்பார்,சேர்மின் – உடன்பாடு.

துறவார். விரும்பான் – எதிர்மறை

**4. ஏவல் வினைமுற்று**

முன்னிலை இடத்தில் கட்டளைப் பொருளில் எதிர்காலம் காட்டி வரும் வினைமுற்று ஏவல் வினைமுற்று எனப்படும். இது ஒருமை, பன்மை உணர்த்தும்.

எ.டு. வாராய, பாரீர்

குறிப்பு: ஏவல் ஒருமை வினைமுற்றுகள் இ, ஐ, ஆய் என்னும் விகுதிகளைப் பெறும். ஏவல் பன்மை வினைமுற்றுகள் இர், ஈர்,மின்,உம் என்னும் விகுதிகளைப் பெறும்.

எ.டு. வருதி, செல்வாய் – ஏவல் ஒருமை

வருவீர், வம்மின், வாரும் – ஏவல் பன்மை

**ஒருபொருட் பன்மொழி**

ஒரு பொருள் தரும் இரண்டு சொற்கள் சேர்ந்து வந்து பொருட்சிறப்பைத் தருவது ஒரு பொருட் பன்மொழி எனப்படும்.

**எ.டு. உயர்ந்தோங்கு மலை**

உயர்ந்து, ஓங்கு என்னும் இரு சொற்களும் ஏறக்குறயை ஒரே பொருளைத் தந்து, 'மிக உயர்ந்த மலை' என்னும் பொருளை உணர்த்துகின்றன. இவ்வாறு ஒரு பொருள் தரும் இரண்டு சொற்கள் சேர்ந்து வருவது ஒரு பொருட் பன்மொழி எனப்படும்.

எ.கா மீமிசை ஞாயிறு

**உரிச்சொல் தொடர்**

இசை, குறிப்பு, பண்பு ஆகியவை நிலைக்களனாக ஒருசொல் ஓரியல்பு உணர்த்தவும் பலவியல்பு உணர்த்தவும் சால, உறு, தவ, நனி, கூர், கழி, உரு, ஏ, மழ, குழ, கதழ், தட, கய, நளி, மாதர், கலி, வியன், நாம, பே, வய, துய, வை, எறுழ், கடி போன்றன வருமாயின் அவை உரிச்சொல் எனப்படும்.

எ.கா. மாநகர், நனிஉண்டான், சாலசிறந்துத

**சொல் உருவாக்கம்**

இரண்டு, மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் ஒன்றிணைந்து ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டு அமைவது சொற்றொடர் எனப்படும்.

**சொற்றொடர் உதாரணம்**

கந்தன் பாடம் படித்தான்.

மாலா விளையாடினாள்.

அம்மா காலை உணவு சமைத்தார்.

தமிழில் வினை இல்லாமலும் சொற்றொடர்கள் அமையும். அவற்றுக்கான உதாரணங்கள் சில கீழே தரப்பட்டுள்ளது.

உதாரணம்

என்னுடைய புத்தகம்.

நமது முதலாளி.

வெள்ளை நிற பூனை.

சொற்றொடர் அமைப்பு

சொற்றொடர் ஒன்றிலே காணப்பட வேண்டிய முக்கியமான விடயங்கள் பல காணப்படுகின்றன. அவற்றில் சிலவற்றை நோக்குவோம்.

எழுவாய் பயனிலை செயப்படுபொருள் இங்கே அறிந்து கொள்ளுங்கள்.

**எழுவாய்**

எழுவாய் என்பது ஒரு வசனத்தில் செயலை காட்டும் சொல் மீது ‘‘யார், எது, எவை அல்லது யாவர்’’ என வினவும்போது கிடைக்கும் பதில் எழுவாயாகும்.

**எழுவாய் எடுத்துக்காட்டு**

‘‘சிவா கிரிக்கெட் விளையாடினான்.’’ இந்த வசனத்தில் யார் கிரிக்கெட் விளையாடினான்? என்ற வினாவை எழுப்புகின்ற போது, விடையாக கண்ணன் என்பது கிடைக்கின்றது. எனவே இவ்வசனத்தில் ‘கண்ணன்‘ என்ற சொல் எழுவாயாக காணப்படுகிறது.

‘‘பறவைகள் மரத்தில் இருந்து பறந்தன.’’ என்ற வசனத்தில், எவை பறந்தன? என்ற வினாவை எழுப்புகின்ற போது, விடையாக ‘‘பறவைகள்’’ என்பது கிடைக்கின்றது இதிலிருந்து இவ்வாக்கியத்தில் பறவை என்ற சொல் எழுவாயாக காணப்படுகிறது.

**செயப்படுபொருள்**

செயப்படுபொருள் என்பது ஒரு வசனத்தில் ‘‘யாரை, எதை அல்லது எவற்றை ‘‘என்ற வினாக்களை வினவுகின்ற போது அதற்கு பதிலாக கிடைப்பவை செயற்படுபொருள் எனப்படும். ஒரு எழுவாய்க்கு அருகில் செயப்படுபொருள் எப்போதும் வருகிறது.

**செயப்படுபொருள் எடுத்துக்காட்டு**

‘‘அம்மா பாத்திரங்களை கழுவினார்.’’ என்ற வசனத்தில் அம்மா எதை கழுவினார்? என்ற வினாவை நாம் வினவுகின்ற போது நமக்கு விடையாக ‘‘பாத்திரத்தை’’ என்பது கிடைக்கின்றது. எனவே இந்த வசனத்தில் ‘‘பாத்திரத்தை’’ என்பது செயப்படுபொருளாக கையாளப்பட்டுள்ளது.

‘‘அப்பா மேசைகளை செய்தார்.’’ என்ற வசனத்தில் அப்பா எவற்றை செய்தார்? என்ற வினாவை நாம் வினவுகின்ற போது, நமக்கு விடையாக ‘‘மேசைகளை’’ என்பது கிடைக்கின்றது. எனவே இந்த வசனத்தில் ‘‘மேசைகளை’’ என்பது செயப்படுபொருளாக கையாளப்பட்டுள்ளது

**பயனிலை**

ஒரு வசனத்தின் கருத்து முடிவு பெறும் இடம் பயனிலை எனப்படும். அதாவது ஒரு வினைச்சொல்லானது முற்றுப்பெறும் இடமாகும்.

**பயனிலை எடுத்துக்காட்டு**

‘‘இளமதி பாட்டு பாடினாள்.’’ என்ற வசனத்தில் ‘‘பாட்டு’’ எனும் வினையானது, முற்றுப்பெறும் இடமாக ‘‘பாடினாள்’’என்பது அமைகிறது. எனவே இவ்வசனத்தில் ‘‘பாடினாள்’’ என்பது பயனிலையாக காணப்படுகிறது.

‘‘பானுமதி நடனம் ஆடினாள்.’’ என்ற வசனத்தில் ‘‘நடனம்’’ எனும் வினையானது, முற்றுப்பெறும் இடமாக ‘‘ஆடினாள்’’என்பது அமைகிறது. எனவே இவ்வசனத்தில் ‘‘ஆடினாள்’’ என்பது பயனிலையாக காணப்படுகிறது.

**வாக்கிய வகைகள்**

கருத்து முற்றுப் பெற்ற சொற்றொடர் வாக்கியம் எனப்படும் என்பது மேலே குறிப்பிடப்பட்டது. இவ்வாக்கியங்களைக் கருத்து அடிப்படையிலும் அமைப்பு அடிப்படையிலும் வினை அடிப்படையிலும் வகைப்படுத்தலாம்.

**கருத்து வகை வாக்கியங்கள்**

கருத்து வகையில் வாக்கியங்கள் நான்கு வகைப்படும். அவை:

1) செய்தி வாக்கியம்
2) கட்டளை வாக்கியம்
3) வினா வாக்கியம்
4) உணர்ச்சி வாக்கியம்

செய்தி வாக்கியம் என்பது, கூற வந்த செய்தியைத் தெளிவாகக் கூறுவதாகும்.

(எ.டு) திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார்.

கட்டளைவாக்கியம் என்பது, முன்னால் நிற்பவரை ஒரு செயலைச் செய்ய ஏவுவதாகும்.

(எ.டு) திருக்குறளைப் படி

வினா வாக்கியம் என்பது, ஒருவரிடம் ஒன்றை வினவுவதாக அமைவதாகும்.

(எ.டு.) திருக்குறளை எழுதியவர் யார்?

உணர்ச்சி வாக்கியம் என்பது, வியப்பு, அச்சம் முதலிய உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதாக அமைவதாகும்.

(எ.டு) என்னே ! திருக்குறளின் பொருட் சிறப்பு.

**அமைப்பு வகை வாக்கியங்கள்**

வாக்கியங்களை அமைப்பு வகையில் மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை,

1) தனி வாக்கியம்

2) தொடர் வாக்கியம்

3) கலவை வாக்கியம்

**1) தனி வாக்கியம்**

தனி வாக்கியம் என்பது, ஓர் எழுவாயோ பல எழுவாய்களோ பெற்று ஒரு பயனிலையைக் கொண்டு முடிவதாகும்.

(எ.டு.)

பாரி வந்தான்.

பாரியும் கபிலனும் வந்தனர்.

**2) தொடர் வாக்கியம்**

தொடர் வாக்கியம் என்பது, ஒன்றுக்கு மேற்பட்ட பயனிலைகளைப் பெற்றுவரும் வாக்கியமாகும்.

(எ.டு.) தமிழரசி போட்டியில் பங்கேற்றாள் வெற்றி பெற்றாள் பரிசு பெற்றாள்.

**3) கலவை வாக்கியம்**

கலவை வாக்கியம் என்பது, முற்றுத் தொடராக அமைந்த ஒரு முதன்மை வாக்கியமும் எச்சத் தொடர்களாக அமைந்த பல துணை வாக்கியங்களும் கலந்து வரும் வாக்கியமாகும்.

(எ.டு.) தமிழ் இலக்கியங்களை ஆழ்ந்து கற்று, அதன்வழி நடந்து, வாழ்க்கையில் முன்னேற அனைவரும் முயல வேண்டும்.

**வினை வகை வாக்கியங்கள்**

வாக்கியங்களில் வினைகள், முற்றாகவோ எச்சமாகவோ இடம்பெறுகின்றன. அவ்வினைகளின் அடிப்படையில் அவற்றைப் பெற்று வரும் வாக்கியங்கள் பெயர் பெறுகின்றன. இவ்வாக்கியங்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

1) உடன்பாட்டு வினை / எதிர்மறை வினை வாக்கியங்கள்

2) செய்வினை / செயப்பாட்டு வினை வாக்கியங்கள்

3) தன்வினை / பிறவினை வாக்கியங்கள்

**1) உடன்பாடு / எதிர்மறை வினை வாக்கியங்கள்**

இவ்வகை வாக்கியங்களில் இடம்பெறும் வினைகள் உடன்பாட்டில் உள்ளனவா எதிர்மறையில் உள்ளனவா என்பதைக் கொண்டு இவ்வாக்கியங்கள் பெயர் பெறுகின்றன.

(எ.டு.) உடன்பாட்டு வினை - காந்தியை அனைவரும் அறிவர்.

எதிர்மறை வினை - காந்தியடிகளை அறியாதார் இலர்.

**2) செய்வினை / செயப்பாட்டுவினை வாக்கியங்கள்**

இவ்வகை வாக்கியங்களில் இடம்பெறும் வினைகள் செய்வினைக்கு உரியனவா செயப்பாட்டுக்கு உரியனவா என்பதைக் கொண்டு இவ்வாக்கியங்கள் பெயர்பெறுகின்றன.

(எ.டு.) செய்வினை - பேகன் போர்வை அளித்தான்.

செயப்பாட்டுவினை - பேகனால் போர்வை அளிக்கப்பட்டது.

**3) தன்வினை ∴ பிறவினை வாக்கியங்கள்**

இவ்வகை வாக்கியங்களில் இடம்பெறும் வினைகளை எழுவாயே செய்கிறதா அல்லது தான் வினையாற்றாமல் பிறரை அவ்வினை செய்யத் தூண்டுகிறதா என்பதைக் கொண்டு இவ்வாக்கியங்கள் பெயர் பெறுகின்றன.

(எ.டு.) தன் வினை - பாரி உண்டான்

பிற வினை - பாரி உண்பித்தான்

முதல் வாக்கியத்தில் பாரி என்னும் எழுவாய் உண்ணும் செயலைச் செய்வதால் அது தன்வினை வாக்கியமாகிறது.

இரண்டாம் வாக்கியத்தில் உண்ணும் செயலை வேறு யாரோ செய்ய எழுவாய் துணைசெய்வதாக உள்ளதால் அது பிறவினை வாக்கியமாகிறது.

## தொகைநிலைத் தொடர்

ஓர் எழுத்து தனித்து நின்றோ, பல எழுத்துகள் தொடர்ந்து நின்றோ பொருள் தருவது சொல் எனப்படும். சொற்கள் பல தொடர்ந்து நின்று பொருள் தருவது சொற்றொடர் அல்லது தொடர் எனப்படும். தொடர்களைத் தொகை நிலைத்தொடர், தொகா நிலைத்தொடர் என இருவகைகளாகப் பிரிக்கலாம்.

பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லும், பெயர்ச்சொல்லும் சேரும் தொடரின் இடையில் வேற்றுமை உருபுகளோ, வினை, பண்பு முதலியவற்றின் உருபுகளோ, தொக்கி (மறைந்து) நிற்குமானால் அதனைத் தொகைநிலைத் தொடர் என்று கூறுர். இது சுருக்கமாகத் 'தொகை' என்று அழைக்கப்படுகின்றது.

(எ.கா) பால் குடித்தான்

இச்சொற்றொடர் பாலைக் குடித்தான் என்னும் பொருளை உணர்த்துகிறது. இத்தொடரில் இரண்டு சொற்களுக்கு இடையில் 'ஐ' என்னும் உருபு மறைந்து வந்து பொருளை உணர்த்துகின்றது. எனவே இது தொகைநிலைத் தொடரைச் சார்ந்ததாகும்.

**தொகைநிலைத் தொடர் ஆறு வகைப்படும்.**

1. வேற்றுமைத்தொகை
2. வினைத்தொகை
3. பண்புத்தொகை
4. உவமைத்தொகை
5. உம்மைத்தொகை
6. அன்மொழித்தொகை

### 1. வேற்றுமைத் தொகை

ஒரு தொடரில் வேற்றுமை உருபு மறைந்து வந்து பொருள் உணர்த்துவது வேற்றுமைத் தொகை எனப்படும்.

**எ.கா** கண்ணன் இராமன் பார்த்தான்

இத்தொடரில் கண்ணனை இராமன் பார்த்தான் என விரிந்து நின்று பொருள் உணர்த்துகின்றது. இரு சொற்களுக்கு இடையில் "ஐ" என்னும் வேற்றுமை உருபு மறைந்து வந்து பொருழளை உணர்த்துவதால் இது வேற்றுமைத் தொகை எனப்படும்.

வேற்றுமைத் தொகை **எட்டு வகைப்படும்**. அவை

1. முதல் வேற்றுமை அல்லது எழுவாய் வேற்றுமை எனப்படும்.

2 ஆம் வேற்றுமை அல்லது செயப்படுபொருள் வேற்றுமை எனப்படும்.

3 ஆம் வேற்றுமை அல்லது கருவி வேற்றுமை எனப்படும்.

4 ஆம் வேற்றுமை அல்லது கொடை வேற்றுமை எனப்படும்.

5 ஆம் வேற்றுமை அல்லது நீக்க வேற்றுமை எனப்படும்.

6 ஆம் வேற்றுமை அல்லது கிழமை வேற்றுமை எனப்படும்.

7 ஆம் வேற்றுமை அல்லது இடவேற்றுமை எனப்படும்.

8 ஆம் வேற்றுமை அல்லது விளி வேற்றுமை எனப்படும்.

**வேற்றுமையும் அதன் உருபுகளும்**

| **வ.எ** | **வேற்றுமை** | **உருபுகள்** | **பொருள்** |
|---|---|---|---|
| 1 | முதல் வேற்றுமை | இயல்பு | ................ |
| 2 | இரண்டாம் வேற்றுமை | ஐ | ஆக்கல், அழித்தல், அமைதல், நீத்தல், ஏத்தல், உடைமை |
| 3 | மூன்றாம் வேற்றுமை | ஆல், ஆன், ஒடு, ஓடு | கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி |
| 4 | நான்காம் வேற்றுமை | கு | கோடை, பகை, நேர்ச்சி, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை |
| 5 | ஐந்தாம் வேற்றுமை | இல், இன | நீக்கள், ஒப்பு, எல்லை, ஏது |
| 6 | ஆறாம் வேற்றுமை | அது, ஆது | பண்பு, உறுப்பு, ஒன்றன், கூட்டம், பலவின், நீட்டம் |
| 7 | ஏழாம | இல், கண | பொருள் முதலிய வேற்றுமை ஆறும் தற்கிழமை, பிறகிழமை இரண்டிற்கும் கடனாதலாம். |
| 8 | எட்டாம் வேற்றுமை | ............... | விளித்தல் பொருளில் வரும் (விளித்தல் அழைத்தல்) |

**எ.கா**

| வ. எ | வேற்றுமைத்தொை க | உருபு | தொகா நிலை |
|---|---|---|---|
| 1 | பால் பருகினான | ஐ (2 | பாலை பருகினான் |
| 2 | தலை வணங்கினான | ஆல் (3) | தலையால் வணங்கினான் |
| 3 | வேலன் மகன | கு (4) | வேலனுக்கு மகன் |
| 4 | ஊர் நீங்கினான | இன் (5) | ஊரின் நீங்கினான் |
| 5 | செங்குட்டுவன் சட்டை | அது (6) | செங்குட்டுவனது சட்டை |
| 6 | குகைப்புலி | கண் (7) (அ) இல | குகையில் புலி |

**வினைத்தொகை**

வினைத்தொகை என்பது ஒரு வினைச்சொல்லும் ஒரு பெயர்ச்சொல்லும் இணைந்த கூட்டுச் சொல்லாகும். இதில் முதல் சொல் வினைச் சொல்லாக இருக்கும். இரண்டாவது வரும் சொல் பெயர்ச்சொல்லாக இருக்கும். முதலாவது வரும் வினைச் சொல்லானது மூன்று காலத்தையும் குறிப்பால் உணர்த்தும் சொல்லாக அமையும்.

எடுத்துக்காட்டு

எரிந்த தழல் – இறந்த காலம்

எரிகின்ற தழல் – நிகழ்காலம்

எரியும் தழல் – எதிர்காலம்

**பண்புத்தொகை**

நிறம், வடிவம், சுவை, அளவு முதலானவற்றை உணர்த்தும் பண்புப்பெயருக்கும், அது தழுவி நிற்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையில் ‘‘மை’’ என்னும் பண்பு விகுதியும் ‘ஆகிய, ஆன‘ என்னும் பண்பு உருபுகளும் மறைந்து வருவது பண்புத்தொகை எனப்படும்.

எடுத்துக்காட்டு –

இன்மொழி – இனிமையான மொழி

**உவமைத் தொகை**

உவமைத் தொகை என்பது, இரு சொற்களைக் கொண்ட ஒரு தொகைச்சொல். உவமைக்கும் உவ மேகத்துக்கும் இடையில் ‘‘போல, போன்ற’’ ஆகிய உவம உருபு மறைந்து வந்தால் அது உவமைத்தொகை ஆகும்.

எடுத்துக்காட்டு –

வினை உவமத் தொகை – புலிக் கொற்றன் (புலி போலும் கொற்றன்)

பயன் உவமத்தொகை – மழைக்கை (மழை போலும் கை)

மெய் உவமத் தொகை – துடியிடை – (துடி போலும் இடை)

உரு உவமத் தொகை – பொற் சுணங்கு (பொன் போலும் சுணங்கு)

பன்மொழித்தொடர் – மரகதக் கிளிமொழி (மரகதம் போலும் கிளி)

**உம்மைத் தொகை**

இரு சொற்களுக்கு இடையில் இறுதியில் ‘‘உம்’’ எனும் இடைச்சொல் மறைந்து வந்தால் அது உம்மைத்தொகை ஆகும். இரு சொற்களுக்கிடையில் ‘‘உம்’’ சேர்ப்பின் பொருள் சரியாக இருத்தல் வேண்டும்.

எடுத்துக்காட்டு – சேர சோழ பாண்டியர்

இதில் சேரரும், சோழரும், பாண்டியரும் என்று பொருள் தரும்.

**அன்மொழித்தொகை**

வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகியவை அல்லாத சொற்கள் மறைந்து வந்தால் அது அன்மொழித்தொகை ஆகும்.

எடுத்துக்காட்டு

பொற்றொடி வந்தாள் – (தொடி – வளையல்)

பொன்னாலான வளையலை அணிந்த பெண் வந்தாள் என்று பொருள் தரும்.

## தொகாநிலைத் தொடர்கள்

ஒரு தொடர் மொழியில் இரு சொற்கள் இருந்து, அவற்றின் இடையில் சொல்லோ, உருபோ மறையாது பொருளை உணர்த்துவது தொகாநிலைத் தொடர் எனப்படும்.

(எ.கா) மழை பெய்தது

முதல் தொடரில் மழை என்னும் எழுவாயும் பெய்தது என்னும் பயனிலையும் தொடர்ந்து நின்று வேறு சொல் வேண்டாது பொருளை உணர்த்துகின்றன எனவே இது தொகாநிலைத் தொடர் ஆகும்.

(எ.கா) மயில் ஆடியது

அறிவழகன் படித்தான்

போன்றவைகளை எடுத்துக்காட்டுகளாகக் கொள்ளலாம்.

**1.எழுவாய்த் தொடர்**

கந்தன் எழுதினான் – கந்தன் என்கிற ஒருவனையம், அவன் தொடர்ந்து எழுதினான்

என்னும் பயனிலையும் அமைந்துள்ளது.

**2. விளித் தொடர்**

மழையே வா! – மழையை விளிக்கிறது (அழைக்கிறது)

**3. வினைமுற்றுத் தொடர்**

வந்தார் அமைச்சர். வினைமுற்று முதலில் நின்று பெயரைத் தொடர்கிறது.

**4. பெயரெச்சத் தொடர்**

படித்த பாடம் – படித்த என்னும் எச்சவினை பாடம் என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்துள்ளது.

**5. வினையெச்சத் தொடர்**

கூடி மகிழ்ந்தனர் – கூடி என்னும் எச்சவினை மகிழ்ந்தனர் என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்துள்ளது.

**6. வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்**

செய்யுளை எழுதினான் – இத்தொடரில் ‘ஐ’ என்னும் வேற்றுமை உருபு உணர்த்துகிறது.

**7. இடைச்சொல் தொடர்**

மற்றொன்று – மற்று ‸ ஒன்று. இதில் மற்று என்னும் இடைச்சொல்லை அடுத்து ஒன்று என்னும் சொல் நின்று பொருள் தருகிறது.

**8. உரிச்சொல் தொடர்**

சாலச் சிறந்தது – சால என்பது உரிச்சொல். இதைத் தொடர்ந்து சிறந்தது என்னும் சொல் வந்துள்ளது.

**9. அடுக்குத் தொடர்**

**“அசைநிலை பொருள்நிலை இசைநிறைக் கொருசொல்**

**இரண்டு மூன்று நான் கெல்லை முறை அடுக்கும்“ (நன்னூல்.395)**

நன்று நன்று – ஒரே சொல் பல முறை அடுக்கி வந்துள்ளது. ஒரு சொல் விரைவு, வெகுளி, மகிழ்ச்சி, அச்சம், அவலம், உவகை, தெளிவு முதலியன காரணமாக இரண்டு மூன்று, நான்கு முறை அடுக்கி வருவது அடுக்குத்தொடர் எனப்படும். இதனைப் பிரித்தாலும் பொருள் தரும்.

(எ.கா) வாழ்க! வாழ்க! – உவகை

பாம்பு! பாம்பு! – அச்சம்

இரட்டைக்கிளவி தொகாநிலைத் தொடரில் வரவில்லை என்றாலும், அடுக்குத்தொடரைக் கூறும்போது இரட்டைக்கிளவியையும் சொல்லிவிட வேண்டும். அப்போதுதான் இரண்டிற்கும் உள்ள வேற்றுமையை அறிந்து கொள்ள முடியும்.

**இரட்டைக்கிளவி**

**“இரட்டைக் கிளவி இரட்டிற்பிரிந் திசையா“ (நன்னூல்.396)**

பிரிக்கமுடியாத இரட்டைச் சொற்களாய்ச் சேர்ந்து ஒருதன்மைப்பட்டு நின்று வினைக்கு அடைமொழியாய்க் குறிப்புப் பொருள் உணர்த்தி வருவது இரட்டைக்கிளவி ஆகும். (கிளவி – சொல்) இதனைப் பிரித்தால் பொருள் தராது.

(எ.கா) மரக்கிளை சடசட வென முரிந்தது

நீர் சலசல என ஓடிற்று

இங்கு சட என்பதற்கும் சல என்பதற்கும் அர்த்தம் கிடையாது. இச்சொற்கள் பிறச்சொற்களொடு ஒன்றாய்ச் செரும்போதுதான் அதனடைய அர்த்தம் தெளிவாகிறது.

**நிறுத்தக்குறிகள்**

தமிழிலக்கண நூல்களில் கூறப்படாத பகுதி நிறுத்தக் குறியீடுகளாகும். பயன்நோக்கி ஆங்கில மொழியிலிருந்து தழுவிக்கொள்ளப்பட்டவை. ஆங்கில மொழியினால் தமிழ் மொழியில் ஏற்பட்ட புதுமைகளில் குறியீட்டு இலக்கணமும்

ஒன்றெனலாம். கி.பி. 18-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் இந்திய மொழிகள் அனைத்திலும் நிறுத்தக் குறிகள் பயன்படுத்தப்பட்டு வந்தன.

பேசும்போது பொருள் தெளிவுபடுவதற்காகச் சிறுகால இடைவெளிவிட்டுப் பேசுவது வழக்கம். சில இடங்களில் தேவைக்கேற்ப அதிகமான கால இடவெளி தந்தும் சில இடங்களில் குறைந்த அளவு கால இடைவெளி தந்தும் பேசுவது கருத்துப் புலப்பாக்க நெறியாகும். கருத்துப்பரிமாற்றத்தில் தெளிவினை உண்டாக்கவும் சுவை கூட்டவும் ஏற்ற இறக்கம் தந்தோ, கால இடைவெளி தந்தோ மொழியைக் கையாள்கிறோம். பேசுவத போலவே எழுதும் முறையிலும் காலஇடைவெளி தருவதற்குப் பதிலாகச் சில குறியீடுகளைப் பயன்படுத்தி, அவ்விடத்தை நிறைவு செய்கிறோம். படிப்போர் வாக்கியங்களின் பொருளை மாறுபாடின்றி அறிந்துகொள்வதற்கு உதவியாக உரிய இடங்களில் சிற்சில அடையாளங்கள் இடப்பட்டிருக்கும். இவ் அடையாளங்களையே நிறுத்தக்குறிகள் என்கிறோம். நிறுத்தக்குறிகள் உரைநடையிலேயே பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. கவிதைகளில் பெரும்பாலும் பயன்படுத்தப்படுவதில்லை. என்றாலும் பொருள் விளக்கத்திற்காகக் குறியீடுகளையே ஒரு கருவியாகப் பயன்படுத்துவதுண்டு.

பொருள் தெளிவின் காரணத்திற்காகக் குறியீட்டு இலக்கணம் பயன்படுத்தப்படுகிறது. நிறுத்தக் குறியீட்டினைச் சரியான இடமறிந்தும் பொருளறிந்தும் பயன்படுத்த வேண்டும். இல்லையெனில் பொருள் மாறுபாட்டிற்குக் காரணமாய் நிறுத்தக்குறிகளே அமைந்துவிடும்.

**இக்கால உரைநடையில் பயன்பாட்டில் இருக்கும் குறிகளாவன**

| | | |
|---|---|---|
| 1 | காற்புள்ளி | ( இ ) |
| 2 | அரைப்புள்ளி | ( ˙ ) |
| 3 | முக்கால்புள்ளி | ( : ) |
| 4 | முற்றுப்புள்ளி | ( . ) |
| 5 | புள்ளி | ( . ) |
| 6 | முப்புள்ளி | ( . . . ) |
| 7 | கேள்விக்குறி | ( ? ) |
| 8 | உணர்ச்சிக்குறி | ( ! ) |
| 9 | இரட்டைமேற்கோள் குறி | ( “ ” ) |
| 10 | ஒற்றை மேற்கோள் குறி | ( ‘ ’ ) |

மேலே குறிக்கப்பட்டுள்ள நிறுத்தக்குறிகள் உரைநடையில் பயன்படுத்துவதனை இனி விளக்கமாகக் காணலாம். நிறுத்தக்குறிகளைத் தவறாகவோ தேவையின்றியோ பயன்படுத்தும் போக்கினை மாற்றிக்கொள்வதற்கு இவை துணைபுரியும்.

**1. காற்புள்ளி ( , )**

இக்குறிக்கு உறுப்பிசைக்குறி என்ற பெயருண்டு. உச்சிரிப்பில் இதற்கு அரைமாத்திரை அளவு விட்டடிசைக்க வேண்டும்.

- ❖ சொற்களைத் தனித்தனியாக எழுதுவதற்கும், அடுக்கடுக்காக பிரித்தெடுப்பதற்கும் காற்புள்ளி இட்டு எழுத வேண்டும்.

அறம், பொருள், இன்பம், வீடு என்பவை நூற்பயனாகும். கபிலர், பரணர், ஔவையார் போன்றவர்கள் சங்க காலத்தில் வாழந்த புலவர்களாவர்.

- ❖ பெயர்ச்சொற்கள் பல அடுக்கி வந்தால் காற்புள்ளி இட்டு எழுத வேண்டும்.

மா, பலா, வாழை, என்பன முக்கனிகளாகும்.

பெயர்கள் இரட்டித்து அடுக்கடுக்காய் வந்தால் காற்புள்ளி இட்டு எழுத வேண்டும்.

கவிலபரணர், காய்கனிகள், தாய்தந்தையர்

ஒரே எழுவாயைக்கொண்டு முடியும் வினைமுற்றுச் சொற்களுக்குப் பின்னர் காற்புள்ளி இட்டு எழுத வேண்டும்.

நான் உங்கள் நாடகத்தைப் பார்த்தேன். இரசித்தேன், சுவைத்தேன், உரேமாதிரியான பெயர்ச்சொற்களுக்கிடையில் காற்புள்ளி இட்டு எழுத வேண்டும்.

இப்பூவுலகில் நிற, இன, மத வேறுபாடுகள் இல்லை.

- ❖ ஒரே வினைச்சொற்களைக் கொண்டு வரும் சொற்களுக்குப் பின்னரும் காற்புள்ளி இட்டு எழுத வேண்டும்.

அவளது சொற்கள் இனிமையாக, மகிழ்ச்சியாக இரசிக்கும்படியாக அமைந்திருந்தன.

- ❖ அதனால், இதனால் ஆகையால், ஏனெனில், ஏனென்றால், ஆகவே, எனவே இவ்வாறாக, எடுத்துக்காட்டாக, பிறகு, பின்னர், மேலும், முடிவாக, முதலில், பின்பு என்னும் வாக்கியங்களிடையே தொடர்பு ஏற்படுத்தப் பயன்படும் சொற்களுக்குப் பின்னர் காற்புள்ளி இட்டு எழுத வேண்டும்.

நான் நேற்று கல்லூரிக்கு வரவில்லை. ஏனென்றால், எனக்கு உடல் நலமில்லை.

நல்ல சொற்களையே நாளும் பேசிப்பழம் வேண்டும் அதனால், நல்ல மொழிப்பயிற்சி உண்டாகும்.

முதலில் திருமணம் அதன் பின்னர், விருந்து.

❖ தொடர்பு படுத்திக் கூறப்படும சொற்களுக்குப் பின்னரும் தொடர்களுக்குப் பின்னரும் எண்களுக்குப் பின்னரும் காற்புள்ளி இட்டு எழுத வேண்டும்.

அவளது தாய், தந்தை, உற்றார், உறவினர் அனைவரும் வந்திருந்தனர்.

**2. அரைப்புள்ளி ( ; )**

ஒரு வாக்கியத்தில் ஒரு எழுவாயானது பல பயனிலைகளைக் கொள்டதாக அமையுமாயின் பயனிலைகளுக்குப் பின்னர் அரைப்புள்ளி இட்டு எழுத வேண்டும்.

மழை இல்லாவிட்டால் நீர் இல்லை; விளைச்சல் இல்லை; அறுவடை இல்லை; உண்பதற்கு உணவும் இல்லை.

❖ ஏனென்றால், ஏனெனில் என்னும் காரணக் கிளவிகளுக்கு முன்னர் பின்னர் அரைப்புள்ளி இட்டு எழுத வேண்டும். இங்குக் காரணம் காட்டப் பயன்படும் சொற்கள் காரணக்கிளவிகள் எனப்பெயர் பெறும்.

அவர்கள் அனைவரையும் வெளியே அனுப்புங்கள்; ஏனென்றால் அவர்களிடம் நுழைவுச்சீட்டு இல்லை.

❖ ஒரு வாக்கியத்தில் பல சிறுசிறு வாக்கியங்கள் இருந்து அவை முழுக்கருத்தையும் தெளிவுபடுத்துமாயின், அவ்வாறு அமைந்த ஒவ்வொரு வாக்கியத்தின் பின்னரும் அரைப்புள்ளி இட்டு எழுத வேண்டும்.

இராமன் சென்றான்; வில்லை எடுத்தான்; நாணை முறித்தான்; ஒடித்தான்.

❖ எதிர்மறையான கருத்துக்களைக் கொண்ட சிறு வாக்கியங்கள் ஒன்றாகச் சேர்ந்த ஒரு முழக் கருத்தை வெளிப்படுத்துமாயின் ஒவ்வொரு வாக்கியத்தின் பின்னரும் அரைப்புள்ளி இட்டு எழுத வேண்டும்.

நிறைகுடம் தளும்பாது; குறைகுடம் கூத்தாடும்.

ஒரே வாக்கியத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட செய்திகளைக் குறிப்பிடும் போது ஒவ்வொரு செய்திக்குப் பின்னர் அரைப்புள்ளி இட்டு எழுத வேண்டும்.

இந்த விழாவிற்கு அழைக்கப்பட்ட மாணவர்கள் மொத்தம், சென்னை 26; திருவள்ளுர் 12; காஞ்சிபுரம் 10 ஆகும்.

சென்ற ஆண்டு நம் கல்லூரியில் பட்டம் பெற்றவர்கள் இளங்கலை: வரலாறு 115; தமிழ் 145; ஆங்கிலம் 78; பொருளியல் 89.

**3. முக்காற்புள்ளி ( : )**

வாக்கியத்தில் கூற வேண்டிய ஒன்றை விவரித்துக் கூறும்போது முக்காற்புள்ளியிட்டு எழுத வேண்டும்.

உண்மைப் பொருள்: அறம், பொருள், இன்பம், வீடு

- ❖ செய்தியை அறிமுகப்படுத்தும் போது என்னவென்றால் ஏனெனில் போன்ற சொற்கள் பயன்தராத போது முக்காற்புள்ளி இட்டு எழுத வேண்டும்.

  நாங்கள் எல்லோரும் வந்துவிட்டோம்: நீங்கள்?

- ❖ விண்ணப்பப் படிவங்களில் தன் விவரங்களாகத் தகவலாளி தம் தகவல்களைப் பதிவு செய்யும் போது முக்காற்புள்ளியிட்டு எழுத வேண்டும்.

  இதுவரை சென்ற நாடுகள் :

  இதுவரை வெளிவந்தவை :

- ❖ தலைப்பாகப் பொதுவாகக் கூறப்படும் செய்திக்கும் அதன் விரிவாகக் கூறப்படும் செய்திகளுக்கும் மன்னர் முக்காற்புள்ளியிட்டு எழுத வேண்டும்.

  படிக்கவேண்டிய நூல்கள் : திருக்குறள், நாலடியார், சிலப்பதிகாரம்.

- ❖ நூல்களின் செய்திகளை எடுத்தாளும் போது முக்காற்புள்ளியிட்டு எழுத வேண்டும்.
- ❖ குறிப்பிட்ட வேண்டிய விவரங்களை வரிசையாகக் கையாளும் போது முக்காற்புள்ளியிட்டு எழுத வேண்டும்.

| | | |
|---|---|---|
| பெயர் | : | ச. கண்ணன் |
| ஊர் | : | சிதம்பரம் |
| தொழில் | : | சிறுவியாபாரம் |

- ❖ ஒருவரை அவருடைய செயல்பாட்டுத் தகவல்களோடு கூறவேண்டிய இடத்தில் முக்காற்புள்ளியிட்டு எழுத வேண்டும்.

| | | |
|---|---|---|
| வாய்ப்பாட்டு | : | செம்மங்குடி சீனிவாச ஐயர் |
| பக்கவாத்தியம் | : | இசைக்கல்லூரி மாணவர்கள் |
| வயலின் | : | நாகராஜன் |

❖ வாக்கியத்தில் ஒரு கருத்தை விளக்குவதற்கு மற்றொர கருத்தும் அதில் இடம்பெறுமாயின் முன்னா் கூறிய கருத்து முடியுமிடத்தில் முக்காற்புள்ளியிட்டு எழுத வேண்டும்.

சிலா் தமது சூழ்நிலையினைப் பற்றிய கவலையின்றி வாழ்வா்: அப்படி இருத்தல் தவறானதாகும்.

**4. முற்றுப்புள்ளி ( . )**

வாக்கியம் நிறைவுபெற்றதனை அறிவிக்கும் குறியாக முற்றுப்புள்ளி பயன்படுத்தப்படுகிறது. ஆதலால், வாக்கியத்தின் இறுதியில் முற்றுப்புள்ளி இட்டு எழுதவேண்டும்.

இராமன் காட்டிடைச் சென்றான்

திருவள்ளுவா் திருக்குறளை இயற்றினாா்.

❖ கட்டளை அல்லது ஏவல் வாக்கியத்தின் இறுதியில் முற்றுப்புள்ளி இட்டு எழுத வேண்டும்.

கடவுளெ, சீக்கரமாக வந்து காப்பாற்று.

கண்டிப்பாக வர வேண்டும்.

❖ மேங்கோளாகக் காட்டப்படும் வாக்கியத்தின் இறுதியில் முற்றுப்புள்ளி இட்டு எழுதவேண்டும்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

❖ ஒரே தொடராகத் தரப்படும் பட்டியல்களின் இறுதியில் முற்றுப்புள்ளி இட்டு எழுதவேண்டும்.

இன்று செய்யவேண்டிய நான்கு கடமைகளாவன. 1. காலையில் கல்லூரி செல்லுதல், 2. நூலகம் சென்று குறிப்பெடுத்தல், 3. ஆசிரியரைச் சந்தித்தல் 4. மாலை பொதுக்கூட்டத்திற்கு செல்லுதல்.

**5. புள்ளி ( . )**

❖ சுருக்கக் குறியீடாக உள்ள எழுத்தை அடுத்து புள்ளியிட்டு எழுத வேண்டும்.

கி.பி. கி.மு., இ.ஆ.ப., ப.எ.

❖ ஆங்கிலப் பட்டத்திற்குப் பின்னா் புள்ளியிட்டு எழுத வேண்டும்.

பி.ஏ., எம்.ஏ., எம்.லிட்.,

❖ சுருக்கமாகக் குறிப்பிடப்படும் எழுத்துக்களுக்குப் பின்னா் விகுதிகள் சோ்க்கப்படும் போது புள்ளியிட்டு எழுத வேண்டும்.

த.நா.வின் கனமழை

ம.பி.யில் இன்று விடுமுறை

❖ ஒருவரின் பெயருக்கு முன்னரோ அல்லது பின்னரோ வரும் தலைப்பெழுத்துக்களுக்குப் பின்னா் புள்ளியிட்டு எழுத வேண்டும்.

கி.மாசிலாமணி

ப.செந்தில்

❖ எண்ணால் குறிப்பிடப்பெறும் தேதியின் பின்னும் மாதத்தின் பின்னும் புள்ளியிட்டு எழுத வேண்டும்.

08.11.2013 24.19.2017

**7. கேள்விக்குறி ( ? )**

❖ வினா வாக்கியங்களின் இறுதியில் வினாக்குறி இட்டு எழுத வேண்டும்?

இந்தப் பொருளின் விலை என்ன?

❖ ஐயம், நம்பிக்கையின்மை போன்ற பொருள்கொண்ட தொடராக அமையும் போது கேள்விக்குறியிட்டு எழுத வேண்டும்.

இன்னும் சில மாதங்கள் காத்திருக்க வேண்டும்?

❖ வினாக்குறிப்பு அமைந்த முற்றுப்பெறாத வாக்கியத்தின் இறுதியில் கேள்விக்குறியிட்டு எழுத வேண்டும்.

இனி மேல் அவன் வாழ்வு ......?

❖ இக்காலத்தில் வியப்போடுகூடிய ஒன்றைப் பயன்படுத்துமிடத்து கேள்விக்குறியிட்டும், உணா்ச்சிக் குறியிட்டும் பயன்படுத்துகின்றனா்.

இன்று மழை பெய்யும்?

ஏன் சீக்கரம் வந்துவிட்டாய்?

**8. உணா்ச்சிக்குறி ( ! )**

உணா்ச்சியை வெளிப்படுத்த வேண்டிய இடங்களில் உணா்ச்சியை வெளிப்படுத்தும் வாக்கிய முடிவிலோ, சொல்லின் இறுதியிலோ உணா்ச்சிக்குறி இட்டு எழுத வேண்டும்.

எவ்வளவு மக்கள் கூட்டம்!

❖ வியப்பு, மகிழ்ச்சி, இரக்கம், வெறுப்பு, அதிா்ச்சி முதலியன குறித்த உணா்ச்சிச் சொற்கள் வருமிடங்களில் உணா்ச்சிகுறி இட்டு எழுத வேண்டும்.

எவ்வளவு நீண்ட ஆறு ! (வியப்பு)

எல்லா இடங்களிலும் வெற்றி ! வெற்றி ! (மகிழ்ச்சி)

அந்தோ, அவரது நிலை பரிதாபம் ! (இரக்கம்)

சே சே! இது என்ன கொடுமை ! (வெறுப்பு)

அய்யோ, எல்லாமே எரிந்து போச்சா! (அதிர்ச்சி)

❖ உணர்ச்சியை வெளிப்படுத்தும் சொற்களையடுத்து உணர்ச்சிக்குறி இட்டு எழுத வேண்டும்.

சே ! போ !

ஆ ஹா ! சீ !

ஆ ! ஐயோ!

❖ ஒருவரை உணர்ச்சியுடன் வரவேற்கும் போதும், வாழ்த்தும் போதும், சபிக்கும் போதும் உணர்ச்சிக்குறி இட்டு எழுத வேண்டும்.

மாபெருந்தலைவர் அவர்களே, வருக ! வருக ! (வரவேற்பு)

வாழ்க் ! வாழ்க ! நீடு வாழ்க ! (வாழ்த்து)

அவர்கள் கூட்டத்தோடு ஒழிக ! ஒழிக ! (சபித்தல்)

❖ உணர்ச்சியைக் குறிக்கும் சொற்கள் இரட்டித்து வரும் போது அச்சொற்களில் இரண்டாவதாகப் பயின்று வரும் சொல்லுக்குப் பின்னர் உணர்ச்சிக்குறி இட்டு எழுத வேண்டும்.

ஐயோ ஐயோ ! சே சே !

ஆஹா ஆஹா ! ஆ ஆ !

❖ ஒரே சொல்லை இருமுறைக் கூறவேண்டி வந்தால் ஒவ்வொரு சொல்லின் பின்னரும் உணர்ச்சிக்குறி இட்டு எழுத வேண்டும்.

பாம்பு ! பாம்பு ! தீ ! தீ!

❖ உணர்ச்சியுடன் விளிக்கும் விளிச் சொற்களையும் விளித்தொடர்களையும் குறிப்பிடும் போது உணர்ச்சிக் குறி இட்டு எழுத வேண்டும்.

தம்பீ ! அன்பான உடன்பிறப்புக்களே!

❖ வியங்கோள் வினை இரட்டித்து வரும்போது இரண்டாவது சொல்லின் இறுதியில் உணர்ச்சிக்குறி இட்டு எழுத வேண்டும்.

வாழ்க வாழ்க ! வீழ்க வீழ்க !

**9. இரட்டை மேற்கோள்குறி ( “ ” )**

வாக்கியத்தின் இடையில் ஒருவரின் கூற்றை அப்படியே எடுத்தாளும் போது இரணட்டை மேற்றோள் குறியிட்டு எழுத வேண்டும். நோக்கூற்றின் தொடக்கத்திலும் முடிவிலும் இரட்டை மேற்கோள் குறியிட்டு எழுத வேண்டும்.

‘‘அவன் வாங்கிக் கொடுத்துவிட்டான்’’ என்றாள்

அதுபோதும் ‘‘என்று கூறினான்.

❖ அடுத்தவரின் மேற்கோளைக் காட்டும் போது கூற்றின் தொடக்கத்திலும் முடிவிலும் இரட்டை மேற்கோள் குறியிட்டு எழுத வேண்டும்.

‘‘மெய்ப்பொருள் காண்பது அறிவு ‘‘ என்றார் திருவள்ளுவர்.

**10. ஒற்றை மேற்கோள்குறி ( ‘ ’ )**

❖ இரட்டை மேற்கோள் குறிக்குள் வரும் மற்றொருவரின் கூற்றைத் தனித்துக்காட்ட ஒற்றை மேற்கோள் குறியிட்டு எழுத வேண்டும்.

நான் என்ன செய்வது ‘அவர்’ அப்படித்தான் இருக்க வேண்டும் என்று கூறினார் என்றாள்.

❖ பிரித்துககாட்டுவதற்கும் இது பிறருடையது என அறிவித்தற்கும் இற்றை மேற்கோள் குறியிட்டு எழுத வேண்டும்.

‘ச’ ‘ட’ ‘ல’ முதலிய எழுத்துக்குள் மொழிக்கு முதலில் வாரா.

இவ்வுலகத்தில் ‘எதிரி’ என்று எனக்குத் தெரிந்து யாருமில்லை.

❖ பழமொழிகள், இலக்கியத் தொடர்கள், தலைப்பு போன்ற சொல்லாட்சிகளை எடுத்தாளும் போது ஒற்றை மேற்கோள் குறியிட்டு எழுதவேண்டும்.

‘ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா’ என்றான்.

இங்குக் குறிப்பிட்டுள்ள கருத்துக்கள்’வானநூல் சாஸ்திரம்’ என்னும் நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**வினாக்கள்**

**I சிறிய வினாக்கள்**

1. ஓர் எழுத்து ஒருமொழி - விளக்கம் தருக.
2. வாக்கியம் என்றால் என்ன? விளக்கம் தருக.
3. கால்ப்புள்ளி, அரைப்புள்ளி - விளக்கம் தருக.

4. ஒற்றைமேற்கோள், இரட்டை மேற்கோள் சான்றுடன் விளக்குக.

5. வினாக்குறி, உணர்ச்சிக்குறி - விளக்கம் தருக.

### II பெரிய வினாக்கள்

1. ஓர் எழுத்து ஒருமொழி சொற்களைக் கூறி சான்று தந்து விளக்குக.

2. வாக்கியம் என்றால் என்ன? வகைகளைக் கூறி விளக்குக.

3. தொகைநிலைத் தொடர், தொகாநிலைத் தொடர்களை விளக்குக.

4. நிறுத்தற்குறிகளைச் சான்றுடன் விளக்குக.

# அலகு - 5

## எழுத்துக்கள் பிறக்கும் ஒலி உறுப்புகளைக் கூறி எழுத்துக்களை முறையாக ஒலிப்பதற்குப் பயிற்சி கொடுத்தல்

**ண கர, ற கர, ன கரங்கள்**

மூன்று சுழி ண னா, இரண்டு சுழி ன னா, காக்கா மூக்கு ந னா என்றெல்லாம் சொல்லுவதை துண்டு தமிழ் எழுத்துக்களின் வரிசையில் ட பின் வருவது ட ண்ணகரம்; த பின் வருவது தந்நகரம்; ற பின் வருவது றன்னகரம் என்று சுட்டப்படுதல் வேண்டும். இந்த மூன்றும் இடம்மாறி எழுத்து மாறிப் போடப்பட்டால், பெரும் குழப்ப மாகிவிடும். பொருள் வேறுபட்டுச் சிதைவு ஏற்படும். ஆதலின் கவனமாக இவ்வெழுத்துகளைப் பயன்படுத்த வேண்டும்.

பனி - குளிர்ச்சியானது

பணி - பணிந்துபோ, தொண்டு

பதநி - (பதநீர்) உளநி (இளநீர்) - பருகுபவை

அன்னை -தாய்; அண்ணன் - தமையன்; அந்நாள் - அந்த நாள், எந்த இடத்தில் எந்த எழுத்தைப் போட வேண்டும் என்று அறிதல் அவசியம்.

**சொற்றொடர் அமைப்பு**

பத்திரிகையாளரும், வானொலி, தொலைக்காட்சி ஊடகத்தாரும் பள்ளி ஆசிரியர்களும் கவனமாகச் செய்ய வேண்டிய ஒன்று சொற்றொடர் (வாக்கியம்) அமைப்பு. முக்கியமாக ஒருமை பன்மை மயக்கம் சொற்றொடர்களில் இருத்தல் ஆகாது. ஆங்கிலத்தில் ஒருமை பன்மை மயங்க எழுதினால், ஏளனம் செய்கிறோம். இடித்துரைக்கிறோம். தமிழில் மிகத் தாராளமாக இப்பிழையைப் பலரும் செய்கிறார்கள்.

1. பிரேசில் நாட்டில் பெரும்பாலான இடங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளது. (ஒரு செய்தித் தாளில்)
2. பாகிஸ்தான் அரசிடம் இந்தியாவின் கவலைகள் தெரிவிக்கப்பட்டது.

இடங்கள் என்னும் பன்மைச் சொல்லுக்கேற்பச் சூழப்பட்டுள்ளன என்றும், கவலைகள் என்னும் சொல்லுக் கேற்பத் தெரிவிக்கப்பட்டன என்றும் முடிக்க வேண்டும் என்று அறியாதவர்களா? அல்லது அக்கறையின்மையா?

1. ஒவ்வொரு சிலையும் வண்ண வண்ணமாக அழகாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. (ஒரு தொலைக்காட்சிச் செய்தி)

2. இந்த மன்றத்தின் செயற்பாடு ஒவ்வொன்றும் பாராட்டுற்குரியன (ஒரு சிற்றிதழில்)

ஒவ்வொரு சிலையும் எனும் ஒருமைக்கேற்பத் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், செயற்பாடு ஒவ்வொன்றம் எனும் ஒருமைக்கேற்பப் பாராட்டிற்குரியது என்றம் முடித்தல் வேண்டும்.

அர் எனும் பலர்பால் விகுதி கொண்டு முடிய வேண்டிய வாக்கியங்களைச் செய்தி படிப்பவர் சிலர் முழுமையாகப் படிக்காமல், அ∴றிணைப் பன்மை கொண்டு முடிக்கிறார்கள்.

- விழாவில் ஏராளமான மக்கள் கூடியிருந்தன (ர்)
- பலநாட்டுப் பிரதிநிதிகளும் வந்திருந்தன. (ர்) முடிவில் உள்ள 'ர' ஒலியை விழுங்கிவிடுகிறார்கள். கேட்கும் நம் செவியில் அச்செய்தி தேளாய்க் கொட்டுகிறது.

ஒரு கட்டுரையாளர் எழுதியுள்ளார். ஓய்வாக இருக்க முடியாத நிலையில் ஏதாவது வேலைகளைச் செய்து கொண்டிருப்பிர்கள். இந்த வாக்கியத்தில் ஏதாவது என்பது ஒருமை, வேலைகள் என்பது பன்மை, ஏதாவது வேலையைச் செய்து கொண்டிருப்பீர்கள் என்று எழுத வேண்டும்.

பேசும் போதும், எழுதும் போதும் சொற்றொடர்கள் அமைப்பதில், அத்து எனும் சாரியைக்கு ஒரு சிறப்பிடம் உண்டு.

ஒரு திருமடத்தின் தலைவரைக் (அதிபர்) காணப் புலவர் பலர் வந்தனா். இறுதியாக வந்தவர், சோழ நாட்டின் கடைமடைப் பகுதியைச் சார்ந்தவர். மடாதிபதி சற்றே கேலியாக அந்தப் புலவரை நோக்கி, வாரும் கடை மடையரே என்றாா். புவைர் என்னு ஒன்றும் அறியாதவரா? வந்தோம் மடத் தலைவரே என்று திருப்பியடித்தார். இப்படி இருபொருள் தோன்றத் தமிழில் நிரம்பச் சொல்லலாம்.

மடத்தலைவர் என்று சொல்லாமல் மடத்துத் தலைவரே என்று சொல்லியிருந்தால், பொருள் நேராக அமையும். இதற்கு அத்து என்று சாரியை பயன்படுகிறது. சார்ந்து வருவது சாரியை இதற்குத் தனியே பொருள் இல்லை.

மனம் என்பது தனித் தமிழ்ச் சொல். (மனசு, மனது வேறு) இச்சொல்லுடன் இல் உருபு சேர்த்தால், மனத்தில் என்று எழுத வேண்டும். ஏன்? மனம் + அத்து + இல் என்று இடையில் அத்துச் சாரியை சேர்க்க வேண்டும் என்பது இலக்கண விதி.

குளம் + இல் என்பதும் குளத்தில் (குளம் + அத்து + இல்) என்றுதானே சொல்லப்படுகிறது. பணத்தில் பாதி என்று சொல்லுகிறோம். இங்குப் பணம் என்று சொல்லுடன் அத்து சாரியை இணைந்துள்ளது. ஆக, தமிழில் அம் என்று முடியும் பல

சொற்களுடன் அத்துச் சாரியைச் சேர்த்தல் என்பது, வழக்கத்தில் உள்ள இலக்கண விதியே.

இன்னும் வெண்டுமா? குலம் - குலத்தில், நலம் - நலத்தில், இனம் - இனத்தில், வலம் - வலத்தில், இப்படி எல்லாவற்றிலும் இல் உருபு சேர்த்தால், அத்து சேர்வதைப் பார்த்தோம். அத்துச் சாரியை இல் உருபோடு மட்டுமே வருவதா? இல்லை. உடன் எனும் உருபு சேர்த்துப் பாருங்கள். நலம் + உடன் = நலத்துடன், சினம் + உடன் = சினத்துடன் இன்னும் முன் கூறிய பணம், குணம், மனம், மணம் எச்சொல்லோடும் உடன் சேரும்போது, அத்துச் சாரியை தோன்றும். அத்துச் சாரியையின் அசவியத்தை உணர இசை போதும். ‘வாழ்க வளத்துடன்’ என்பதை ‘வாழ்க வளமுடன்’ எனல் பிழை.

**சொற்றொடர் முடித்தல்**

வாக்கியங்களை முடிக்கும் போது ஒருமை, பன்மை மாறாதிருத்தல் வேண்டும் என்பதோடு, ஐம்பால் வினை முடிவுகள் பொருத்தமாக அமைத்தல் வேண்டும்.

**எ.கா.**

அவன் நல்லவன் அல்லன் (ஆண்பால்)

அவள் நல்லவள் அல்லள் (பெண்பால்)

அவர் நல்லவர் அல்லர் (பலர் பால்)

அது நல்லது அன்று (ஒன்றன பால்)

அவை நல்லவை அல்ல (பலவின் பால்)

காலப்போக்கில் இந்த இலக்கணத்தைப் பலரும் பொருட்படுத்துவதில்லை. அல்லது மறந்து போயினர் என்று சொல்லலாம். எல்லா பால், இடங்களிலும் நாம் இப்போது பயன்படுத்தும் ஒரே சொல் அல்ல என்பது மட்டுமே. நானல்ல, அவரல்ல, அதுவல்ல, அவையல்ல என்றுதான் பேசுகிறோம். எழுதுகிறோம்.

இல்லை, அல்ல

இன்மைப் பொருளை உணர்த்த மட்டுமே இல்லை எனும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும் என்பது விதி. புத்தகம் மேசை மீது இல்லை. இது சரியான வாக்கியம் நான் அப்படிப்பட்ட மனிதன் இல்லை. இது பிழையுடைய வாக்கியம். இது நான் அப்படிப்பட்ட மனிதன் அல்லன் என்று இருத்தால் சரியாகும். மரத்தில் காய்கள் இல்லை. வயிற்றுக்குச் சோறு இல்லை என்பன போன்று இன்மைப் பொருளை உணர்த்தவே இல்லை எனும் சொல் பயன்பட வேண்டும். இன்று பள்ளி இல்லை என்பது பிழை. இன்று பள்ளிக்கு விடுமுறை என்பதே சரியானது.

அல்லன், அல்லள் என்பன போல் அல்லை எனும் சொல்லும் உயர்திணைப் பயன்பாட்டில் நம் இலக்கியங்களில் காண முடியும். மந்தரையிடம் கைகேயி உரைக்கின்றாள்.

**“எனக்கு நல்லையும் அல்லை என்மகன் பரதன்**

**தனக்கு நல்லையும் அல்லை தருமமே நோக்கில்**

**உனக்கு நல்லையும் அல்லை’**

**என்று முன்னிலை இடத்தில் வந்து நல்லவள் ஆகமாட்டாய் எனப் பொருள் தந்தது.**

குறைந்த படிப்புடைய வாசகர்களுக்கு மட்டுமல்லாது நிரம்ப் படித்தவர்களும் ஊடகங்களில் பணியாற்றுபவர்களும் அறிய வேண்டும் என்றே, சில நுட்பமான செய்திகளையும் இப்பகுதியில் எழுதி வருகிறோம். நாம் பேச்சு வழக்கிலுள்ள சில எடுத்துக்காட்டுகளைக் காண்போம். அவர்தான் இப்படிச் சொன்னார் இவ்வாக்கியம் அவர்தாம் இப்படிச் சொன்னார் என்றிருத்தல் வேண்டும். அவன்தான், அவர்தாம் அதுதான் அவைதாம் என்பனவற்றை நோக்குக.

**அதுகளுக்கு என்ன தெரியும்?**

இது பற்றியெல்லாம் அதுகளுக்கு என்ன தெரியும்? என்று இயல்பாகப் பேசுகிறோம். அவர்களுக்கு என்ன தெரியும் என்று சரியாகச் சொல்ல வேண்டும். உயர்திணையை அஃறிணையாக்கிப் பின் பன்மையை ஒருமையாக்கும் இரண்டு பிழைகளைத் தவிர்க்க வேண்டும். இந்தச் செயலுக்கு நான் பொறுப்பல்ல என்று முடித்தல் தவறு. நான் பொறுப்பல்லேன் என்று முடித்தல் வெண்டும். பன்மையில் சொன்னால், யாம் (நாம்) பொறுப்பல்லோம் அல்லது பொறுப்பல்லேம் என முடித்தல் வேண்டும்.

அவர் தன் நாட்டிற்காக மிக அரும்பாடுபட்டார். இந்த வாக்கியத்தில் பியையுண்டா? உண்டு. அவர் தம் நாட்டிற்காக என்று திருத்துதல் வேண்டும். அவன், அவள், அது வரும்போது தன் என்றும், அவர் அவை வரும்போது தம் என்றும் இணைப்புச் செய்க. திருவள்ளுவர் தன் திருக்குறளில் சொல்லாத அறம் இல்லை. இவ்வாக்கியத்தில் திருவள்ளுவர் தம் திருக்குறளில் என்று. ஒர சிறிய திருத்தம் செய்தால் பிழையற்றதாகும்.

**பிழையும் திருத்தமும்**

**திருவெற்றியூர்** - சென்னை மாநகரின் வடபகுதியில் அமைந்த திருத்தலம், சுந்தரர் வரலாற்றில் இடம் பெற்றது. இத்தலத்து ஈசனை ‘வழுக்கி வீழினும் நின் திருப்பெயரல்லால் மற்றுநான் அறியேன் மறுமாற்றம்’ எனச் சுந்தரர் பாடி உருகினார்.

திரு ஒற்றியூர் என்பதைத் திருஒற்றியூர் என்று கற்றவர்களும் ஊடகச் செய்தியாளரும் சொல்லும் போது மனம் வருந்துகிறது.

**மயிலாப்பூர்** - மயில் தொடர்புடைய தலபுராணம் கொண்ட மயிலாப்பூரும் பாடல் பெற்ற திருத்தலம். திருஞானசம்பந்தார். எலும்பைப் பெண்ணுருவாக்கிய இடம் இது. மயிலா என்பதை மைலா ஆக்கிவிட்டார்கள. மைலாப்பூர் என்று எழுதுவது பெருந்தவறு. மயிலாப்பூர் என்னும் போது ஒலிக்கின்ற மயில் மைலாப்பூர் என்னும் போது ஒளிந்து கொண்டதே.

**பூந்தமல்லி** - பூந்தமல்லி என்று பொது மக்களால் அழைக்கப்படும் ஊரினைக் கற்றவர்கள் பூவிருந்தவல்லி என்று திருத்தமாகச் சொல்லுவதாக எண்ணி மாற்றியுள்ளார்கள். வல்லி எனில்கொடி, பூக்கள் நிரம்பப் பூத்திருந்த கொடி என்று விளக்கம் சொல்லுவார்கள். பூந்தண்மலி - பூக்களில் தண்மை (குளிர்ச்சி) மலிந்திருக்கும் (நிறைந்திருக்கும்) ஊர் என்பதே சரியான பழைய பெயராகும்.

**அமஞ்சிக்கரை** - என்ற ஊரைத் திருத்தமாகச் சொல்லுபவர்கள் அமைந்தகரை என்று குறிப்பார்கள். கரை என்பது ஆற்றுக்கோ, குளதிற்கோ மக்களால் அமைக்கப்படுவது. தானாகக் கரை அமையுமா? அமைந்தகரையோ, அமைக்கப்பட்ட கரையோ எதுவும் அங்கில்லை. அமஞ்சி எனும் சொல் பழைய கல்வெட்டுக்களில் காணப்படுகிறது. இந்நாளில் இலவசம் என்று சொல்வதற்கு நிகரான சொல் இது. கரை என்பது சிற்றூர்ப் பகுதிகளையும் குறிப்பதுண்டு. யாரோ ஒரு வள்ளலால் பணம் பெறாமல் அமஞ்சியாகத் தரப்பட்ட இடமே இது என்று எண்ணத் தோன்றுகிறது.

**ஓர், ஒரு - சிறிய விளக்கம்**

ஆங்கிலத்தில் (a,e,i,o,u) என்னும் ஐந்தும் உயிரெழுத்துகள் எனக் கொண்டு, இவ்வெழுத்துகளுள் ஒன்றை முதலெழுத்தாகக் கொண்ட சொல்லின் முன் ஒன்று என்பதைக் குறிக்க (an) என்று எழுத வேண்டும் (a) போடக் கூடாது என்ற விதி, சிற பிள்ளைகளுக்கும் தெரியம், நம் தாய்த் தமிழிலும் இப்படி ஒரு விதியிருப்பது எத்தனை பேருக்குத் தெரியும்? எத்தனை பேர் இவ்விதியைக் கடைப்பிடித்து எழுதுகிறார்கள்?

தமிழில் பன்னிரண்டு உயிரெழுத்துகள் உள்ளன. (அ) முதல் ஔ முடிய) இவ்வெழுத்துகளுள் ஒன்று ஒரு சொல்லிக் முதலெழுத்தாக வ்நதால், அச்சொல்லின் முன் ஒன்று எனும் எண்ணிக்கையைக் குறிக்க ஓர் பயன்படுத்த வேண்டும். ஓர் அணில், ஓர் இரவு, ஓர் உலகம், ஓர் ஏடு, ஓர் ஐயம் என்று காண்க. உயிரன்றி உயிர்மெய் முதலில் வருமானால் ஒரு சேர்க்க வேண்டும்.

(எ-டு) ஒரு வீடு, ஒரு தோட்டம், ஒரு பள்ளி, இம்முறையை மாற்றி ஓர் வீட்டில் ஒரு அம்மா இருந்தாள் என்று எழுதுவது பிழை. நூலெழுதுவோர். பத்திரிகையாளர்

பலரும் இப்பிழையைப் பொருட்படுத்துவதில்லை. தம்போக்கில் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். ஐயா மாற்றிக் கொள்ளுங்கள் உங்கள் போக்கை.

ஈண்டு இன்னொரு குறிப்பும் கவனத்தில் கொள்ள வேண்டும். அ.்.றிணைப் பெயர்களோடு மட்டுமே இந்த ஓர், ஒரு (தவிர எண்கள் எவையும்) இணைத்தல் வேண்டும். உயர் திணையில் இப்படிப் பயன்படுத்தக் கூடாது. என்ன? விளங்கவில்லையயா?

ஒரு பேராசிரியா் எனல் தவறு, பேராசிரியர் ஒருவர் எனில் சரி. மூன்று பெண்கள் எனல் தவறு. பெண்கள் மூவர் எனல் சரி. பஞ்சபாண்டவர் என்பது வழக்கிலிருப்பினும் பாண்டவர் ஐவர் நூற்றுவர் கன்னர் (சிலம்பு) என்பதே தமிழ் மரபு.

**இலக்கணச் செய்திகள்**

**நேற்று வந்தவன் இன்றும் வந்தான்.**

இத்தொடரில் வந்தவன் என்பது, வினையாலணையும் பெயர். வந்தான் என்பது வினைமுற்று. வருதல் என்பது தொழிற்பெயர், ஒன்றும் புரியவில்லையா? உயர் நிலைப் பள்ளிப் பருவநினைவுகளை மனத்திரையில் ஓடவிடுங்கள் தமிழாசிரியர் இவற்றைப் பற்றி விளக்கியீருப்பாரே.

பெயர்சொல் என்னவென்று உங்களுக்குத் தெரியும். இந்தப் பெயர்ச்சொல்லில் ஆறுவகை தெரியுமோ? எடுத்துக் காட்டுகளை நோக்குக.

ஏடு, எழுதுகோல், உணவு - பொருட்பெயர்

சென்னை, மதுரை, வீடு - இடப்பெயர்

காலை, மாலை, ஆவணி - காலப்பெயர்

இலை, கிளை, கழுத்து - சினைப்பெயர்

செம்மை, பசுமை, நன்மை - பண்புப்பெயர்

ஆடல், பாடல், முயற்சி - தொழிற்பெயர்

ஆகப் பெயர்ச்சொல் பொருள், இடம், காலம், சினை (உறுப்பு), குணம், தொழில் என அறுவகைப்படும். இவற்றுள் தொழிற் பெயர் என்று ஒரு பெயர் வருகிறது. அ.்.து என்ன?

வந்தான் - வினைச்சொல் (வினைமுற்று). இவன், வருதல் ஆகிய வினையைச் செய்தவன். இவனைக் குறிக்க வேண்டுமாயின் வந்தவன் என்போம். இந்த வந்தவன் என்ற சொல். வினையால் அணையும் பெயர். அவன் என்ன செய்தான்? வந்தான் என்னும் போது வினைச்சொல். வருதல் அவன் செய்த தொழிலுக்கு (வினைக்கு)ப்

பெயர். ஆதலின் அது தொழிற் பெயர். ஆக வினைச் சொல் வேறு, தொழில் பெயர் வேறு எனப் புரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்து, வந்தவன் எனும் சொல், வருதல் என்ற தொழிலைக் (வினையைக்) குறிக்காமல், வருதலைச் செய்த ஆளைக் குறிக்கிறது. வருதல் எனும் வினையால் தழுவப் பெற்ற பெயர் ஆதலின். இது வினையாலணையும் பெயராயிற்று.

மீண்டும் எடுத்துக்காட்டுகள் காண்போம்.

பாடினாள் - வினைமுற்று, பாடுதல் - தொழிற்பெயர், பாடியவள் - விளையாலணையும் பெயர்.

ஒரு தொழிலுக்கு (செயலுக்கு)ப் பெயராக வருவது தொழிற் பெயர். அத்தொழிலைச் செய்தவர்க்குப் பெயராக வருவது வினையாலணையும் பெயர், தொழிற் பெயர் காலம் கட்டாது. வினையாலணையும் பெயர் காலம் காட்டும். தொழிற்பெயரில் ஒருமை, பன்மை, பால் (ஆண், பெண், பலர்) பாகுபாடுகள் இரா. வினையாலணையும் பெயரில் இவையுண்டு.

தேடியவன் - ஆண்பால் வினையாலணையும் பெயர்.

நாடியவள் - பெண்பால் வினையாலணையும் பெயர்.

வந்தவர்கள் - பலர்பால் வினையாலணையும் பெயர்.

தேடுதல் - தொழிற்பெயரில் ஒருமை, பன்மை, ஆண், பெண், பலர் எனும் பாகுபாடு காணமுடியாது.

**வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம்**

ஒருவினை (செயல்) முற்றுப்பெற்ற சொல்லாயின் அது வினைமுற்று. (எ.கா) கற்றான், நின்றாள், சென்றார், வந்தது, வந்தன, ஐம்பால் வினைமுற்றுகள் இவை.

இவ்வாறு வினைமுற்றி நில்லாமல் எஞ்சி நிற்பது (முடியாமல் இருப்பது) எச்சம் எனப்படும். முற்றுப் பெறாத ஒருவினைச் சொல். ஒரு பெயரைக் கொண்டு முடியுமானால், அது பெயரெச்சம், படித்த எனும் சொல் முற்றுப் பெறவில்லை. பையன் என்ற பெயர்ச் சொல்லைச் சேர்த்தால், படித்த பையன் என்று முற்றுப் பெறுகிறது. ஆதலின் படித்த என்பது பெயரெச்சம். (படித்த என்ற சொல்லோடு, பையன் என்று பெயர் எஞ்சியுள்ளது) படித்த என்பதைப் படித்து என்று மாற்றினால், அதுவும் முற்றுப் பெறவில்லை. வந்தான் என்றொரு வினைச் சொல்லைச் சேர்த்தால் அது முற்றுப்பெறும். அஃதாவது படித்து வந்தான் என்றாகும். ஆதலின் இது வினை எஞ்சி நின்ற சொல் ஆதலின், வனையெச்சம் எனப்படும். (படித்து என்ற சொல்லுடன் வந்தான் எனும் வினை எஞ்சியுள்ளது) ஓரளவு புரிந்திருக்க வேண்டுமே.

**பழமுதிர் சோலை - பழமுதிர்ச் சோலை?**

முருகனின் ஆறுபடை வீடுகளில் ஓரிடம் பழமுதிர் சோலை. மதுரை அருகில் அழகர்கோவில் மலையில் இருக்கிறது. சென்னை உள்ளிட்ட பல நகரங்களில் பழச்சாறு விற்பனை நிலையங்கள் உள்ளன. அவற்றுக்குப் பெயராகப் பழமுதிர்சோலை என்றும், பழமுதிர்ச்சோலை என்றும் பெயரிட்டுள்ளார்கள். உதிர்த்த (பறித்த) பழங்களைக் கொண்டு சாறு பிழியும் இடங்கள் பழமுதிர்ரோலைகளா? பழம் + உதிர் + சோலை என்றால் பழங்கள் உதிர்கின்ற (கொட்டுகின்ற) சோலை என்று பொருள். பழம் + முதிர் + சோலை என்றால் பழங்கள் முற்றிய (முதிர்ந்த) சோலை என்று பொருள். முற்றினால் தானே பழம்?

இரு தொடர்களில் உள்ள வேறுபாடு எழுத்தில் ஒரு ச் மட்டுமே. பழமுதிர்ச்சோலை என்று வல்லோற்று மிக்கு வந்தால், பழம் முதிர்ந்த சோலை; பழமுதிர்சோலை என்று (ஒற்றுமிகாமல்) இயல்பாக வந்தால், பழம் உதிரும் சோலை என்ற பொருள். இரண்டும் பெரிதும் வேறுபாடு இல்லாத ஒரு பொருளையே சுட்டுகின்றன. ஆனால், பழச்சாறு நிலையங்களுக்கு இந்தப் பெயர் எப்படிப் பொருந்தும்? எல்லாம் ஓர் அழகு (ஈர்ப்புக்காக என்று கொள்வோமே.

**சொல்லருமை**

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்பது தொல்காப்பியர் நூற்பா. தமிழ்ச் சொற்கள் பலவும் அவற்றின் பொருளை உணர்த்தும் அழகு வியக்க வைப்பது. தறி என்பது நெசவு செய்யப் பயன்படும் கருவி. இந்தத் தறியில் நீளமாக நெய்து வேண்டிய அளவில் வெட்டி எடுக்கப்பட்டதே வேட்டி என்பது. வேட்டியிலும் சிறிதாகத் துண்டு செய்யப்பட்டது துண்டு ஆகும். ஆக வேட்டி, துண்டு என்பவை காரணப் பெயர்களாய் அமைதல் காண்க. சில தமிழ்ச் சொற்கள் வட மொழியிலிருந்து வந்தவை போல் தோற்றம் தருவதுண்டு. வேட்டி எனும் சொல்லைச் சிலர் வேஷ்டி என்றனர். இதைப் பார்த்து நுட்பம் தெரியாமல் வேஷ்டி தான் வேட்டியாயிற்று என்றுரைத்தல் பிழை.

கச்சை, கச்சு என்பன, நல்ல தமிழ்ச சொற்கள். கச்சை வரிந்து கட்டிக் கொண்டு புறப்பட்டான் என்று பேசுகிறோம். இடை (இடுப்பு) ஆடைதான் கச்சை. 'நீலக்கச்சை பூவார் ஆடை' என்பது சங்க வரி. கச்சு பெய்கள் மார்பில் கட்டுவது. இக்காலத்து பிரா போன்றது. பழைய புராண வரலாற்றுப் படங்களில் இப்படியொரு ஆடையைக் காணலாகும். 'கச்சணிந்தகொங்கை மாதர் கண்கள் வீச போதினும் அச்சமில்லை அச்ச மில்லை' என்று பாடினார் பாரதியார். 'நச்சை வாயிலே கொணர்ந்து நன்பருட்டு போதினும் அச்சமில்லை அச்சமில்லை' என்று, கச்சைக்கு நச்சை (நஞ்சு - விடம்) எதுகையாக்கிப் பாடினார் மகாகவி.

சொற்றொடர் (வாக்கிய) வகைகள்

வாக்கிய அமைப்பில் கருத்தைப் பொறுத்து ஒரு வகையாகவும், அமைப்பைப் பொறுத்து ஒருவகையாகவும் இரண்டு கூறுகளைக் காண்போம். முதலில் கருத்து வாக்கியம் என்பதுள் அடங்கம் பிரிவுகள் பற்றி அறிவோம்.

**1. ஒரு செய்தியை உணர்த்துவது செய்தி வாக்கியம்.**

**எ.கா**. உழைத்தால் வாழ்வில் உயரலாம்.

சட்டம் ஒழுங்கு சீர்கெட்டால் ஆட்சி நிலைக்காது, ஈண்ட செய்தி - நியூஸ் - அன்று; ஒரு கருத்து எனக் கொள்க.

2. எது பற்றியேனும் யாரிடமேனும வினவுகின்ற வகையில் அமைவது வினா வாக்கியம்.

**எ.கா.** மாநாட்டுக்கு நீ போய் வந்தாயா?

நாளை கல்லூரிக்கு அவர் வருவாரா?

3. நமது விருப்பத்தை - விழைவை - வெளிப்படுத்தும் தன்மை கொண்டது விழைவு வாக்கியம்.

**எ.கா.** வாழிய பாரத் திருநாடு

வாழிய செந்தமிழ் - (வாழ்த்து)

நாளை எமதில்லம் வரு - (வேண்டுகோள்)

உனது சான்றிதழ்களைக் கொண்டு வா - (கட்டளை)

கயவன் அழிக - (ஆற்றாமை -சபித்தல்)

4. நமது உணர்ச்சியைப் புலப்படுத்தும் வண்ணம் அமைவது உணர்ச்சி வாக்கியம்

**எ.கா.** நீயே போன பின், நான் மட்டும் இருந்தென்ன!

முத்துதமிழ்த்துறையில் முறைபோகிய வித்தக வருக!

இப்படி ஒரு குறியீட்டால், இதனை ஆச்சரியக்குறி என்பார்கள். ஆச்சர்யம் வியப்பு. வியப்பு மட்டுமன்று; எத்தகைய உணர்ச்சியை வெளிப்படுத்தினாலும் இக்குறி இடப்படுதலின், இதை உணர்ச்சிக்குறி எனல் தக்கது.

**மீண்டும் சில வாக்கியப் பிழைகள்**

ஓர் அடுக்குமாடிக் குடியிருப்பில் கொள்ளை. இதைக் கேட்டவுடன், அடுக்குமாடி வீடுகளில் ஓரடுக்கு உண்டா? குறைந்தது இரண்டு அடுக்காவது இருக்குமே என்று நினைக்கத் தோன்றியது. ஒரு என்பதை அடுக்கு எனும் சொல்லோடு இணைத்துக் காண்பது இயல்பாக எழும் எண்ணமே. இவ்வாக்கியத்தை, அடுக்குமாடி குடியிருப்பு

ஒன்றில் கொள்ளை என்று எழுதினால், படித்தால் பொருள் உணர்த்துதலில் பிழையின்றி அமையும்.

இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்திருக்கும் போது ஒற்று மிகாது. அவ்வுருபு வெளிப்பட்டிருப்பின் (வேற்றுமை விரி) ஒற்றுமிகும். 'திங்கள் முதல் வெள்ளி வரை நிகழ்ச்சியைக் காணத்தவறாதீர்கள்' இது பெண்மணி ஒருவர் தொலைக்காட்சி நிகழ்ச்சி பற்றி அறிவித்த வாக்கியம், சொற்றொடரில் பிழை இல்லை. உச்சரிப்பில் (ஒலிப்பில்) பிழை. முதல் என்னும சொல்லை முதள் என்று லகரத்தை ளகரமாக உச்சரித்தார். திங்கள், வெள்ளி ளகரம் இருப்பதால், இந்த இடர்ப்பாடு ஏற்பட்டிருக்கலாம். நா நெகிழ் பயிற்சிகள் சிலவற்றால் இக்குறையைப் போக்க முடியும் முயற்சி வேண்டும்.

**எழுத்தும் எழுதுகோலும்**

**அரிவாள் - அறுவாள்?**

அரிதல் என்றால் வெட்டுதல், அறுத்தல் என்று பொருள். அறுத்தல் என்றால் அரிதல், வெட்டுதல் என்று பொருள். ஆதலின் இரண்டு சொல்லும் ஒரு பொருள் குறித்தன என்று கொள்ளலாம்.

கதிர் அறுத்தல் என்று சொல்லுகிறோம். நெல் அறுவடையாயிற்று என்று பேசுகிறோம். அதே சமயம் அரிதாள் என்ற சொல்லும் பயன்பாட்டில் உள்ளது. இது கதிா் அரிந்த பின் எஞ்சியிருக்கும் தாளினைக் குறிக்கும். கதிர் அறுத்தல் என்று கூறும் நாம் அரிதாள் பற்றியும் உரைக்கின்றோம்.

அரிவாள் எனல் சரியா? அறுவாள் எனல் சரியா? எது சரி? அரிதல், வெட்டுதல் இரண்டு சொற்களிடையே ஒரு வேற்றுமை உண்டு. மென்மையாகச் சிறிது சிறிதாக அரிந்து செலலுதல் அரிதல். வாளை ஓங்கி ஒரே வெட்டுப் போடுவது அல்லது ஓர சில வெட்டுகளில் துண்டிப்பது வெட்டு.

கொலை வெறியன் அறுவாள் கொண்டு தலையை வெட்டுகிறான். நெற்கதிரை அரிவாள் கொண்டு அரிகிறோம். காய்கறி அரிதல், நறுக்குதல்; ஆடு, கோழி முதலியவற்றை வெட்டுதல். இப்படிச் சொன்ன பிறகு ஓரளவு வேற்றுமை புலப்படுகிறதா?

ஆகவே இடம் நோக்கி, நெற்கதிரை அரிவாள் கொண்டு அறுத்தனா் எனவம், ஆட்டை அறவாள் கொண்டு வெட்டினா் என்றும் சொல்லுவோமே. இப்படி ஏன் இடையினம், வல்லினம் எழுத்துக் குழப்பம் என்றால், அதுதான்நம் அருந்தமிழின் பெருமை, கருமை, கரியநிறம் என்று எழுதும் போது இடையினமும் கறுப்பு என்றெழுதும் போது வல்லினமும் வரவேண்டும் என்பது போல் இதனையும் கருதுக.

துணிகள் வெட்டப் பயன்படும் கருவி கத்திரி (கத்திரிக்கோல்) மரத்தை வெட்டப் பயன்படும் கருவி கோடரி (கோடு - கொம்பு, அரி - வெட்டு) மரத்தை அறுக்கப்

பயன்படுவது வாள் (ரம்பம்) இப்படி அரிதல், அறுத்தல், வெட்டுதல் எல்லாம் நுண்ணிய வேறுபாடுகள் உடைய ஒரு பொருட்சொற்கள் என அறிக. மற்றொரு சொல்லும் இந்தப் பட்டியலில் சேர்க்கத் தக்கது. காய்கறி நறுக்குதல் என்போமன்றோ? அந்த நறுக்குதல் தான் அது. சிறுசிறு துண்டு நறுக்கு எனப்படும். நறுக்குத் தெறிததாற்போல் பேசினார் என்னும் சொல் வழக்கும் காண்க.

**எழுதுவதில் எத்தனை இடர்ப்பாடுகள்**

ஒரு வாக்கியத்தைப் பாருங்கள்: ‘‘....அறிஞரின் மரணம் தமிழுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு’’ ‘‘அவரின் இன்னுயிர்த் துணைவியாரின் மறைவும் தமிழன்பர்களின் நெஞ்சங்களைப் புண்ணாக்கி விட்டன’’ அறிஞரின் மரணமும், துணைவியாரின் மரணமும் என்று வாக்கியம் இருந்தால், புண்ணாக்கி விட்டன எனப் பன்மையில் முடிக்கலாம். ஈடுசெய்ய முடியாத இழப்பு என்று முதற்செய்தியை முடித்துவிட்டார். பின்னா் அடுத்த வாக்கியத்தில் மறைவும் என உம் சேர்த்துப் புண்ணாக்கிவிட்டன என்றாா் போலும். மறைவு புண்ணாக்கி விட்டது என்றே அமைதல் வேண்டும்.

**சொற்சிதைவுகள்**

‘‘ஆடைகள், மரங்கள், அரிசி, மீன், புகையிலை, இரப்பர் சப்போட்டா (சாம்பலத்தி) இவை ஏற்றுமதி செய்யப்பட்டன’’. தமிழில் ‘ர’ கரம் சொல்லின் முதலெழுத்தாக வாராது. ஆதலின் இரப்பர் ஏ்னறு எழுதியுள்ளார்கள்; சரியே. ஆனால் தமிழில் இரப்பா் எனில் யாசிப்பவர் என்று பொருள் உண்டு. அதையும் நினைவில் கொள்ள வேண்டும். சப்போட்டா பழம் சாம்பலத்தி என்று அடைப்புக்கள் போட்டிருப்பத நன்று (சாமபல் நிறமுடைய அத்திப்பழம்).

‘பயப்படுவதற்கு அதிகமாக, ஏதுமில்லை’ என்று (டெங்கு காய்ச்சல் பற்றி) ஒருவர் செய்தி வாசித்தார். அதிகமாக என்ற இடத்தில் கால்புள்ளி( ,) போட்டுள்ளேன். அவர் அங்கு நிறுத்தி ஏதுமில்லை என்று தனியாகச் சொன்னார். எப்படி அவர் சொல்லிருக்க வேண்டும்? பயப்படுவதற்கு, அதிகமாக ஏதுமில்லை என்று ‘பயப்படுவதற்கு’ என்ற இடத்தில் சற்றே நிறுத்திப் பின்னர் அதிகமாக ஏதுமில்லை என்று தானே சொல்லிட வேண்டும்.

**புணர்ச்சி விதியா?**

**‘‘அன்னை தமிழில் தன்னை தந்தவர்**

**தென்னைப் போலும் தெளிந்து வந்தவர்’’**

இந்த இரண்டு வரிகளுள் மூன்று ஒற்றுப் பிழைகள். ஒற்றுப்போட வேண்டிய இடங்கள் இரண்டில் ஒற்று இல்லை. போடக்கூடாத இடத்தில் போட்டுள்ளார்.

**“அன்னை தமிழில் தன்னை தந்தவர்**

**தென்னைப் போலும் தெளிந்து வந்தவர்”**

என்றவாறு இவ்வரிகள் இருக்க வேண்டும். தென்னை போலும் இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லொற்று மிகாது.

ஓர் இலக்கிய இதழில் விருந்துபசாரத்தல் மிஞ்சியவர் என்று எழுதியிருந்தார்கள். மிஞ்சிய என்றால் ‘மீதமிருக்கின்ற’ என்ற பொருள். விஞ்சியவர் என்று எழுதிட வேண்டும். விஞ்சிய என்றால் மேலோங்கிய என்று பொருள்.

ய, ர, ழ என்பவை ஈற்றில் வரும் சொற்களோடு வல்லினம், க, ச, த, ப, வந்தான் அவ்வழியில் இயல் பாதலும், வேற்றுமையில் மிகுதலும் நன்னூல் காட்டும் வீதி,

**“ய, ர, ழ முன்னர் கசதப அல்வழி**

**இயல்பும் மிகலும் ஆகும் வேற்றுமை”**

**எ.கா.**

நாய் கடித்தது. இ∴து இயல்புப்புணர்ச்சி. ஆதலின் வல்லொற்று மிகவில்லை.

நாய்க்கடி - இது வேற்றுமைப் புணர்ச்சி நாயால் கடிக்கப்பட்டது. ‘ஆல்’ வேற்றுமை உருபு ஆதலின் வலி மிகுந்தது.

‘மிகலும் இனத்தோடு உறழ்தலும் விதிமேல்’ என்று முன்சொன்ன விதிக்கு மேல் ஒரு விதியை நன்னூல் காட்டுகிறது.

வல்லெழுத்து மிதுதலோடு

அந்த வல்லெழுத்தின் இனமெல்லெழுத்து மிகுதலும் உண்டு

**எ.கா.** பாழ்க்கிணறு - பாழடைந்தகிணறு

பாழ்ங்கிணறு - மேற்காட்டிய பொருளளே க் ங் - இனவெழுத்துகள் (கங.சஞ)

தொல்காப்பியம் என்ன சொல்லுகிறது? ‘ரகார இறுதி யகார இயற்றே (362) வேற்றுமையில் வல்லெழுத்து வந்தால் ரகார ஈறு யகாரம் ஈறுபோல் மிக்கு முடியும். **எ.கா.** தேர்க்கால் (தேரினது கால்)

யகார ஈறு மிகுதலுக்குச் சான்ற நாய்க்கால் (நாயினதுகால்)

‘ழகர இறுதி ரகார ஈற்றே’ (383) முன் போலவே ஈண்டும் வல்லெழுத்து மிகும் (வேற்றுமைப்பொருளில்)

இந்த விதியோடு ‘அக்கு’ இடை சேர்தலும் உண்டு.

தாழ் + கோல் = தாழ்க்கோல் அல்லது தாழக்கோல் (அக்கு) தமிழ் ஏனனும் சொல்லும் இவ்வாறே யாம்.

**எ.கா.** தமிழ் + கூத்து = தமிழ்க்கூத்து, தமிழக்கூத்து

முடிவாக ய், ர், ழ் இறுதியாக வேற்றமையில் க், ச், த், ப் மிகும் என அறிக.

**எழுத்திலும் பேச்சிலும் இப்படியா?**

‘வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து’ என்ற பாரதியின் வரியை ஒருவர் ‘வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து’ என்று பிரித்து அழுத்திச் சொன்னார். எறும்பைத் தின்னும் பிராணியை எறும்புதின்னி எனல் வேண்டும். எறும்புத் தின்னி என ஒற்று மிகுந்து ஒரு செய்தியேட்டில் எழுதியிருந்தனர். இரண்டாம் வேற்றுமைத் தொகையில் ஒற்று மிகாது.

பின் நாளில் என்று ஓர் இதழில் (தரம் வாய்ந்த ஏடு) எழுதியிருந்தார்கள். பின்னாளில் என்று நிலைமொழிக் கேற்ப வருமொழி மாறிப் புணர்ந்திட வேண்டும்.

**பிறமொழிச் சொற்கள் கலப்பின்றி பேசவும் எழுதவும் பயிற்சி கொடுத்தல்**

1. மூலமொழியைப் பலமுறை படித்து தெரிந்துவைத்துக் கொள்ளல்.

2. விளங்காத தொடர்களையும், சொற்களையும் தனித்தனியே பிரித்தெடுத்து, மீண்டும் மீண்டும் படித்துப் பார்த்து முழுச் கருத்தையும் தெரிந்து கொள்ளுதல்.

3. பிறமொழிச் சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொற்களை அறிதல்

4. வாக்கியத்தை மூலமொழியில் உள்ளவாறே அமைக்காமல் தமிழ் மொழி அமைப்புக்கேற்ற வகையில் அமைத்தல்.

5. மொழிபெயர்க்கும் போது கருத்தைச் சிதைக்காது அமைத்தல்

6. இருமொழிகளிலும் (மூலமொழியிலும், மொழி பெயர்க்கப்படும் மொழியிலும்) நல்ல அறிவும் தேர்ச்சியும் தெளிவும் பெற்றிருத்தல்.

7. மொழி பெயர்க்கப்படும் பகுதியின் உள்ளடக்கத்தை எளிமையாகவும் எல்லோர்க்கும் புரியும்படியாகவும் தெளிவாகவும் அமைத்தல்.

8. வாக்கிய அமைப்பில் சிதைவோ குழப்பமோ ஏற்படாது கவனம் செலுத்துதல்.

9. மூலமொழியின் பொருள்புரியவில்லையெனில் அகராதிகள், கலைக்களஞ்சியம் போன்றவற்றின் துணைகொண்டு பொருள் தேட முற்படலாம். வாக்கியத்திற்கான பொருள்கள் பண்பாட்டின் அடிப்படையிலும் கருத்தியல் அடிப்படையிலும்

சமுதாய அடிப்படையிலும் அமைந்திருக்கும். ஆகவே மொழிபெயர்க்கும் முன்னர் மொழி பெயர்க்கப்படும் மூலமொழியின் சமூக, பொருளாதாரம், அரசியல், சமயம் போன்ற அடிப்படையான செய்திகளை அறிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

10. வார்த்தைக்கு வார்த்தை அப்படியே மொழிபெயர்த்தல் தவறாகும். எழுவாய் பயனிலைகளின் தன்மைகளையறிந்து வாக்கியங்களின் அமைப்பையும் அறிந்து மொழிபெயர்த்தல் வேண்டும். சான்றாக Though Thick and Thin என்பதனை ‘வாழ்விலும் தாழ்விலும்’ என்றும; Hand and Glove என்பதை ‘நகமும் சதையும்’ போல என்றும் எழுதினால் வார்த்தைக்கான பொருள் தெளிவுபெற்று விளங்கும்.

11. திருத்தம் பெற்ற பகுதியை எழுதிவிட்டுப் பின்னர் அவ்வாறு எழுதியதைச் செம்மையான பகுதியாக மாற்றவேண்டும்.

ஆங்கிலத்தில் தமிழில் மொழிபெயர்க்கும் போது வாக்கிய அமைப்பு முறையினைச் சரியாகத் தெரிந்து கொண்டு சரியான முறையில் அமைக்க வேண்டும். சொல்லின் பொருளையும் நன்றாகத் தெரிந்துகொண்டு மொழிபெயர்த்தல் நலம். சான்றாக Photo என்ற சொல் புகைப்படம் எனப்பட்டது. அதிலிருந்து பெறப்படும் பிறசொற்களுக்கான பொருள் எவ்வாறு அமைந்திருக்கிற தென்பதைக் காணலாம்.

| | | |
|---|---|---|
| Photograph | - | ஒளிவரை |
| Photography | - | ஒளி வரையம் |
| Photosynthesis | - | ஒளிச்சேர்கை |
| Photometry | - | ஒளி அளவையம் |

காலந்தோறும் புதிய சொற்கள் உருவாகின்றன. புதிய கண்டுபிடிப்புகளுக்கு ஏற்ப வார்த்தையின் பொருளும் மாறுபடுகின்றன. சான்றாக வுசயபை என்பதற்குப் புகைவண்டி என்று மொழியாகவும் செய்யப்பட்டது. ஆனால் தற்காலத்தில் புகைவண்டி என்ற சொல்லாட்சி பொருந்தாத நிலையில் தொடர்வண்டி என்ற சொல்லாட்சி தற்காலத்தில் பயன்படுத்தப்படுகிறது.

**வலைத்தளங்களில் தமிழ்மொழியின் பயன்பாட்டுத்திறன்**

உலகின் பழமை வாய்ந்த உயர்தனிச் செம்மொழிகள் எட்டில் (கிரேக்கம், இலத்தீன், அரபி, சீனம், ஹீப்ரு, பாரசீகம், தமிழ், சமஸ்கிருதம்) இன்றளவும் மக்களின் பயன்பாட்டில் உள்ள மொழியாக தமிழும் சீனமும் விளங்குகிறது. இன்றைய

உலகமயமாக்கலான காலகட்டத்திலும் வழக்காற்றில் நவீன மொழியாகவும், வரலாற்றில் வளமான மொழியாகவும் வளர்ந்து நிற்கிறது. இன்றைய காலகட்டத்தில் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழோடு கணினித்தமிழ் நான்காம் தமிழாய் வளர்ந்து வருகிறது.

''ஒரு நாட்டின் மொழியை ஏற்றுக்கொள்ளாத கணிப்பொறி அந்நாட்டில் இயங்க முடியாது. கணிப்பொறியை ஏற்றுக்கொள்ளாத ஒரு மொழி வாழ முடியாது என்பது வரலாற்று உண்மையாகிவிட்டது. மேற்கண்ட கூற்று உணமையே. ஏனெனில் இன்றைக்கு கணிப்பொறியை பயன்படுத்தாத துறைகளே இல்லையெனும் அளவிற்கு கணினி வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

கணினியில் தமிழ்மொழியின் பயன்பாட்டிற்கு காரணம் நம் மொழியின் சிறப்பே ஆகும். ஏனெனில் தமிழ்மொழியில் எழுத்தமைப்பு, ஒலியமைப்பு, சொல்லமைப்பு, தொடரமைப்பு ஆகிய எல்லாவற்றிலும் ஒரு கட்டுக்கோப்பு இருக்கிறது. இத்தனை சிறப்பினை பெற்றிருப்பதால் கணினியில் தமிழ் மிகக் குறுகிய காலத்தில் நுழைந்தது.

இதற்குப் பெருமளவில் துணை நிற்பவர்கள் புலம் பெயர்ந்த தமிழர்களேயாவர். நாடு, இனம், மொழி எனக் கடல் கடந்து சென்றாலும் நம் தமிழர்கள் பண்பாடு, மொழி, கலை போன்றவற்றால் தமக்கான அடையாளத்துடன் வாழ்ந்து வருகின்றனர். தமிழகத்தை விட்டுத் தொழில் காரணமாக அயல் நாடுகளுக்குச் சென்ற தமிழர்கள், தமிழைப் பேசவும், கேட்கவும் வழி இல்லாமல் இருந்த நிலையில் இணையம் மூலம் சந்தித்துக்கொள்ள தமிழில் மின்னஞ்சல்களையும், இணைய இதழ்களையும், இணையத் தளங்களையும் பயன்படுத்தினர்.

இதுபோன்ற ஆரம்பகட்ட முயற்சிகளே இன்று இணையத்தமிழ் என்ற துறையை வளர்த்தெடுத்தன. கணிப்பொறி வரலாற்றில் 1975-இல் தனிமனிதக் கணிப்பொறி (ீநசளழயெட ஊழஅிரவநச) கண்டுபிடிக்கப்பட்டதும், உலகம் முழுக்க ஒவ்வொரு நாட்டிலும் தத்தமது மொழியைக் கணினியில் காண ஆர்வம் காட்டினர். இது போன்றே கணிப்பொறியில் தமிழைக் கொண்டு வரும் முயற்சியினை புலம் பெயர் தமிழர்கள் மேற்கொண்டனர். ''தமிழ் எழுத்துருக் குறியாக்க முயற்சிகள் 1980-இன் தொடக்கத்தில் மேற்கொள்ளப்பட்டன.''

உலகம் முழுவதிலும் பல்வேறு தமிழறிஞர்கள் 1984 முதல் 1995 வரை அவரவர்க்கென தனிகுறியீட்டு முறையை அமைத்து எழுத்துருக்கள், விசைப்பலகைகள் அமைத்து தமிழைக் கணினியிலும், இணையத்திலும் ஏற்றம் பெறச் செய்தனர். இணையத்தில் முதல் நிலையாகத் தாங்கள் கண்டுபிடித்த தமிழ் எழுத்துருக்கள்

மூலமாக தமிழில் மின்னஞ்சல் அனுப்பினர். பின்னர் இணைய இதழ்களும், இணையத் தளங்களும் இணையத்தில் உருவாகின.

இத்தகைய குழப்பத்தால் முதல் தமிழ் இணைய இதழ் மற்றும் முதல் இணையத்தளம் எது என்பதில் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன.“1995-ஆம் ஆண்டில் நா. கோவிந்தசாமி “கணியன்” என்கிற பெயரில் நடத்தியதுதான் முதல் தமிழ் இணையத்தளம். இவ்விணையத்திற்கான தகவல்கள் சிங்கப்பூர் மற்றும் சென்னையிலிருந்து தொகுக்கப்பட்டன. இத்தளத்தினை படிக்க ‘கணியன்’ என்ற எழுத்துருவை பயன்படுத்த வேண்டும்.

இணையத்தில் முதல் தமிழ் தளம், இணைய இதழ் குழப்பம் நிலவினாலும் இன்று இணையத்தில் ஆயிரக்கணக்கான தமிழ் தளங்களும், இணைய இதழ்களும் வெளிவருகின்றன. இவற்றில் சங்க இலக்கியம், காப்பியங்கள், பக்தி இலக்கியம், சிறுகதைகள், புதினங்கள், கவிதைகள், திறனாய்வுக் கட்டுரைகள், நூலகம், இணையப் பல்கலைக்கழகம், அகராதிகள், சினிமா போன்ற ஏராளமான தகவல்கள் லட்சக்கணக்கான பக்கங்களைக் கொண்டுள்ளன.

**கடிதம் எழுதுதல்**

கடிதம் எழுதுவது என்பது ஓர் அரிய கலை. அக்கலை மேனாட்டு மொழிகளில் சிறப்பிடம் பெற்று விளங்குகிறது. ஒருவர் தாம் வாழும் காலத்தில் எழுதிய கடிதங்கள் பிற்காலத்தில் இலக்கியமாகப் போற்றும் சிறப்பினைப் பெற்று விளங்குகிறது. அறிஞர்கள், மேலைநாட்டினர், எழத்தாளர்கள் போன்றோர் எழுதிய கடிதங்கள் நூலாக வெளியிடப்பட்டுப் பலராலும் அவை படிக்கப்பட்டு பாராட்டும் பெற்றுவிளங்குகின்றன. சிலப்பதிகாரத்தில் மாதவி கோவலனுக்கு எழுதிய கடிதம் இன்றும்கூட சிறப்பித்துக் கூறப்படுகிறது. காந்தியடிகள் எழுதிய கடிதங்களும், ஜவஹர்லால் நேரு எழுதிய கடிதங்களும் உலக மக்களால் பாராட்டப் பெற்றவை. பழங்காலத்தில் கடிதங்கள் செய்யுள் வடிவிலேயே இயற்றப்பட்டன. இக்காலத்தில் உரைநடையில் பெரும்பாலும் எழுதப்படுகின்றன. தமிழன் சிறுகதை நாவல் போன்ற இலக்கியங்கள் கூடக் கடிதமாக எழுதப்பட்ட வைதான் என்ற வழக்கு உண்டு.

நாம் கடிதங்களைப் பல்விதமான காரணங்களுக்காக எழுதுகிறோம். அதுபோலவே கடிதங்களில் பலவகைகள் உண்டு. கடிதப்பயிற்சி உண்டாவதற்கப் பிற அறிஞர்களுடைய கடிதங்களைப் படித்துப் பயன்பெறுவது அவசியம். ஒவ்வொரு கடிதமும் எழுதுவோரது புலமை, கருத்து வெளிப்பாடு, மொழி நடை ஆகியவற்றை வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருக்கக் காணலாம்.

**கடிதங்களில் அமைய வேண்டிய பொதுத்தன்மைகள்**

1. தலைப்பு (Heading)
2. அனுப்புநர் (Sender)
3. விளி (Greeting or Salutation)
4. செய்தி (Message)
5. உறவுத் தொடர்மொழி (Relativeness)
6. கையெழுத்து (Signature)
7. முகவரி (Address)

முதலான பொதுப்பண்புகளுடன் கடிதங்கள் அமைந்திட வேண்டும்.

**1. தலைப்பு (Heading)**

ஒவ்வொரு கடிதத்திலும் அக்கடிதம் எழுதப்பட்ட இடமும் காலமும் (நாள்) குறித்திட வேண்டும். அவை கடிதத்தின் முற்பக்கத்தின் வலப்புற ஓரத்தில் அமைந்திட வேண்டும்.

23, பவளக்காரத் தெரு,

சென்னை.

14-05-2023

விண்ணப்பங்களிலும் முறையீடுகளிலும் நற்சான்றிதழ்களிலும் கடிதத்தின் இடப்புறத்தின் ஓரத்தில் காலமும் இடமும் குறிக்கப்பட வேண்டும்.

சென்னை.

17-04-2023

**2. அனுப்புநர்** (Sender)

இது செய்தி தொடங்குமுன்னர் யாருக்கு யார் அனுப்புகிறார்களோ அவர்களது பெயர் அல்லது பெயர்கள் போன்றவை குறிக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு தமிழகக் கல்வி அமைச்சர் அவர்களுக்கு, மாநிலக்கல்லூரி மாணவர்கள் விண்ணப்பிப்பது.

நகராட்சி மன்றத் தலைவர் அவர்களுக்கு................ விண்ணப்பித்துக்கொள்வது.

அன்புமகன் செழியனுக்கு உன் தந்தை எழுதுவது.

விண்ணப்பக்கடிதங்கள், வேண்டுகோள் கடிதங்களில் அனுப்புநர் பெயர் முதலிலும் அதன்கீழ் பெறுபவரின் முகவரியும் குறிக்கப்படுதல் உண்டு.

**அனுப்புநர்**

க.செழியன்,

10 -வது குறுக்குத் தெரு,

சாலிகிராமம்,

சென்னை - 22.

**பெறுநர்**

மாவட்ட ஆட்சியர் அவர்கள்

சென்னை மாவட்டம்,

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,

சென்னை - 600 005.

உறவுக்கடிதங்களிலும் வணிகக் கடிதங்களிலும் கடிதம் விடுப்பவர் பெயர் குறிக்கப்படாமல், கடிதம் யாருக்கு அனுப்பப்படுகிறதோ அவர் பெயரை மாத்திரம் குறிப்பிட வேண்டும்.

அருமைத் தம்பிக்கு எழுதுவது,

அன்புள்ள நண்பருக்கு எழுதுவது

திருமிகு சுந்தரனார் அவர்களுக்கு எழுதுவது

### 3. விளி (Greeting or Salutation)

உறவினருக்கு எழுதப்பெறும் போது முறைப் பெயரையே விளித்து (அழைத்து) எழுத வேண்டும். தம்மில் உயர்ந்தோருக்கு எழுதப்பெறும் போது பன்மைப் பெயரால் விளித்து எழுதப்பட வேண்டும்.

மகளுக்கு, தம்பிக்கு, மகனுக்கு,

தந்தையாருக்கு, அன்னையாருக்கு, அண்ணன் அவர்களுக்கு,

தம்மில் இளையோரை அடைமொழி கொடுத்தும் கொடாமலும் அமைத்தெழுதலாம்.

தம்பீ, நண்பா, அன்புள்ள செழியா,

பெரியோரை விளிக்கும் போது மரியாதைப் பன்மை விகுதி கொடுத்து விளித்தல் நமது அன்பினை வெளிப்படுத்துவதாக அமையும்.

ஐயா, அன்பிற்குரிய ஐயா, மதிப்பிக்குரிய அண்ணனுக்கு, அன்பிற்கினிய பேராசியருக்கு. பெரியோருக்கும் தம்மில் மூத்தவர்க்கும், விளியின் அடுத்து வணக்கம் பல என எழுதவேண்டும்.

### 4. செய்தி (Message)

உறவினர்க்கும் நண்பர்க்கும் பழகிய அன்பர்க்கும் விளியை அடுத்து அவரது உடல்நலன் கூறுக.

அன்புள்ள மாமா அவர்களுக்கு,

வணக்கம் பல, நலம், நலமறிய அவா,

அதனையடுத்து நாம் எழுதவந்த செய்தி ஒழுங்குமுறைப்படியும் வாக்கியக் கோர்வையாகவும் பத்திபத்தியாகவும் ஒழுங்கமையுடன் எளிய சொற்களைக் கொண்டமைதல் வேண்டும். வாக்கியப்பிழை கருத்துப்பிழை ஏற்படாமலிக்க நாம் முன்னர் கண்ட இலக்கணத்தெளிவு நமக்கு உதவிபுரியதாய் அமையும்.

### 5. உறவுத் தொடர்மொழி (Relativeness)

கடிதத்தின் இறுதியில் எழுதப்பெறுவது இது. இது கடிதம் எழுதுவோர்க்கும் பெறுவோர்க்கும் உள்ள தொடர்பினை வெளிப்படுத்தும் நோக்கில் அமைந்திருக்கும். இது கடிதத்தின் வலப்புறத்தில் எழுதப்பட வேண்டும்.

தங்கள் அன்புள்ள

தங்கள் உண்மையுள்ள

தங்கள் பணிவுள்ள

தங்களின் கீழ்ப்படிந்த மாணவன்

நண்பர்களிடத்தும் பெரியோர்களிடத்தும் தமக்குள்ள உறவினையும் விருப்பத்தையும் தெரிவிக்கும் வகையில் பின்வருமாறு குறிப்பிடலாம்.

தங்கள் வரவைப் பெரிதும் விரும்பும்,

என்றென்றும் அன்புடன்

அலுவலகக் கடிதங்களிலும் மேல் அதிகாரிகளுக்கு எழுதப்பெறும் போதும் ‘‘தங்கள் உண்மையுள்ள’’ என்றே குறிப்பிட வேண்டும்.

### 6. கையெழுத்து (Signature)

உறவுத்தொடர் மொழிக்குக் கீழாக எழுதியவர் பெயர் கையெழுத்தாக இடப்பட வேண்டும். பெயரினைத் தட்டச்சு மட்டும் செய்த அனுப்புதல் கூடாது. கையெழுத்து

ஒன்றெ அனுப்புபவரது சொந்தக் கருத்தாக அக்கடிதம் அமைந்திருக்கிறது என்பதனை வெளிப்படுத்துவதாக அமையும்.

கையெழுத்திடும் போது தன் பெயரோடு தன் தந்தை பெயரின் முதலெழுத்தையும் முன்னதாகச் சேர்த்து எழுத வேண்டும். கையெழுத்து என்பது எப்போதும் ஒரேமாதிரியாய் அமைய வேண்டும். மாற்றி மாற்றி எழுதுவது குழப்பத்தை ஏற்படுத்தும்.

## 7. முகவரி (Address)

கடித உறையின்மேல் முகவரி எழுதப்பட வேண்டும். மடித்த கடிதத்தின் பின்பக்கத்தில் எழுதப்படுவது. முகவரியின் ஒவ்வொரு வரியும் உறையின் இடது பக்கத்திலிருந்து சற்று வலப்புறமாக எழுதப்பட வேண்டும். முதல்வரியில் முறையாக அடைமொழி, பெயர், பட்டம் என்பன எழுதப்பட வேண்டும். இரண்டாவது வரியில் தொழில் அல்லது வகிக்கும் பதவி, மூன்றாவது வரியில் தொழில் செய்யும் இடம் அல்லது பதவி வகிக்கும் இடம், நான்காவது வரியில் இடப்பெயர் அஞ்சலகக் குறியீட்டு எண்ணடன் குறிக்கப்பட வேண்டும்.

பொதுக்கடிதமாயின் முதல் வரியில் பெறுபவர் பெயரும் அதற்கடுத்த வரியில் வீட்டின் எண்ணும், தெருப்பெயரும், மூன்றாவது வரியில் ஊரின்பெயர் அஞ்சல் குறியீட்டு எண்ணடன் மாவட்டம். நாடு முதலிய செய்திகள் இடம் பெற வேண்டும். முகவரி சரியாகச் சென்ற சேர்வதற்குத் தெளிவாக எழுதும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும்.

### கடிதங்களின் வகைகள்

கடிதங்களில் பலவகைகள் உண்டு. கட்டுரைக்கும் கடிதங்களுக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. கடிதங்களின் வகைகளாவன,

1. உறவுக்கடிதங்கள், நட்புக்கடிதங்கள்
2. வகுப்பாசிரியர், தலைமையாசிரியர், முதல்வருக்கு மாணவர்கள் எழுதும் கடிதங்கள்.
3. வாழ்க்கை வசதிகளைப் பெறவேண்டி உயர் அலுவலர்களுக்கு எழுதும் மடல்கள்
4. செய்தித்தாள், வார, மாத இதழ்களுக்கு எழுதும் கடிதங்கள்.
5. வேலைவாய்ப்பு வேண்டி பல்வகைப்பட்ட நிறுவனங்களுக்கு விண்ணப்பித்து எழுதும் கடிதங்கள்
6. அலுவலக நடைமுறைக்கடிதங்கள்.

இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையினதாக அமைந்திருக்கும்.

**1. உறவுமுறைக்கடிதம்**

உறவினர் மற்றும் நண்பருக்கு எழுதும் கடிதங்கள் இவ்வகையைச் சாரும்.

செல்வவினாயகர் கோவில் தெரு,

திருமயிலை,

11.09.2023

அன்புள்ள தங்கை முல்லைக்கு,

நலம், இக்கடிதத்தில் நாம் நமது சுற்றுக்சூழலைப் பாதுகாத்தலின் அவசியத்தினைப் புலப்படுத்த விரும்புகிறேன். உயிர்களெல்லாம் உரம் மிக்க நல்வாழ்வு வாழ்வதற்கும் நாட்டின் செல்வநிலை வளர்வதற்கும் உற்றதுணை புரியும் ஓர் அரிய பொருளை வெளிக்காட்ட விரும்புகிறேன்.

மக்கள் ஒரு திங்கள் வரை உணவின்றி வாழ்தல் கூடும். நீர் இன்றி சில நாள்கள் வரை வாழ்தல் இயலம். ஆனால் காற்றின்றிக் கணப்பொழுதும் வாழ்தல் அரிது. காற்றே உயிர்; காற்று எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது ஆதலின், உயிர் வாழ்க்கைக்கு ஒரு குறையும் நேராது என நினைக்கத் தோன்றும். காற்று எங்கும் நிறைந்திருப்பதே ஆயினும், சில இடங்களில் பல காரணங்காளால் அது தன் தூய்மையினை இழந்துவிடுகிறது. அத்தகைய தூய்மைக்கேட்டால் காற்று மாசுபட்டு அது சுவாசிக்கத் தகுதியற்றதாகி விடகறிது. ஆனால், தகுதியற்ற நிலையிலுள்ள அக்காற்றை மாசுபடாமல் காப்பதற்குப் பலவழிகள் உள்ளன. அவற்றுள் ஒருவழிதான் மரங்களாகும்.

உயிர்களைக்காக்கும் தன்மைகொண்ட இம்மரங்ள் வாழ மழை தேவை. உணவைத் தரும் பயிர்கள் மழைநீரால் வளருகின்றன. மழை வாவென்றால் வந்து விடாது. மழை பொழிவதற்குக் காடுக்ள இன்றியமையாத உதவிபுரிகின்றன. மழை பொழியத் துணைபுரிவன மரங்களே.

மரங்களின் இம்மாண்பை மறந்துவிட்டமையால் அல்லது மடமைத் தனத்தால் மக்கள் காடுகளை அழிக்க முற்பட்டனர். மரங்களை வெட்டிக் காடுகளை அழித்துவிட்டமையால் நாட்டில் மரங்கள் அற்றுவிட்டன. அதனால் சுத்தமான காற்றை மக்கள் பெறுவதற்கு வழியில்லாமல் போய்விட்டது. மழை வறண்டு போனதால் உலகில் உணவுத்தட்டுப்பாடும் ஏற்படுகிறதெனலாம்.

இவ்வழிநிலை போக்க வீடுகள் தோறும் மரம் வளர்ப்போம். மரங்களால் பலவிதமான பயன்களும் கிடைக்கின்றன. சுவாசிப்பதற்குச் சுத்தமான காற்றும் கிடைக்கிறது. ஒவ்வோராண்டும் சூலைத்திங்கள் 7 ஆம் நாள் மரம்நடு விழா அரசால் கொண்டாடப்படுகிறது.

அரசுகள் மற்றும் தனியாா் தொண்டு நிறுவனங்கள் மரம்நடு விழாவினைத் தொண்டாகச் செய்துவருகின்றன. இதுபோன்ற தொண்டு நிறுவனங்களுக்கு நாமும் நம்மால் முடிந்த வகையில் துணைநின்று மரம் வளர்க்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும். இச்செய்தியினை உனக்கு விளக்கவதற்காகவெ இக்கடிதத்தினை வரைந்துள்ளேன்.

முகவரி

கா.முல்லை, அன்புமாறாத் தமக்கை,

76, காந்தியடிகள் சாலை, **கா.செந்தமிழ்ச்செல்வி,**

திருவாரூர்.

**2. நட்புறைக்கடிதம்**

ஒருவன் தனது கல்வித் தேர்ச்சியைக் குறித்துத் தனது நண்பனுக்கு எழுதுவதாக அமைந்த கடிதம்.

124, கடை வீதி,
விழுப்புரம்,
11.09.2023

அன்புகெழுமிய நண்ப,

நலம்; நலமறி அவா,

நான் எம்.எஸ்.சி தேர்வில் வெற்றி பெற்றுவிட்டேன். இச்செய்தியை முதன் முதலில் உனக்குத் தான் தெரிவிக்கிறேன். என்னுடைய நலவாழ்வில் நீ மிகவும் ஆவல் உடையவன் என்பதை நான் நன்கறிவேன். எனது தேர்ச்சி குறித்து என்னைவிட நீயே அதிக மகிழ்ச்சியடைவாய் என எண்ணுகிறேன்.

இனியும் காலத்தை வீணடிக்காமல் ஏதாவது ஒரு வேலையில் சோந்துவிட வேண்டுமென்று விரும்புகிறேன். தொழிலைச் செய்துகொண்டே மேற்படிப்பு படிக்கலாமெனவும் நினைக்கின்றேன். அந்த வகையில் எனக்கு ஏதாவது ஒர வேலைக்கு நீ தான் ஏற்பாடு செய்ய வேண்டும். சென்னை போன்ற பெருநகரங்கள் எனக்கு அறிமுகமில்லையாதலால், நீயே எனக்கு அனைத்து உதவிகளையும் செய்யவேண்டும்.

இனி, உன் கருத்தையும் எதிர்பார்க்கின்றேன். விரைந்து பதில் கடிதம் கழுதிடுக. உன் குடும்பத்தினா் அனைவரையும் நலம் விசாரித்ததாகக் கூறவும்.

உன் அருமை நண்பன்.
த.மதியழகன்

**கட்டுரை வரைதல்**

மக்கள் தங்கள் கருத்துக்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்வதற்கும் கருத்துப்பரவலுக்கும் மொழிப் பயிற்சி இன்றியமையாததாகிறது. ஆகவே, மொழிக்குத் துணைபுரியும் எழுத்தையும்,சொல்லையும் தெளிவாகத் தெரிந்துகொண்டு மொழிப்பயன்பாட்டைச் சரிவரப் பயன்படுத்தத் தக்கவராய் விளங்குதல் வேண்டும். அதற்குத் துணைபுரிவதே கட்டுரைப் பயிற்சியாகும்.

ஒரு பொருளை பற்றி மனத்திலே எண்ணிய எண்ணங்களை ஒழுங்குபட அமைக்கும் உரைநடைப் பகுதியே கட்டுரை எனப்படும். இவை ஒரு நூல்போன்று அமைந்துவிடாமல் சிறிய அளவில், பொருட்செறிவுடன் அமைதல் வேண்டும். யாவரும் படிக்கக் கூடிய நிலையில் அமைவது முக்கியமாகும். தாம் எழுதும் பொருள் பற்றிய சிந்தனைஓட்டம் தெளிவாகவும் ஆழமாகவும் அமைதல் வேண்டும். அப்படிப்பட்ட கருத்தோட்டமிக்க கட்டுரைகளையே அறிஞர் பெரிதும் மதிப்பர். ஆதலால், கட்டுரையாளர்கள் தங்களது கட்டுரைகளில் எழுத்துப்பிழை, சொற்பிழை, சொற்பிரிப்புப் பிழை, வாக்கியப்பிழை, இலக்கணப்பிழை, கருத்துப்பிழை ஆகியவை ஏற்படா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கட்டுரைகள் பொதுவாகப் பன்முகத் தன்மை கொண்டனவாக விளங்குதலைக் காணலாம். அரசியல் கட்டுரைகள், ஆன்மீகக் கட்டுரைகள், இலக்கியக் கட்டுரைகள், விமர்சனக் கட்டுரைகள், தத்துவக்கட்டுரைகள் எனப் பலநிலைகளில் கட்டுரைகள் வழங்கப்பதுவதுண்டு. பொதுவாகக் கட்டுரைகளின் பயன் படிப்பவர்க்குப் புதிய புதிய கருத்துக்களை வெளிப்படுத்தி, அவர்களது சிந்தனையைத் தூண்டச்செய்வதாய் அமைய வேண்டும்.

கட்டுரை எந்தப் பொருளைக் குறித்து அமைந்தாலும் அதில் அழகிய தொடக்கமும் இனிய முடிவும் சிறப்பாக அமைய வேண்டும். தொடக்கமும் முடிவும் நன்றாக அமையவில்லையானால் அக்கட்டுரை படிப்பவர்க்கு இன்பம் தருவதாய் அமையாது போகும். அதனால் தான் அறிஞர்கள் தங்களது கட்டுரைத் தொடக்கத்திலும் முடிவிலும் மிகுந்த கவனம் செலுத்துவதைக் காணலாம்.

கட்டுரைகளில் பொதுவாகத் தாம் கூறவந்த கருத்தைச் சுருக்கமாகச் சொல்லுதல், விளங்கவைத்தல் நல்ல சொற்களைத் தேர்வுசெய்தல் போன்ற தன்மைகள் கொண்டதாய் இருக்க வேண்டும். திரும்பத்திரும்ப ஒரே சொற்களைப் பெயர்த்தெழுதுதல், சொன்ன கருத்துக்களையே திரும்பத் திரும்பக் கூறுதல், கருத்துக்களை மாற்றி மாற்றிக் கூறுதல், இலக்கணப்பிழை போன்ற குற்றங்களை இடம் பெறாத வகையில் கட்டுரைகளை அமைத்தல் வேண்டும்.

நல்ல கட்டுரைகளை எழுத விரும்புபவர்கள் தாங்கள் எழுதும் கட்டுரை பற்றிய வடிவத்தைத் தங்கள் மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்த வேண்டும் கட்டுரைகளில்

தான் வலியுறுத்த விரும்பும் செய்தி யாது? என்பதனை முன்கூட்டியே முடிவு செய்திட வெண்டும் அக்கருத்தை எவ்விடத்தில் சொல்வது, எப்படிச் சொல்வது, சொல்லவரும் கருத்துக்கு ஆதாரமாகச் சொல்ல வேண்டிய செய்திகள் போன்றவற்றை முன்கூட்டியே வரையறை செய்துகொள்வது அசவியம். மேலும் தரமான கட்டுரைகள் எழுத விரும்புவா்கள் தாம் எழுதவிரும்பும் கட்டுரை தொடா்பான புத்தகங்களையும் அது தொடா்பான செய்திகளையும், பிற கட்டுரைகளையும் நன்றாகப் படிக்க வேண்டும். பின்னரே தாம் எழுதும் கட்டுரையில் எப்பகுதியை முதலில் எழுதுவது, இடையில் எத்னை எழுதுவது, இறுதியில் எதை எழுதுவது என்ற வரையறையுடன் எழுதப்புகுதல் நலம். அவ்வாறு எழுதப்படும் கட்டுரை ஒழுங்கு, தெளிவு, விளக்கம் முதலிய பண்புகளைக் கொண்டதாக அமையும். சிலா் சிந்தனை செய்து முடிவுசெய்து கொள்ளாது கட்டுரை எழுதப்புகுவது தவறான கொள்கையாகும்.

படிக்கும் போது அவற்றிலுள்ள வா்ணனைகள், இலக்கிய நயங்கள், சிறந்த சொல்லாட்சிகள், உயா்ந்த உவமைகள், பழமொழிகள், மரபுத்தொடா்கள் போன்றவற்றைக் குறித்து வைத்துக் கொள்ளுதல் நலம்பயக்கும்.

கட்டுரை உள்ளடக்கத்திலும் உருவ அடக்கத்திலும் சிறந்து விளங்க வேண்டும். பத்திகள், வரிகளின் தொடக்கத்திலிருந்து அமையாமல் சற்று வலந்தள்ளி அமைத்தல் வேண்டும். ஒரு பத்தியில் கூறிய கருத்தை அடுத்த பத்தியிலும் விளக்குதல் தேவையற்றது. ஆனால், பத்திகள் ஒன்றுக்கொன்று தொடா்புடன் விளங்க வேண்டும். பத்திகள் பலவரிகள் அல்லது பல வாக்கியங்கள் கொண்டு அமையவேண்டும் என்பதில்லை. கருத்துக்கள் இரண்டு வரிக்குள்ளேயே முடிவுபெற்றால் அவ்வளவில் அதனை நிறுத்தி அடுத்த பத்தியில் மற்ற கருத்துக்களைக்ட கூறப்புகுதல் வேண்டும்.

**கட்டுரை அமைப்பு**

பொதுவாகக் கட்டுரைகள் முன்னுரை, பொருளுரை, முடிவுரை என்ற மூன்று பகுதிகளைக் கொண்டதாக அமைந்திருக்கும். முன்னுரையானது கட்டுரையின் முகப்புப் பொருளாக வருவது. தாம் சொல்லவரும் கருத்தைக் கோடிட்டுக்காட்டுவது சொல்லவரும் பொருளின் நோக்கத்தை வெளிப்படுத்துவது பொருளுரையானது எடுத்துக்கொண்ட பொருளின் மையப்பகுதியாக விளங்குவது. பொருளுரை தாம் கூறவிரும்பும் கருத்துரைக்கு ஏற்பப் பல பிரிவுகளாக சிறுசிறு உட்தலைப்புக்கள் கொண்டு விளங்கம். கூறப்பட்ட செய்திகளின் தொகுப்பாக முடிபாக அமைவதே முடிவுரையாகும்.

**கட்டுரையில் பொதுவாக அமைய வேண்டுவன**

1. செய்திகளைத் திரட்டுதல்
2. பொருளைப் பகுத்தாய்வு செய்தல்

3. பத்தி பிரித்து அமைத்தல்
4. தலைப்பிடுதல்
5. மேற்கோள் காட்டுதல்
6. நடை
7. நிறுத்தக்குறிகள் பயன்படுத்துதல்
8. எடுத்தாளும் திறன்
9. முறைப்படுத்துதல்
10. கையெழுத்து
11. மொழித்தூய்மை
12. இலக்கணப் பிழைகளை நீக்குதல்
13. வாக்கிய அமைப்புக்கள்
14. இனிய வாக்கியங்களை எடுத்தாளுதல்
16. மீள்பார்வை

போன்ற தன்மைகள் கட்டுரை எழுதப் புகுமுன் சரிபார்க்கப்பட வேண்டியவைகளாகும். இனி இவற்றைத் தனித்தனியே காண்போம்.

**1. செய்திகளைத் திரட்டுதல்**

எழுத விரும்பும் கட்டுரை தொடர்பான செய்திகளைத் திரட்டுதல் முதன்மையான பணியாகும். கட்டுரைக்குத் தேவையான தரவுகள், செய்திகள், விவரங்கள் போன்றவற்றைப் புத்தங்கள் மூலமாகவும் அறிஞர்கள், பெரியோர்கள், ஆசிரியர்கள், கருத்தோடு தொடர்புடையவர்கள் முதலியவர்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாம். செய்திகளை நேரடியாகவும் உரையாடல் வழியாகவும் திரட்ட முடியும். இக்காலத்தில் புத்தங்கள் மட்டுன்றி கலைக்களஞ்சியங்கள், அகராதிகள், இணையம் மூலமாகவும் பெறப்படுகின்றன.

**2. பொருளைப் பகுத்தாய்வு செய்தல்**

கட்டுரை பொருளை எவ்வாறு விளக்க வேண்டும் என்பதனை வகைப்படுத்தியும் தொகுத்தும் பகுத்தாய்வு செய்தல் வேண்டும்.

**3. பத்தி பிரித்து அமைத்தல்**

கூறவரும் கருத்துக்கு ஏற்றவாறு பத்திகள் பிரித்தல் வேண்டும். ஒரு செய்தியையும் அதன் விளக்கத்தையும் ஒரு பத்தியில் விளங்க வேண்டும். பத்திக்கு அடி வரையறையோ, வாக்கிய வரையறையோ தேவையில்லை.

**4. தலைப்பிடுதல்**

கட்டுரைக்குத் தலைப்பிடுதல் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய செய்தியாகும். சொல்லப்படும் கருத்திற்கு ஏற்பவும், பொருளுக்கு ஏற்பவும் தலைப்பு அமைந்திட வேண்டும். தலைப்புப் பொருத்தமே வாசகரின் படிக்கும் ஆவலைத் தூண்டுவதாக அமையும். தலைப்புத் தேர்வு என்பதே கட்டுரையின் பாதி வெற்றியாய் அமைந்துவிடும்.

**5. மேற்கோள் காட்டுதல்**

தாம் எடுத்துக்கொண்ட கருத்தை வலியுறுத்த, தக்க மேற்கோள்களை எடுத்துக்காட்டி நிறுவுதல் நல்லது. அம்மேற்கோள் கட்டுரைப்பொருளை முடிப்பதற்குத் துணை செய்யும் வகையில் அமைதல் வேண்டும். மேற்கோள்களை அதிகமாகப் பயன்படுத்தக்கூடாது. இடத்திற்கு ஏற்ற வகையில் பொருள் விளக்கம் தரும்வகையில் பயன்படுத்த வேண்டும்.

**6. நடை**

கட்டுரையில் நடையழகு மிகவும் இன்றியமையாத உறுப்பாகும். கட்டுரை எழுதுபவா்கள் தங்கள் சொந்த நடையில் கட்டுரை எழுதுவது நலம். இனிமையான வாக்கியங்களுடன் கருத்துச் செறிவுடன் கட்டுரைகள் அமைக்கப் பெற வேண்டும். கட்டுரையின் நடை படிப்போரது கவனத்தை ஈா்க்க வேண்டும்.

**7. நிறுத்தக்குறிகள் பயன்படுத்துதல்**

கட்டுரைகளில் முக்கியமாக அமையவேண்டியது நிறத்தக்குறிப் பயன்பாடு ஆகும். தேவையான இடங்களில் தேவையான குறியீடுகளைப் பயன்படுத்த வேண்டும்.

**8. எடுத்தாளும் திறன்**

தம்முடைய கருத்தை அரண்செய்யப் பிறநூல் கருத்துக்களைத் தகுந்த முறையில் எடுத்தாளுதல் வேண்டும். தருக்க முறையில் நூற்கருத்துக்களை ஏற்றும் மறுத்தும் தம் கருத்துக்களை ஆராய்ந்து கூறுதல் வேண்டும்.

**9. முறைப்படுத்துதல்**

சிந்தித்த அல்லது ஆராய்ந்து கண்ட முடிவுகளை வெளிப்படுத்துவதற்குத் தமது கருத்துக்களை வரிசைப்படி சொல்லவேண்டும். எவற்றை முதலில் கூறுவது எவற்றைப் பின்னா் கூறுவத போன்ற வரிசைமுறையினை முன்னதாகவே தனியாக ஒருநாளில் எழுதி வைத்துக் கொண்டால் கட்டுரை முறைப்படுத்தப்பட்டதாக அமைந்துவிடும்.

**10. கையெழுத்து**

கட்டுரையின் வெளித்தோற்றத்தில் கையெழுத்தும் முக்கிய இடம் பெறுகின்றது. கையெழுத்துச்சீா்மை படிப்போருக்கும் படிக்கும் ஆவலைத் தூண்டும். சீா்மை இல்லாத

கையெழுத்து படிப்பதற்கு மயக்கம் தரும் நிலையில் அமைந்துவிடும் கட்டுரை வெற்றிபெறுவதற்குத் கையெழுத்தும் ஒரு காரணமென்று கூறலாம்.

**11. மொழித்தூய்மை**

கட்டுரையில் மொழித்தூய்மை காக்கப்பட வேண்டும். பிறமொழிச் சொற்களையும் பிறமொழிச் சொற்றொடர்களையும் தவிர்த்து எழுதப்பழகுதல் வேண்டும். கட்டுரை மொழியின் வளத்தைப் பெருக்குவதாய் அமைந்திட வேண்டும். கூடுமானவரை தமிழ்ச்சொற்களையே பயன்படுத்த முயலவேண்டும். தமிழ் போன்ற செம்மொழிகள் பிறமொழித்துணையின்றி தனித்தியங்க வல்லன என்பதை உணர்ந்து தனித்தமிழைப் போற்றும் விதமாக மொழித்தூய்மை காக்கப்பட வேண்டும். தேவைகருதிப் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்த வேண்டி வந்தால் அவற்றை அடைப்புக்குறிக்குள் பயன்படுத்த வேண்டும்.

**12. இலக்கணப் பிழைகளை நீக்குதல்**

கட்டுரையில் முகமுக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்ற இலக்கணப் பிழையின்றி எழுதுதல், வழூஉச்சொற்கள், இழிசொற்கள், வட்டார வழக்குகள், ஒற்றுப்பிழை, தொடர்பிழை, பொருள் மயக்கம் போன்ற பிழைகளையறிந்து தவிர்த்து விடுதல் நன்று.

**13. வாக்கிய அமைப்புக்கள்**

கூறப்படும் கருத்துக்கள் ஒரே வாக்கிய அமைப்பில் அமைத்துவிடாமல் சிறுசிறு வாக்கியங்களாகவும், தொடர் வாக்கியங்களாகவும், கலவை வாக்கியங்களாகவும் அமைத்திடுதல் நலம். கற்போருக்குப் புரியும் வகையில் வாக்கிய அமைப்பில் கவனம் செலுத்த வேண்டும. உணர்ச்சிக்கு ஏற்ப வாக்கியங்களை அமைத்தெழுதலாம்.

**14. இனிய வாக்கியங்களை எடுத்தாளுதல்**

கட்டுரைகள் படிப்பதற்கு இனியவையாய் அமைந்திட உவமைகள், பழமொழிகள், மரபுத் தொடர்கள், இலக்கியத்தின் இனிமையான வரிகள், சான்றோர் பொன்மொழிகள் போன்றவற்றை இடத்திற்கேற்பப் பயன்படுத்தலாம். இவையனைத்தும் தேவைகருதியும் இடத்திற்கேற்றாற் போலும் பயன்படுத்தப்பட வேண்டும்.

**16. மீள்பார்வை**

கட்டுரை எழுதி முடித்தபின்னர் ஒருமுறைக்கு இருமுறை திரும்பத் திரும்பப் படித்துப் பார்க்க வேண்டும். அப்படிச் செய்யும் போது நம்மையறியாமல் நாம் செய்துள்ள பிழைகள் அறிந்தகொள்ள வாய்ப்பெற்படும். தவறுகள் தெரியவரும். அவற்றைத் திருத்திச் செம்மையுறச் செய்வதற்கும் வழியேற்படும்.

## கவிதை எழுதுதல்

தமிழ் மொழியின் செழுமை தமிழ் கவிதை (Tamil Kavithai) சொல்லும். தமிழ் கவிதை (Tamil Kavithai) இனிமையும் எளிமையும் மற்றும் சிறந்த இலக்கண நடை கொண்டவை. தமிழ் கவிதை (Tamil Kavithai) மகிழ்ச்சி, காதல், நட்பு போன்ற பல விடயங்களை பேசும். உலகெங்கிலும் உள்ள தமிழ்ப் பிரியர்களின் இலக்கிய சுவைக் கூட்ட, தாய் மொழியாம் தமிழில் எழுதப்பட்டது

கவிதை என்பது ஓர் இனிய கலை. கவிதை யாத்தல் எல்லோர்க்கும் கைவரா. ஆனால் கவிதை படித்தலும் அதன் சிறப்பை நுகர்தலும் இரசனையுள்ள எவர்க்கும் இயலுமான இன்பமே. இங்கே இரசனை என்பதுதான் முக்கியம். கலையுணர்வு கிஞ்சிற்றேனும் அற்ற கழுதைகளும் (கழுதை என்று மனைவியைத் திட்டிவிட்டு, கழு – அழகிய, தை – பெண்: எனவே அழகிய பெண்ணே என்று தமிழை வளைத்து மனைவியின் தாள்பணிந்த புலவனைப் போலல்லாமல் ) இருக்கத்தான் செய்கிறார்கள்.

இப்போது மட்டுமல்ல எப்போதும் இருந்தார்கள்: இருக்கிறார்கள்: இருப்பார்கள். இவர்களுக்குக் கற்பூர வாசனை தெரியாது என்று விட்டுவிட வேண்டியதுதான்.

பலர் கவிதை எழுதிப் பார்ப்பதுண்டு. சிலர் வெற்றி பெறப் பலர் தோற்றுப் போய் விடுகிறார்கள். ‘நூறு கவிதைகளை வாசித்தால் நூற்றோராவது கவிதையை எழுதிவிட என்னால் முடியும்.’ என்று வீண்பெருமை பேசுபவர்களும் இருக்கிறார்கள். ஆயிரம் கவிதைகளைப் படித்தாலும் அரைக்கவிதைகூட அவர்களுக்கு வராது என்பது செயலில் இறங்கும்போதுதான் புரியும். அதற்காக, அவர்களுடன் பொருதுவதில் என்ன நியாயம் கிடைக்கப் போகிறது?

சிலருக்குக் கவிதை இலகுவாகவே வந்துவிடும். ‘கருவிலேயே திரு’.என்பார்களே அதேபோல! கவிதையை அணுஅணுவாக உடைத்து வைத்துக்கொண்டு மூலக்கூறுகளைப் பிரமிக்கும்படி விளக்க முடிந்த பண்டிதர்களாற்கூட ஒரு கவிதை தானும் எழுதமுடியாமற் போவதும் பரிதாபந்தான்! சிறுமணலில் விரலூன்றி அகரம் எழுதத் தொடங்கும்போதே சிலர் தமிழுடன் இணைந்து விடுகிறார்கள்: சொக்கி விடுகிறார்கள். படிக்கும் ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிலும் சிந்தையைப் பதித்து விடுகிறார்கள். இப்படியானவர்களிடம் பிற்பாடு தமிழாள் பணிந்து போகும்போது வியத்தகு கவிதைகள் பிறக்கின்றன. ஒரு கம்பன், பாரதி, கண்ணதாசன் என்ற அழியாப் புகழ் பெற்று விடுகிறார்கள்.

சிலர், சொற்குவியல்களை வைத்துக் கவிதை என்று பெயரிட்டு விடுவார்கள். ‘இது கவிதையா’ என்று கேட்க எவரையும் அனுமதிக்க மாட்டார்கள். யாராவது மடைத்தனமாகக் கேட்டுவிட்டால், மரபுகளை மீறிய புதுக்கவிதை என்றும், புரட்சிகரச் சிந்தனையின் வெளிப்பாடு என்றும் கூறி, “வெல்வது வேண்டி வெகுண்டுரைக்கும்

நோன்பினர்களாகி'' கேட்டவரைப் படாதபாடு படுத்தி விடுவார்கள். வீட்டிற் போயமர்ந்து 'எனது ஆக்கத்தையும் கவிதை என்று ஏற்கவைத்து விட்டேனே' எனத் தங்கள் சாமர்த்தியத்தைத் தாமே புகழ்ந்து கொள்வார்கள்.

கவித்துவ வீச்சுக்கு மரபுக் கட்டுமானங்கள் தடையாக அமைந்துவிடக் கூடாதே என்று சில விதிகளைப் புரட்சிகரமாக மீறிய தமிழ்வல்லாளார் - மீறுதல்மூலமும் தமிழுக்கு வளம் சேர்த்த பெரியார்கள் - தங்கள் புரட்சிக்குள் ஒளிந்துகொண்டு சிரங்கு சொறியும் இவர்களைக் கண்டு தலை குனிந்து கொள்வதைத் தவிர வேறு வழியேது?

இத்தகைய சிரங்கு சொறிவாளர்களை மனதிலிருத்தித்தான் கவியரசு கண்ணதாசன் ஒரு திரைப்படப் பாடலில் 'அம் மெனும் முன்னே ஆயிரம் பாட்டை அள்ளியள்ளி வீசட்டுமா? அப்போதும் உனக்குப் புரியாதிருந்தால் சொல்லிச் சொல்லி அடிக்கட்டுமா? வல்லினம், மெல்லினம், நல்ல இடையினம் எனும் கம்பையெடுத்து, வெண்பா, விருத்தம் எனும் விதம்விதமான சாட்டை தொடுத்து, நான் போட்டால் தெரியும் போடு, தமிழ்ப் பாட்டால் அடிப்பேன் ஓடு.' என்று எகிறிக் குதித்தாரோ என்னவோ?

அவர் கவியரசு. குதிக்கலாம்: ஓடஓடத் துரத்தலாம். கவியரசு என்று தனக்குத்தானே பட்டம் வைத்துக் கொண்ட எல்லோரும் கவியரசரைப்போல் குதிக்கத்தான் முடியுமா? குதித்தால் தமிழுலகம்தான் ஏற்றுக் கொள்ளுமா?

சிலர் அப்பா அம்மா பார்த்து வைத்த பெயர்களை உதறித்தள்ளிவிட்டு, புதுப்பெயரைச் சூட்டிக்கொள்வது கவிதை எழுதுவதற்கான ஒரு சிறப்பு என்றும் நினைத்துக் கொள்வதுண்டு. ஏதேனும் அடங்காப்பற்றுக் காரணமாகப் பெயர் சூட்டிக் கொள்வாருமுளர். ஆயினும், நின்றசீர் நெடுமாறன் என்று பெயரைச் சூடிக்கொண்டு மூன்றடி உயரமே உள்ள ஒருவர் கவிதை எழுதப்புகுந்தால் பார்ப்பவர் வாய் விட்டுச் சிரியாரோ? சூடிக்கொள்ளும் பெயர் திறமைக்கும் பற்றுக்கும் பொருத்தமாக இருப்பின் உலகம் வியந்து நோக்கும்.

**வினாக்கள்**

**I சிறிய வினாக்கள்**

1. ன, ண - வேறுபாடு தருக.
2. ழ,ள,ல - சொற்களுக்கு சான்று தருக.
3. கட்டுரை என்றால் என்ன? விளக்கம் தருக.
4. கடிதம் என்றால் என்ன? விளக்கம் தருக.

**II பெரிய வினாக்கள்**

1. கட்டுரையின் அமைப்பினை விளக்குக.
2. கடிதங்களின் பண்புகளை விளக்குக.
3. மூக்கொலி எழுத்துக்களைச் சான்றுடன் விளக்குக.
4. தொடர்களை அமைப்பது குறித்து எழுதுக.

**முனைவர் த. ஆதிலெட்சுமி**

தமிழியல் துறை

உதவிப் பேராசிரியர்,

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி,

தொலைபேசி எண்: 9789177719,

EMAIL ID: athipraba1979@gmail.com